# ඉන්දිකාව



සිංහල සංගමය

කලාපය - 2

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

*With Best Wishes*

*&*

*Kind Regards*

*From*

**M. I. M. NALEEM HADJIAR**

**BERUWALA.**

# INQILAAB

**Volume — 2**

**1979 — 80**

(HIJREE 1400)

JAFFNA
715

## THE 2nd ANNUAL OF THE

# MUSLIM MAJLIS

## UNIVERSITY OF JAFFNA
## (Sri Lanka)

**EDITORIAL BOARD**

Co-Editors:

M. M. Faiz
A. C. A. Mohamed Mansoor

Members of the Board:

H. M. Farook
A. Mohamed Hussain
A. L. Nazeera Beevi
A. M. Meera Sahibo
M. R. M. Ziyad

# EXECUTIVE COMMITTEE

| | | |
|---|---|---|
| Patron | : | **Movlavi. K.M.H. Kalideen** B.A. (Hons) |
| Senior Treasurer | : | **Mr. M. A. Nuhman** B. A. (Hons.) B. Phil |
| President | : | **H. M. Farook** |
| Vice President | : | **M. Y. M. Siddeek** |
| General Secretary | : | **A. Mohamed Hussain** |
| Asst. General Secretary | : | **M. T. Ziyad Mohamed** |
| Social Secretary | : | **M. M. Siyan** |
| Junior Treasurer | : | **M. T. M. Jalaldeen** |
| Co—Editors | : | A. **C. A. Mohamed Mansoor**<br>**M. M. Faiz** |
| Committee Members | : | **M. J. M. Zarook**<br>**M. I. M. Sadick**<br>**M. C. Julaina** |

# ஆசியுரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் மிகவும் பாராட்டத்தக்க முயற்சிகளிலே ஈடுபட்டு வருகின்றது. ஈழத்தின் பல பாகங்களையுஞ் சேர்ந்த முஸ்லிம் மாணவர் பயிலும் இப்பல்கலைக்கழகத்தில் அவர்களுடைய முயற்சிகளுக்கு பிறமத மாணவர்களும் ஆர்வத்துடன் உதவி செய்வதைக் காணுமிடத்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அவர்களுடைய முயற்சிகளிலே ஒன்று 'இன்கிலாப்' என்னும் மலர் வெளியீடாகும். இரண்டாவது மலர் இவ்வருடம் மணங் கமழுகின்றது. அம்மலர் சிறப்புற ஆசியுரை வழங்குவதில் நான் பெரு மகிழ்வடைகின்றேன். ஈழத்து முஸ்லிம் எழுத்தாளர்களிடையே நல்ல புதிய எழுத்தாளர்களை உருவாக்கித் தரவும், இந்நாட்டு இஸ்லாமிய இலக்கியத்துக்குப் புதிய ஆக்கங்களைப் படைத்துத் தரவும், மானுக்காகத் தன்னுயிரைத் தானப்பொருளாகத் தர நின்ற நபிகள் நாயகத்தின் நல்ல போதனைகளை நம் மாணவர்களிடையே பரப்பவும் 'இன்கிலாப்' உழைக்க வேண்டுமென அன்புடன் வாழ்த்துகிறேன்.

*பேராசிரியர்*
கலாநிதி, சு. வித்தியானந்தன் அவர்கள்
*துணைவேந்தர்*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,*
*திருநெல்வேலி.*
*3-3-1980*

# தலைவாசல்

அஸ்ஸலாமு அலைக்கும்.

பரீட்சை ஒன்றை எழுதிய திருப்தியுடன் மூச்சு விடுகின்றோம். அதன் பெறுபேற்றைத் தீர்மானிப்பது நீங்களே.

இரண்டு வயதுக் குழந்தையின் சிறுபிள்ளைத்தனங்கள் உங்களின் விமர்சனக் கண்களுக்குத் தோன்றக்கூடும் என்ற உண்மையினை நாங்கள் மனங்கொள்வதோடு உங்களைச் சந்திக்கத் தயாராகின்றோம்.

மகோன்னத ஆற்றல்களையும், பெருஞ் சாதனைகளையும் உலகிற்கு வெளிப்படுத்திவரும் இன்றைய அறிவியல் யுகத்தில் நாங்களும் இதோ சாதித்துவிட்டோம் என்று நெஞ்சை நிமிர்த்திக் கொக்கரிக்காவிட்டாலும், இயன்றளவு முயன்றுள்ளோம் என்ற மனநிறைவு ஏற்படுவதனை உணர்வதனால் ஓரளவு நிம்மதிதான்.

புதுமை என்கின்ற காரணத்தினால் எல்லாவற்றையும் "கபூல்" செய்து கொள்கின்ற குருட்டுத் தனமோ, பழைமை என்கின்ற காரணத்தினால் எல்லாவற்றையும் "தலாக்" செய்து விடுகின்ற முட்டாள் தனமோ அல்லது புதுமைக்கும் பழைமைக்கும் இடையே "புறோக்கர்" வேலை பார்க்கின்ற நிலைமையோ இல்லாமல் எமது சித்தாந்தத்தின் அடித்தளத்தில் நின்று எமக்குச் சரி என்று பட்டதைச் செய்வதும், வளமான இஸ்லாமிய யுகத்தை மீளக் கட்டியெழுப்புவதுமே எமது நோக்கமாகும். இந்தப் பயணத்தில் எந்தளவுக்குப் பிடிவாதமாக நடந்து கொண்டிருக்கிறோம் என்பதை உங்கள் விமர்சன உரைகல்லில் உரைத்துப் பாருங்கள்.

இச் சந்தர்ப்பத்தில் சற்று மனந்திறந்து உங்களுடன் உரையாட விரும்புகின்றோம். ஒன்றுமில்லை. உள் வீட்டு விஷயந்தான். சற்றுக்கூர்மையாக அவதானியுங்கள். இல்லாவிட்டால் அடிமட்டமான அரசியல் கண்ணாடி போட்டோ, அல்லது துவேஷத் திரைக்குப் பின்னால் நின்று பார்ப்பது போன்றேதான் தெரியும்.

இன்று எம்மவரிற் சிலர் "செல்வாக்கு" என்ற ஒரேயொரு 'ஓசி பாஸ்' மூலம் எமது கல்வித் துறையில் ஆதிக்கம் செலுத்த முன் வந்திருப்பது ஈழத்து இஸ்லாமியக் கல்விமான்களுக்கும், புத்திஜீவிகளுக்கும் மொட்டையடிக்கின்ற ஓர் செயலாகும். இந்த ஓசி பாஸ் மூலம் கல்வியுலகில் பிரவேசித்தவர்கள் எவ்வித நுண்ணறிவோ, சமூகத்தைப்பற்றியும், நாட்டின் போக்கினைப்பற்றியும் தீர்க்கதரிசனமான பார்வையோ இல்லாது அறிவு ஜீவிகளின் ஆரோக்கியமான தீர்க்கதரிசனப் பார்வைக்கும், செயற்பாடுகளுக்கும் குந்தகம் விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதில் படுபயங்கரமானது, தேசிய பல்கலைக்கழக அந்தஸ்தில் இருக்கின்ற யாழ் பல்கலைக் கழகத்தில் இனிமேல் முஸ்லிம் மாணவர்களை அனுமதிக்க விடக்கூடாது என்று தீர்மானம் எடுத்து அரசின் அங்கீகாரம் வரை சென்றிருக்கும் சம்பவமாகும். சற்று யோசித்துப் பாருங்கள். ஒரு தேசிய பல்கலைக் கழகத்தில் — அதிலும் உயர் கல்வி

யமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஸ்டான்லி கல்பகே அவர்கள் குறிப்பிட்டதுபோல 25 வருடகாலத்தில் ஏற்படவேண்டிய முன்னேற்றத்தை 5 ஆண்டு காலத்தில் கண்டுவிட்ட ஓர் பல்கலைக் கழகத்தில் — முஸ்லிம் மாணவர்களை அங்கீகரிக்கக்கூடாது என்ற கோரிக்கை எவ்வளவுதூரம் தீர்க்கதரிசனமானது ?, புத்திசாலித்தனமானது ? என்பதை அந்தத் தீர்மானம் எடுத்தவர்கள் ஒரு முறை சுய விமர்சனம் செய்து பார்ப்பார்களாக. சென்ற வருடம் இங்கே முதலாண்டுப் பரீட்சையில் விசேட புள்ளி பெற்றவர்கள் மாற்றம் பெற்று வேறு பல்கலைக் கழகங்களுக்குச் சென்றபோது அங்கு சிறப்புக் கற்கை நெறியை மேற்கொள்ள அனுமதிக்கப்படாததால் மீண்டும் இங்கு வர முயற்சித்துத் தோல்வி கண்டார்கள். அவர்கள் அங்கு சிறப்புக் கற்கை நெறியை மேற் கொள்வதற்கு, இந்த நம் சமுதாயத்தின் கல்வியில்லா இருளைப்போக்க 'டோச்' பிடிக்கின்ற ''வழி காட்டிகள்'' எந்தவித உபகாரத்தையும் செய்யவில்லை — முயலவில்லை. இவ்வாறு அவர்களை நட்டாற்றிற் கைவிட்டது போன்று நம் முஸ்லிம் இளைய தலைமுறைப் புத்திஜீவிகளுக்கும் கொள்ளி வைக்க நினைப்பது எத்தனை சமூகத் துரோகமானது ?

பாரபட்சமின்றிச் சொல்லப் போனல் இங்கு எந்தவொரு முஸ்லிம் மாணவனும் முஸ்லிம் என்ற காரணத்துக்காகப் பாதிக்கப்படவில்லை. எங்களுக்குத் தனிப்பட்ட முறையில் எந்தவித அநீதிகளும் செய்யப்படவில்லை என்பதைப் பகிரங்கமாக முஸ்லிம் சமுதாயத்திற்குக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். பொதுவாக மாணவர்களுக்குள்ள பொதுப் பிரச்சினைகள்தான் எமக்கும் உள்ளனவேதவிர எங்கள் உரிமைகளில் கைவைக்கின்ற எந்த ஒரு குறுக்கீடும் இங்கே நடைபெறவில்லை. எமது துணை வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களும், பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் மிகவும் நேச மனப்பான்மையுடனேயே நடந்துகொள்கின்றார்கள். நாம் எடுக்கின்ற விழாக்களில் கலந்து சிறப்பிப்பதோடு விடுக்கும் கோரிக்கைகளை மிக அக்கறையுடன் செவிமடுத்து வருகின்றார்கள். இப்படிப்பட்ட நல்ல மனிதர்களை — நல்ல நிகழ்ச்சிகளைத் திரையிட்டுப் பார்ப்பதோ, மூர்க்கத்தனமாக விமர்சிப்பதோ முஸ்லிம்களுக்கு அழகல்ல. இதுபற்றி நாம் சிறப்பான முடிவுகளை எடுப்போமாக.

எமது இரண்டாவது இன்கிலாப் இதழுக்கு ஆசியுரை வழங்கிய துணை வேந்தர் அவர்களுக்கும்; ஆக்கங்கள் அளித்த அறிஞர் பெருமக்களுக்கும், நண்பர்களுக்கும்; அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கிய விரிவுரையாளர்களுக்கும்; விளம்பரங்கள் தந்து எம்மை ஊக்குவித்த வணிகப் பெருமக்களுக்கும்; குறுகியகாலத்தில் சிறப்புற அச்சிட்டுதவிய யாழ். சைவப்பிரகாச அச்சகத்தினருக்கும்; அட்டையை அலங்கரித்த திரு. K. K. ராஜா அவர்களுக்கும் மற்றும் அயராதுழைத்த நண்பர்களுக்கும் எமது உளம் பூத்த நன்றிகள் உரித்தாகுக.

வஸ்ஸலாம்.

**M. M.** பாயிஸ்
**A. C. A.** முஹம்மது மன்சூர்
( இணைப் பத்திராதிபர்கள் )

12-03-1980.

# அட்டைப் படம் ... ... ... ... ...

பள்ளி வாசலே நீதித்தலமாகியும்
பள்ளி வாசலே பாராளுமன்றமாகியும்
பள்ளி வாசலே புரட்சிக்களமாகியும்
பள்ளி வாசலே பண்பாட்டுமூலமாகியும்.........

இருந்த நாட்களும், இன்றைய நாட்களும்
எண்ணிப்பார்க்கையில்
இங்கு
ஊழல் நாற்றங்கள்..........

மாற்றம் தொடங்க
ஆற்றல்கள் வருக,
எனும் ஆவலுடன்,

அட்டையை அலங்கரிக்கும்
அழகியதானதும் சிக்கலானதும்
கட்டட அமைப்பு
எட்டாம் பத்தாம் நூற்றுண்டுக்கு
இடைப்பட்ட காலத்தில்
ஸ்பெயின் நாட்டில்
உள்ளதோர்
அழகிய பள்ளி வாசல்.

உள் கட்டட கலை அமைப்பு
நவீன ஓவியக் கலைஞனின் நோக்கில்
ஒரு
புதுமை ஓவிய ஊற்றுகும்.

எமது அன்புக் கலைஞர் ராஜாவின்
சிந்தனை ஆற்றல் கலை உருவாகி
அட்டையை அழகு செய்வதில்
உண்மையில்
பெருமையடைகிறோம்.

*Best wishes from :*

## IRON STORES

**Hardware, Paints, Cartidges**
**Timber Merchant**
**Government Contractors**

MANNAR.

**T.' Phone :** 309
T.' grams : 'IRUMBO'

For quality & Fashionable

**TEXTILES**

## WELCOME TRADERS

Grand Bazzar,
MANNAR

For
Fashionable
Readymade Garments
All Your Textiles

*Visit*

## MOD CENTRE

147, Bazaar Street,
VAVUNIYA

தரத்தால் உயர்ந்த
அழகிய தங்கப்பவுண் நகைகளுக்கு
நம்பிக்கையான
சிறந்த ஸ்தாபனம்

## ராஸி ஜுவல்லர்ஸ்

ஓடர் நகைகள்
குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

அழகிய தங்க - வைர நகைகளுக்கு
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

## ராஸி ஜுவல்லர்ஸ்

— தங்கப்பவுண் நகை வியாபாரிகள் —

67, பெரியகடை,
மன்னார்.

# உள்ளே.........


| | | |
|---|---|---|
| கடந்த 14 நூற்றுண்டுகளில் இஸ்லாம் கண்ட வளர்ச்சியும், இன்றைய உலகில் அதன் செல்வாக்கும் | ... | 1 |
| கணித நோக்கில் திருக்குர்ஆன் | ... | 6 |
| துணிந்தெழுவாய் | ... | 21 |
| இலங்கை முஸ்லிம் விடுதலே | ... | 22 |
| இஸ்லாமிய சமுதாயத் தத்துவமும் இறைசிந்தனேயும் | ... | 31 |
| பலஸ்தீனப் போராட்டக் கவிதைகள் | ... | 39 |
| விண்மறையில் விஞ்ஞானம் | ... | 55 |
| அக்னிப் பிழம்புகள் | ... | 59 |
| பெண்களின் உயர்விற்காக இஸ்லாம் வழங்கிய உரிமைகள் | ... | 69 |
| இஸ்லாமும் இன்றைய இஸ்லாமியரும் | ... | 77 |
| அன்றும் இன்றும் என்றும் | ... | 83 |
| முஸ்லிம்களும் அறிவியலும் | ... | 85 |
| இலங்கை முஸ்லிம்களின் கலாசாரப் பாரம்பரியங்கள் | ... | 88 |
| இலங்கை முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சி | ... | 99 |
| பொதுச்செயலாளர் அறிக்கை | ... | 104 |
| Our Majlis Members | ... | 106 |

From:

# Deensons

*Sole Distibutors in Colombo for*

**'OMAX'** Watches

DEALERS IN FANCY GOODS
GENERAL MERCHANTS & IMPORTERS

*Office:*
**New Lucky Traders**
180/9, **Keyzer** Street,
COLOMBO - 11,
Phone: 27514

51, China Street,
COLOMBO - 11
Phone: 23671

---

Telegrams: "MEERA" Jaffna

Phone: 7134

# S. M. MEERAN SAHIB

GENERAL MERCAHNT & TRANSPORT AGENT

*Dealers in:*
**Hides, Beach De - mer, Sharkfins Etc.**

*Branch office:*
155, Sea Street,
COLOMBO.

117, Manipay Road,
JAFFNA.

# OUR MAJLIS MEMBERS



கடந்த 14 நூற்றண்டுகளில்

# இஸ்லாம் கண்ட வளர்ச்சியும இன்றைய உலகில் அதன் செல்வாக்கும்

பேராசிரியர் கா. இந்திரபாலா
*வரலாற்றுத் துறை*
*யாழ். பல்கலைக்கழகம்*

*கி. பி. 622 இல் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் 'ஹிஜ்ரா'ப் பயணத்தை மேற்கொண்டார்கள். அப்பொழுதே இஸ்லாமிய ஆண்டாகிய ஹிஜ்ரா வருடமும் தொடங்கியது. இஸ்லாத்தின் வளர்ச்சியும் அப்பொழுதே ஆரம்பித்தது எனலாம். இஸ்லாமியக் கணிப்பின்படி பதினன்கு நூற்றுண்டுகள் அப்பொழுதிலிருந்து முடிவடைந்து, பதினைந்தாவது இஸ்லாமிய நூற்றுண்டு இப்பொழுது உதயமாகியுள்ளது. இந்நிலையிலே பின்னேக்கி மேலோட்டமாகக் கடந்த பதினன்கு நூற்றுண்டுகளிலும் இஸ்லாம் கண்ட வளர்ச்சியையும் தற்பொழுது அது பெற்றிருக்கும் செல்வாக்கினையும் மதிப்பிடுவது பொருத்தமானதே.*

*ஹிஜ்ரா நடைபெற்றுப் பத்து ஆண்டுகளுள் அராபிய நாடும் மக்களும் முன்னெருபோதும் அடையாத ஓர் உயர்வினை இஸ்லாத்தின் மூலம் பெற்றனர். முன்னெருபோதும் இல்லாத ஒற்றுமையும் வலிமையும் அராபியாவில் ஏற்பட்டது. உலக வரலாற்றில் ஒரு முக்கிய பங்கினை வகிப்பதற்கு அராபியா தயாராய் நின்றது. அந்நேரம் அராபியாவுக்குக் கிழக்கே பரந்த பாரசிகப் பேரரசும், மேற்கே பைசாந்தியப் பேரரசும், காணப்பட்டன. இஸ்லாத்தின் செல்வாக்கு அராபியாவிலிருந்து வழிந்து இவை இரண்டிலும் பரவத்தொடங்கின. இஸ்லாம் ஓர் உலக மதமாக உயர்வுபெறத் தொடங்கியது. அராபியாவின் எல்லைகளைக் கடந்து சிரியா, ஈராக், எகிப்து ஆகிய அயல்நாடுகளில் இஸ்லாம் பரவியது. அந்நிலையில் ஓர் இஸ்லாமியப் பேரரசு உதயமாகியது.*

*இந்தப் பேரரசு மூன்று கண்டங்களின் பல பாகங்களை உள்ளடக்கியதாகத் திகழ்ந்தது. கிழக்கே சிந்துநதிக் கரையிலிருந்து மேற்கே அத்திலாந்திக்கரை வரை ஆசியாவின் மேற்குப் பாகங்கள், ஆபிரிக்காவின் வடகரைப்பகுதிகள், ஐரோப்பாவின் தென்பகுதிகள் ஆகியவற்றை இப் பேரரசு உள்ளடக்கி இருந்தது. இப்பரந்த பேரரசில் கி. பி. எட்டாம் நூற்றுண்டு தொடக்கம் பல நூற்றுண்டுகளாக ஓர் உன்னதமான நாகரிகம் செழிப்புற்று விளங்கியது. இந்த இஸ்லாமிய நாகரிகமானது உலக நாகரிகங்களுள் முக்கியமான ஓர் இடத்தைப் பெற்றுள்ளது.*

இந்த நாகரிகத்தின் உன்னத மொழியாக அரபுமொழி எழுச்சி பெற்றது. ''மத்திய காலத்திலே பல நூற்றுண்டுகளாக நாகரிகமடைந்த உலகில் உயர்கல்வி மொழியாகவும், பண்பாட்டு மொழியாகவும் முற்போக்குச் சிந்தனையின் மொழியாகவும் அரபுமொழி காணப்பட்டது. ஒன்பதாம் நூற்றுண்டுக்கும் பன்னிரண்டாம் நூற்றுண்டுக்குமிடையில் தத்துவம், மருத்துவம், வரலாறு, சமயம், வானியல், புவியியல் ஆகிய துறைகளில் வேறெந்தமொழியிலும் எழுதப்படாத அளவு நூல்கள் அரபு மொழியில் எழுதப்பட்டன.'' [Philip K. Hitti **The Arabs — A Short History**, London 1960 பக். 5.] இஸ்லாத்தின் எழுச்சிக்குமுன் வளர்ச்சியற்ற நிலையிலிருந்த அரபுமொழி, இஸ்லாத்தின் எழுச்சியுடன் அம்மதமும், அதன் நாகரிகமும் பரவுவதற்கான சிறந்த ஊடகமாக மாறியது. மேற்காசியாவிலும், வட ஆபிரிக்காவிலும் அரபு மொழியால் மக்கள் ஒன்றிணைக்கப்பட்டு, இஸ்லாத்தையும் அதன் நாகரிகத்தையும் வளர்ப்போராயினர். ''பதிமூராம் நூற்றுண்டளவில் அரபு மொழியானது பாரசீகம் தொட்டுப் பிரென்னீஸ்மலைகள் வரை அன்றாட வாழ்க்கைக்குரிய பிரதான மொழியாக மட்டும்மன்றி, பண்பாட்டின் பிரதான கருவியாகி, பழைய பண்பாட்டு மொழிகளாகிய கொப்திக்கு, அரமைக்கு, கிரேக்க, லத்தீன் ஆகியவற்றை விஞ்சி நின்றது''. (B. Lewis, **The Arabs in History**, London 1968, பக்கம். 132)

இத்தகைய சிறந்த மொழியில் நாகரிக உலகின் தலைசிறந்த மொழிகளின் முக்கியமான படைப்புக்கள் பல மொழிபெயர்க்கப்பட்டன. லத்தீன் மொழியிலும், கிரேக்கத்திலும் இருந்த விஞ்ஞான, மருத்துவ, தத்துவ நூல்களும், பாரசீகம், சமஸ்கிருதம் போன்ற மொழிகளிலிருந்து வானியல், கணிதவியல் போன்ற துறைகளைச் சேர்ந்த நூல்களும் அரபு மொழிக்குப் பெயர்க்கப்பட்டு, இஸ்லாமிய நாகரிகத்தின் செழிப்புக்கு உதவக்கூடிய வகையிலே பயன்படுத்தப்பட்டன. மத்திய ஆசியா வழியாகச் சீனுவின் விஞ்ஞான, தொழில் நுட்பவியற் கருத்துக்களும் பெறப்பட்டன. இவற்றின் விளைவாக ஓர் உயரிய நாகரிகத்துக்குத் தேவைப்பட்ட அடித்தளம் அமைக்கப்பட்டது. அதன்மேல் இஸ்லாமிய அறிஞர்கள் முன்னணியில் நிற்கக்கூடிய ஒரு நாகரிகத்தைக் கட்டி யெழுப்பினர்.

அவர்களுள், தத்துவஞானியும் மருத்துவ விஞ்ஞானியுமான இப்னுஸீனு (**Avicenna** *980 – 1037*), மருத்துவ விஞ்ஞானியாகிய அல் — ராஸீ (**Rhases** *865 — 925*), பல்துறை அறிஞைகத் திகழ்ந்த அல் பிரூணி (*973 — 1048* — மருத்துவ விஞ்ஞானி, வானியலாளன், கணித மேதை, பௌதிகவியலாளன், இரசவாதி, புவியியலாளன், வரலாற்றுசிரியன்) ஆகியோர் இஸ்லாமிய நாகரிகம் உலகுக்களித்த தலைசிறந்த அறிஞர்களுள் ஒருசிலராவர். மேலைத்தேசத்தில் நவீன பல்கலைக்கழகங்களின்

முன்னேடி நிறுவனங்கள் தோன்றிய போது இந்த அறிஞர்களுடைய படைப்புக்களையே அங்கு பாடநூல்களாக ஐரோப்பியர் கற்றனர். கணிதவியல், பௌதிகம், இரசாயனம் ஆகிய துறைகளில் இஸ்லாமிய நாகரிகம் குறிப்பிடத்தக்க தொண்டாற்றி, புதிய கண்டு பிடிப்புக்களையும் சேர்த்து ஐரோப்பாவுக்குக் கொடுத்தது. அந்த அறிவு, நவீன விஞ்ஞானம் மேலைத்தேசத்தில் வளர்ச்சிபெறத் தொடங்கியபோது ஒரு முக்கியமான பங்களிப்பாக அமைந்தது. நவீன கணிதவியலில் பூஜ்யக் குறியும் இந்து — அரபு எண்முறையும் அடிப்படையான அம்சங்களாக இருப்பதற்கு இஸ்லாமிய நாகரிகத்தின் பங்களிப்பே காரணம் எனலாம். இவற்றை ஐரோப்பா இஸ்லாமியர் வழியாகவே பெற்று முழுஉலகுக்கும் அளித்தது. இஸ்லாமிய உலகு விட்ட இடத்திலிருந்து ஐரோப்பா நவீன விஞ்ஞானத்தை வளர்க்கத் தொடங்கியது.

இஸ்லாமிய நாகரிகம் உச்சநிலையடைந்திருந்த காலத்தில் இஸ்லாமியப் பேரரசின் வர்த்தகம் உலகத்தின் பல்வேறு பாகங்களிலும் பரவியிருந்தது. இதனுல் இஸ்லாமிய மதமும் பண்பாடும் அரபுமொழியும் அமைதியான முறையிலே இஸ்லாமியப் பேரரசுக்கு வெளியிலும் பரவக்கூடிய நிலை ஏற்பட்டது. இன்று இஸ்லாமிய மக்கள் ருஷ்யமொழி, சீனமொழி, மலாய்மொழி, தமிழ் போன்ற பல்வகை மொழிகளைப் பேசுவோராய் பல்வேறு இடங்களிலே பரந்து காணப்படுவதற்கு இஸ்லாமியப் பேரரசின் வர்த்தகமே காரணமாகும். செங்கடல், பாரசீகக்குடா ஆகியவற்றின் துறைகளிலிருந்து இஸ்லாமிய வர்த்தகர்கள் கிழக்கே இந்தியா, இலங்கை, இந்துனீசியத்தீவுகள், சீனு ஆகிய இடங்களுக்குச் சென்று கீழைத்தேசத்தின் போகப் பொருட்களைப் பெற்று, ஐரோப்பா வரை அவற்றை எடுத்துச் சென்றனர். இந்து சமுத்திரத்தின் கடல்மார்க்கம் வழியாக மட்டுமன்றி, மத்திய ஆசியாவின் தரைமார்க்கம் மூலமாகவும் அவர்களுடைய பரந்த வர்த்தகம் நடைபெற்றது. இதன் விளைவே இன்று இலங்கை, மலேஷியா, இந்துனீசியா போன்ற இடங்களில் இஸ்லாம் காணப்படுகின்றமை.

பதினேராம் நூற்றுண்டிலிருந்து இஸ்லாமியப் பேரரசு தனது உன்னத நிலையை இழக்கத் தொடங்கியது. மேற்காசியாவைப் பொறுத்த மட்டிலே அது நிலைகுலையத் தொடங்கியது எனலாம். ஆனுல் தென்னுசியாவைப் பொறுத்தமட்டில், இஸ்லாத்தின் சிறந்த காலம் பதினேராம் நூற்றுண்டின் பின்னர்தான் இடம்பெற்றது. அங்கு சிறப்பாகப் பதினுறும், பதினேழாம் நூற்றுண்டுகள் மொகலாயப் பேரரசின் கீழ் இஸ்லாமிய நாகரிகம் ஒரு புதிய வழியில் வளர்ந்த காலமாய் அமைந்தன. ஆனுல் இஸ்லாத்தின் தாயகத்திலும் அதனுடன் கூடிய பிரதேசங்களிலும், மொங்கோலியர் படையெடுப்புக்களும், ஐரோப்பியச் சிலுவைப்

போர்களும், இறுதியாக ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களும் இஸ்லாமியப் பேரரசை நிலைகுலைத்தன. ஆனாலும் அவற்றால் இஸ்லாமிய மதத்தை நசுக்க முடியவில்லை.

இருபதாம் நூற்றாண்டு உதயமாகியபோது இஸ்லாமிய மக்கள் பெரும்பாலும் அடிமைப்பட்டிருந்தனர். ஈரான், அவ்கானிஸ்தான், துருக்கி ஆகிய இடங்களைத் தவிர பிற இஸ்லாமிய நாடுகள் சுதந்திர மற்ற நிலையிலே காணப்பட்டன. ஐரோப்பிய ஏகாதிபத்தியம் கோடிக் கணக்கான இஸ்லாமிய மக்களையும், பிறமக்களையும் அடக்கி ஆண்ட காலம் அது.

முதலாம் மகாயுத்தித்தின் பின்னர் நிலைமை மாறத்தொடங்கியது. மேற்காசியாவிலும் இந்துனீசியாவிலும் தேசிய இயக்கங்கள் தோற்றம் பெற்று இஸ்லாமிய மறுமலர்ச்சி ஒன்றுக்கு வித்திடத் தொடங்கின. மேற்காசியாவிலும் வடஆபிரிக்காவிலும் மெதுவாக அரபுத்தேசிய வாதம் வலுப்பெறத் தொடங்கியது. இரண்டாவது மகாயுத்தம் முடிவடைந்தபோது மீண்டும் வலிமையுடன் இஸ்லாம் எழுவதற்கான சாத்தியக் கூறுகள் தென்பட்டன. நவீன உலகில் இஸ்லாமிய நாடுகள் தங்களுக்கு உரிய இடத்தைப் பெறத்தொடங்கின. எகிப்து, சிரியா, ஈராக், லிபியா, அல்ஜீரியா போன்ற நாடுகள் முக்கிய நாடுகளாகப் பெயர் பெறத் தொடங்கின. கிழக்கே மலேஷியாவும், இந்துனீசியாவும், மத்தியில் பாகிஸ்தானும் அதே போன்ற முக்கியத்துவத்தைப் பெற்று எழத் தொடங்கின.

இப்பின்னணியிலே சுதந்திரமடைந்த ஆபிரிக்க நாடுகளிலும் இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கு வழிதிறக்கப்பட்டது. தற்கால அரசியலில் ஆபிரிக்க அரசுகள் பெற்றுள்ள முக்கியத்துவம் இஸ்லாத்துக்குச் சார்பானதாய் அமைந்துள்ளது. அதே நேரத்தில் அதிருப்தி கொண்ட, அடக்கப்பட்ட அமெரிக்க நீக்கிரோ மக்கள் மத்தியிலும் இஸ்லாம் ஒரு கவர்ச்சியைப் பெற்றமை கவனிக்கத்தக்க அம்சமாய் அமைந்தது. இதன் பின் திடீரென அரபுநாடுகளின் செல்வமாகிய பெற்றோலியம் உலகச் சந்தையிலே என்றுமே பெற்றிராத விலையைப் பெறத் தொடங்கி, அரபு நாடுகளுக்கு ஒரு பொருளாதார வலுவைக் கொடுத்தமை இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கு மிகவும் சாதகமாய் அமைந்த ஒரு காரணி எனலாம்.

இத்தகைய காரணிகளினால் உலகத்தின் கவனம் என்றுமே இல்லாதவாறு இஸ்லாத்தின்பால் ஈர்க்கப்பட்டுள்ளது. இந்தக் கவனத்தை மேலும் அதிகரிக்கும் வகையில் ஈரானியப் புரட்சி அயத்தொல்லாஹ் கோமேனியின் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இன்று உலகிலே எழுபத்தைந்து கோடி இஸ்லாமிய மக்கள் வாழ்கின்றனர். இஸ்லாம் உலகின் இரண்டாவது பெரிய மதமாக விளங்குகின்றது. பெரும்பாலானவர்கள் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலுமே வசித்தாலும், குறிப்பிடத்தக்க தொகையினர் உலகத்தின் பிரதான நகரங்களிலெல்லாம் காணப்படுகின்றனர். இன்று இஸ்லாமிய மக்கள் புத்துணர்வு பெற்று, தம் பாரம்பரியத்தில் ஆர்வங்கொண்டு இஸ்லாத்தின் மறுமலர்ச்சி ஒன்றுக்கு வழிவகுத்துக் கொண்டிருக்கின்றனர் எனத்தோன்றுகிறது. மேற்கே லிபியாவிலும், ஈரானிலும், நடுவே பாகிஸ்தானிலும், கிழக்கே மலேஷியாவிலும் இன்று நடைபெறும் சம்பவங்கள் இஸ்லாமிய மறுமலர்ச்சி ஒன்று தொடங்கிவிட்டது என்பதைக் காட்டி நிற்கின்றன என்று கூடக் கூறலாம். கடந்த சில ஆண்டுகளாக என்றுமே இல்லாத அளவில் ஹஜ் யாத்திரிகர்கள் மெக்காவுக்குச் சென்று வருவதைக் காணலாம். ஏறக்குறைய எழுபது நாடுகளைச் சேர்ந்த யாத்திரிகள் இவ்வாறு சென்று வருகின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையில் இஸ்லாமிய நாடுகளின் செல்வாக்கு இன்று மிகவும் உயர்ந்து காணப்படுகின்றது. உலக வல்லரசுகள், சிறப்பாக அமெரிக்காவும் ருஷ்யாவும் இஸ்லாமிய நாடுகளின் நட்பைப் பெற்றுக்கொள்ளப் பேரார்வம் கொண்டிருப்பதைக் காணலாம்.

இத்தகைய ஒரு சிறந்த செல்வாக்குள்ள நிலை இஸ்லாத்தைப் பொறுத்து நவீன உலகில் இதற்கு முன் இருந்தது கிடையாது. இப்பின்னணியில் பார்க்குமிடத்து, இருபதாம் நூற்றுண்டு முடிவடையுமுன் இஸ்லாம் மீண்டும் தான் பெற்றிருந்த உன்னத நிலையைப் பெறுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன எனலாம். உலகரீதியாக ஓர் இஸ்லாமிய மறுமலர்ச்சி இன்று ஏற்படத் தொடங்கிவிட்டது என்றே கூறவேண்டும்.

# கணித நோக்கில் திருக்குர்ஆன்

**கலாநிதி எம். இஸட். எம். மல்ஹர்தீன்**
*கணிதத்துறை*
*யாழ். பல்கலைக்கழகம்*

ஏறக்குறைய 60 கோடி முஸ்லிம்கள் இன்று தங்கள் வாழ்க்கை வழிகாட்டியாகப் பின்பற்றும் திருக்குர்ஆன் அருளப்பெற்றுப் பதினான்கு நூற்றாண்டுகள் கழிந்துவிட்டன. முஸ்லிம்களாகிய எமது நம்பிக்கை, திருக்குர்ஆன் மனிதர்களுக்கு நேர்வழிகாட்டுவதற்காக அல்லாஹ்வினால் அருளப்பெற்ற வேதவாக்கு மட்டுமன்றி, இறைத்தூதராக வந்த பெருமானார் முஹம்மது நபி (ஸல்) அவர்களது நபித்துவத்தின் அத்தாட்சியாகக் கொடுக்கப்பட்ட ஒரு அற்புதமுமாகும் என்பதே. பெருமானாரவர்களுக்கு முன்வந்த எல்லா நபிமார்களுக்கும், அவர்களின் நபித்துவத்தின் அத்தாட்சியாக அல்லாஹ் பல அற்புதங்களை அருளியிருந்தான். உதாரணமாக மூஸா நபி (அலை) (**Moses**) அவர்கள் தம்மிடம் வைத்திருந்த ஊன்றுகோலைத் தாம் நினைத்த போது உயிருள்ள ஒரு பாம் பாக மாற்றும் சக்தியை அல்லாஹ் அவர்களுக்கு அருளியிருந்தான். இதே போன்று ஈஸா நபி (அலை) (**Jesus**) அவர்கள் இறந்தவர்களை உயிர்ப்பித்துக் காட்டியிருந்தார்கள். இப்படியான மனித சிந்தனைக்கும் சக்திக்கும் அப்பாற்பட்ட செயல்களை நேரடியாகக் காண்பதன் மூலம் அக்கால மக்கள் தமது நபிமார்கள், இணையற்ற இறைவன் — அல்லாஹ்வின் — தூதர்களே என்பதைச் சந்தேகமின்றி ஒப்புக்கொண்டனர். கடைசி நபியாக வந்துதித்த பெருமானாரவர்களும் தங்கள் தூதை எடுத்தியம்ப ஆரம்பித்த போது அக்கால மக்கள் அவரிடம் தங்கள் நபித்துவத்தின் அத்தாட்சியாக என்ன கொண்டுவந்தீர்கள் எனக் கேட்டனர். அப்பொழுதெல்லாம் பெருமானாவர்கள் அல் லாஹ்விடமிருந்து தமக்கு அருளப்பட்டுக்கொண்டிருந்த வேத வசனங்களையே — திருக் குர்ஆனையே — தமக்குக் கொடுக்கப்பட்ட அற்புதம் எனக் கூறிவந்தார்கள். ஆனால் அவர்கள் திருக்குர்ஆனிலுள்ள அற்புதங்கள் எவையெனக் குறிப்பாகச் சுட்டிக் காட்டி யதாகத் தெரியவில்லை. இலக்கியத் துறையில் மிக்க ஆர்வம் கொண்டிருந்த அன்றைய அராபியர்கள் இதை ஒரு அற்புத இலக்கியப் படைப்பாகவே கண்டனர். வசனங்களின் சொல்லழகு, நடையழகு, ஓசை நயம், கருத்துச் செறிவு என்பவற்றைக் கண்ட பலரும் இவை ஒரு மனிதனால் இயற்றப்பட்டிருக்க முடியாதென்பதை உணர்ந்தேயிருந்தனர். ஆனால் திருக்குர்ஆன் அருளப்பெற்ற நாள் முதல் இவை இறைவசனங்களல்ல வெனவும் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் கற்பனையிலுதித்த வசனங்களேயெனவும் வாதிப்போர் இருந்து கொண்டே வருகின்றனர். இவர்களின் கூற்றை மறுத்துக் குர் ஆனிலேயே சவால் விடப்பட்டுள்ளது.

*"(நம்முடைய தூதராகிய) அவர் இதனைப் பொய்யாகக் கற்பனை செய்து கொண்டாரென அவர்கள் கூறுகின்றனரா? (அவ்வாறாயின், நபியே அவர்களை நோக்கி) நீர் கூறும், இதைப்போன்று கற்பனை செய்யப்பட்ட பத்து அத்தியாயங்களையேனும் நீங்கள் கொண்டு வாருங்கள். அல்லாஹ்வையன்றி உங்களுக்குச் சாத்தியமான யாவரை யும் (இதற்காக) அழைத்து (உங்களுக்குத் துணையாக)க் கொள்ளுங்கள். (மெய்யாகவே இது கற்பனை என்று) நீங்கள் உண்மை சொல்பவர்களாயிருந்தால் (இவ்வாறு செய் யலாமே!)" (11 : 13)*

இதே போன்று இன்னும் பல இடங்களில் இப்படியான சவால்கள் விடப் பட்டுள்ளன. ஓரிடத்தில் (2 : 23) குர்ஆனை நிராகரிப்போரிடம் அது போன்ற ஒரே யொரு அத்தியாயமாவது கொண்டுவருமாறு கேட்கப்பட்டுள்ளது. இன்னோரிடத்தில் (52 : 34) ஒரேயொரு வசனமாவது கொண்டுவரட்டும் எனக் கூறப்பட்டுள்ளது. பதினான்கு நூற்றாண்டுகள் கழிந்து இன்றுவரை இச்சவால் ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாகவே இருந்து வருகிறது. இன்றைய விஞ்ஞான யுகத்தில் மனிதனின் மாபெரும் சாதனமான கம்பியூட்டர்களை உதவிக்கு எடுத்துககொண்டாலும் கூட, இச்சவால் இனியும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்றே. இங்கு கடைசியாகக் கூறிய கருத் துக்கு ஆதாரமாகக் கணித அடிப்படையிலமைந்த சில விளக்கங்களைத் தருவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

ஒவ்வொரு நபிமார்களுக்கும் அருளப்பட்ட அற்புதங்கள் அக்கால மக்கள் மட்டும் நேரடியாகக் கண்டுகொள்ளக் கூடியனவாக இருந்தன. ஆனால் பெருமானார் அவர்கள் நபிமார்களுக்கெல்லாம் தலைவர் என்ற உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றவர். இறுதி நாள்வரை வரக்கூடிய மக்கள் அனைவரும் பின்பற்றவேண்டிய தூதராக அனுப்பப் பட்டவர். எனவே அவருக்குக் கொடுக்கப்பட்ட இவ்வற்புதமும் மற்ற நபிமார்களுக்குக் கொடுக்கப்பட்டதை விட விஷேடமானதாக இருப்பதோடு, இறுதி நாள் வரை வரக் கூடிய மனிதர்கள் நேரடியாகக் கண்டு கொள்ளக்கூடிய அதிசயங்களைக் கொண்டிருக்கும் என்பதும் நாம் எதிர்பார்க்கக்கூடியதே. எனவே, திருக்குர்ஆனைத் தூய எண்ணத் துடன் ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் அதன் விஷேடத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் அதை அற்புதங்களில் ஒரு மாபெரும் அற்புதம் எனக் குறிப்பிட் டிருப்பதில் எவ்வித வியப்புமில்லை.

திருக்குர்ஆனின் ஒரு முக்கிய விஷேடம், எந்தவொரு நிலையிலிருந்து ஆராயப்பட் டாலும் அந்நிலையிலிருந்து அது ஒரு தன்னிகரற்ற படைப்பென்பதைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருப்பதாகும். இதனால்தான் ஒரு கவிஞரோ, விஞ்ஞானியோ, வைத்திய நிபுணரோ, சரித்திராசிரியரோ, பொருளாதார நிபுணரோ, சட்டவல்லுனரோ அறிவியலின் எத்துறையைச் சேர்ந்தவராயினும் சரி குர்ஆனை ஆராய்ந்த போது அதன் அற்புதக் காந்தச் சக்தியால் கவரப்பட்டனர். வாழ்க்கையில் சகல துறைகளையும் தழுவி மனித சமுதாயத்தின் நன்மை கருதும் அத்தனைக் கருத்துக் களும் இதில் மிகப்பொருத்தமான விதத்தில் கூறப்பட்டுள்ளமை இதற்கொரு முக்கிய காரணமாகும். அத்தோடு இவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் துறையிலிருந்து கொண்டு அதனை ஆராய முற்பட்ட பொழுதெல்லாம் தத்தம் துறைக்கேற்ப வெவ்வேறு அற் புதங்களை அதில் கண்டுகொண்டனர். அது மட்டுமன்றி வெவ்வேறு காலகட்டங்களிலும் அவ்வக்கால அறிவுச் சூழலிலிருந்து ஆராயப்படும்போதும் அதுதன் சிறப்பை அதற் கேற்ப வெளிப்படுத்திக் கொண்டே வருகின்றது. எனவே திருக்குர்ஆனின் மகிமை பற்றி நாம் எவ்வளவுதான் ஆராய்ந்தாலும் எல்லைகாண முடியுமென்று யாராலும் கூறமுடியாது. ஒருவன் இப்படியான ஆராய்ச்சிகள் மூலம் இவ்வருள் சமுத்திரத்தின் அலைகளைக் காணமுடியுமே தவிர ஆழம் காணமுடியாது. பெருமானார் அவர்கள் அன்று திருக்குர்ஆனிலுள்ள அற்புதங்கள் எவையெனக் குறிப்பிடாததும், அது ஒரு காலத்தால் அழியாத அற்புதம் என்பதைத்தான் சுட்டிக்காட்டுகிறதல்லவா? இந்நிலையில் அண் மையில் சில முஸ்லிம் கணிதவியலாளர்களும் தமது துறைக்குரித்தான விசேட நோக் கில் தம் இதயம் கவர்ந்த மாமறையை ஆராய முற்பட்டதில் வியப்பில்லை.

கணித நோக்கில் பார்ப்பதானாலும் குர்ஆனை இரு வெவ்வேறு திசைகளில் ஆராயலாம். ஒன்று அதன் உட்கருத்தை அடிப்படையாகக் கொண்டது. மற்றது அதன் தோற்றத்திலும் வெளிஅமைப்பிலும் காணக்கூடிய அற்புதப் பண்புகளைப்பற்றியது. முதலாவது வகைபற்றிய விரிவான விளக்கங்களை உண்மையில் குர்ஆன் ஞானத்தில் தேர்ச்சிபெற்ற ஒரு மார்க்க அறிஞராலேயே தர முடியும். எனினும் இவ்வகையில் நாம் காணக்கூடிய சில பொதுச் சிறப்பியல்புகளைச் சுருக்கமாகக் குறிப்பிடலாம். இவற்றுள் முக்கியமாகத் தென்படுவது மனித சிந்தனைக்குக் குர்ஆனில் அளிக்கப்பட்டுள்ள இடமாகும். சிந்தனைக்கு ஒரு உயர்ந்த அந்தஸ்தை அளித்து உண்மைகளைப் புரிந்துகொள்வதற்காகச் சிந்தனையை ஒரு ஆயுதமாக உபயோகிக்கும்படி அது நம்மைத் தூண்டுகிறது.

"அவன் வானங்களையும் பூமியையும் படைத்திருப்பதிலும், இரவும் பகலும் மாறி மாறி வருவதிலும், மனிதர்களுக்குப் பயன் தருவதை (ஏற்றி)க்கொண்டு சமுத்திரத்தில் செல்லும் கப்பலிலும், வரண்டு இறந்த பூமியை, உயிர்ப்பி(த்துச் செழிப்பாக்கி வை) க்க வானத்திலிருந்து அல்லாஹ் பொழிவிக்கச் செய்யும் மழையிலும், எல்லா விதமான கால்நடைகளையும் பூமியில் பரவவிட்டிருப்பதிலும், காற்றுக்களை (ப் பல கோணங்களிற் திருப்பி) த் திருப்பி விடுவதிலும், வானத்திற்கும் பூமிக்கும் இடையில் கட்டுப்படுத்தப்பெற்றிருக்கும் கரு மேகத்திலும், (மனிதர்களுக்குள்ள பிரயோஜனங்களை ஆராய்ந்து) சிந்திக்கும் மக்களுக்கு (அவனுடைய அருளையும் அன்பையும் அறிவிக்கக் கூடிய) அநேக சான்றுகள் நிச்சயமாக இருக்கின்றன". (2 : 164)

"(மனிதர்கள்) சிந்தித்து ஆராய்ந்து நல்லுணர்ச்சி பெறும்பொருட்டு, இந்தக் குர்ஆனை மிக எளிதாக்கியிருக்கிறோம். ஆகவே (இதனைக்கொண்டு) நல்லுணர்ச்சி பெறுவோர் உண்டா ?" (54 : 17).

அதே வேளையில் நமது சிந்தனா சக்தி ஒரு எல்லைக்குட்பட்டதென்பதையும் குர்ஆன் நமக்குத் தெளிவுபடுத்துகிறது. நமது சிந்தனையால்மட்டும் உணர்ந்துகொள்ள, விளங்கிக் கொள்ள முடியாத பல அடிப்படை உண்மைகளை நமக்கு எடுத்துக் கூறி அவற்றில் பூரண நம்பிக்கை கொள்ளுமாறு அது நமக்குக் கட்டளையிடுகிறது. அந்நம்பிக்கையின் அடிப்படையில் அது கூறும் வாழ்க்கை முறையை முற்றிலும் பின்பற்றி நடப்பதிலேயே மனித இனம் அதன் குறிக்கோளை அடையமுடியும் என்பதையும் வலியுறுத்துகின்றது. அது கூறும் உண்மைகளையும், கட்டளைகளையும் நிராகரிப்போர் நிச்சயம் அல்லாஹ்வின் தண்டனைக்காளாவர் எனவும் எச்சரிக்கை விடுகின்றது. இவற்றுக்கு ஆதாரமாக சரித்திர சம்பவங்களையும், உவமைகளையும், நமது இயற்கைச் சூழலிலுள்ள பல உதாரணங்களையும் அதற்கே உரிய விஷேட பாணியில் எடுத்துக் கூறுகிறது. அதில் கையாளப்படும் வாதங்கள் வலிமையானவையாகவும், சிந்தனைக்கு விருந்தளிப்பனவாயும், எளிமையானவையாயும் உள்ளன. திருக்குர்ஆனின் இன்னொரு தனிச்சிறப்பு அதன் வெவ்வேறு வசனங்களுக்கிடையில் எவ்வித முரண்பாடுகளும் இல்லாமையாகும். இதைக் கணித வழக்கில் "இசைவு" (Consistency) என்று கூறுவார்கள்.

"அல்லாஹ் மிக்க அழகான செய்திகளையே (இந்த) வேதத்தில் இறக்கி இருக்கின்றான். (இதிலுள்ள வசனங்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடில்லாமல்) ஒன்றை மற்றொன்று ஒத்ததாக — (இருப்பதுடன், மனத்தில் பதியும் பொருட்டு ஒரே விஷயத்தைப்) பின்னும் பின்னும் (பலவகையில்) கூறப்பட்டுள்ளது. ...... (39 : 23) இதே போன்று குர்ஆனின் கருத்துச்செறிவு வியப்புக்குரியதே. ஒரே வசனம் ஒன்றுக்

கொன்று முரணில்லாத பல கருத்துக்களைக் கொண்டிருப்பதைக் குர்ஆனில் நிறையக் காணலாம். ஒரே வசனத்தை மீண்டும் மீண்டும் வாசிக்கும்போது ஆழமான புதுப்புதுக் கருத்துக்கள் வெளிவருவதைப் பற்றியும் அறிஞர்கள் வாயிலாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். இதே போன்று ஒரே வசனத்தைப் பலர் வாசிக்கும் போது அவரவர் தத்தம் அறிவு ஞானத்திற்கேற்ப அதன் கருத்துக்களைப் புரிந்து கொள்வார்கள். ஒரே குர்ஆன் வசனம் அருளப்பட்ட சமயம் அதைக்கேட்ட நாயகத் தோழர்களில் சிலர் அழுததையும், சிலர் புன்னகை செய்ததையும் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

மேலே நாம் பார்த்தது குர்ஆனின் கருத்தை அடிப்படையாகக்கொண்ட அதன் சில சிறப்பியல்புகளே. இதே வேளையில் குர்ஆனின் வெளிப்படையான அமைப்பு பற்றியும் சில கணிதவியலாளர்கள் கவனம் செலுத்தினர். இவர்களின் ஆராய்ச்சியின் பலனாகக் கிடைத்த தகவல்கள் நம்மைப் பிரமிப்படையச் செய்கின்றன. இத்தகவல்கள் உண்மையில் குர்ஆன் ஒரு மனிதப் படைப்பல்ல என்பதை நிரூபிக்கும் பல அற்புதங்களைக் கொண்டுள்ளன. இவ்வற்புதங்களின் விஷேடம் என்னவெனில் அரபுமொழி தெரியாத ஒருவர்கூட தம் கண்களால் இவற்றைக் கண்டுகொள்ள முடிவதுதான். இவ்வற்புதங்களில் சிலவற்றை விவரிப்பதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

முதலில், ஒரு வசனத்தின் வெளிப்படையான அமைப்பு என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். ஒரு வசனத்திலுள்ள எழுத்துக்கள், அவற்றின் எண்ணிக்கை, அவை அமைந்துள்ள ஒழுங்கு போன்றவற்றையே இது குறிக்கின்றது. உதாரணமாகப் பின்வரும் மூன்று ஆங்கில வசனங்களையும் கவனியுங்கள்,

1 A man, A plan, A canal, — Panama
2 Quick brown fox jumps over the lazy dog
3 Is pity love? — Positively!

இவ்வசனங்கள் மூன்றும் தெளிவான கருத்துக்களைக் கொண்டிருக்கும் அதேவேளையில் வெளித்தோற்றத்திலும் மூன்று வெவ்வேறு விசேட பண்புகளையுடையன. ஆங்கிலமொழி தெரியாத ஒருவர் கூட இவற்றை எளிதில் கண்டுபிடித்து விடலாம். முதலாவது வசனம் சமச்சீரானது. அதாவது, பின்பக்கமாக இருந்து வாசிக்கும்போதும் அதே வசனம்தான் பெறப்படுகிறது, இரண்டாவது வசனத்தின் சிறப்பியல்பு ஆங்கில அரிச்சுவடியிலுள்ள எல்லா எழுத்துக்களும் அதில் இருப்பதாகும். மூன்றாவது வசனம் ஒரு கேள்வியையும் பதிலையும் கொண்டுள்ளது, கேள்வியும் பதிலும் ஒரே தொகுதி எழுத்துக்களைக் கொண்டிருப்பதுதான் இங்குள்ள விசேடமாகும். இவ்விதமாக, ஒரு வசனமோ அல்லது வசனங்களோ ஒரு தெளிவான உட்கருத்தைக் கொண்டிருக்கும் அதே வேளையில் வெளித்தோற்றத்திலும் சில பண்புகளைக் கொண்டிருப்பின் அது கணித நோக்கில் ஒரு விசேட அழகைப் பெறுகிறது.

இந்நோக்கில் பார்க்கும்போதுதான் நாம் திருக்குர்ஆனின் வெளித்தோற்றத்திலும் சில அற்புதத்தன்மைகளைக் காண்கிறோம், இதை வாசிப்போர் முடியுமாயின் தம்முடன் ஒரு புனித திருக்குர்ஆன் பிரதியை வைத்திருப்பது நாம் கூறும் விளக்கங்களை நேரில் கண்டுகொள்ள உதவியாக இருக்கும்,

முதலில் குர்ஆனின் 74-ஆவது அத்தியாயமான ஸூரா முத்தஸ்ஸிரைப் பார்ப்போம். இது இஸ்லாத்தின் மிக ஆரம்பகாலத்தில் அருளப்பட்ட ஒரு அத்தியாயமாகும்.

இவ்வத்தியாயத்தை வாசிக்கும்போது நடுவே உள்ள இரு வசனங்கள் நம் விசேட கவனத்தை ஈர்க்கின்றன. ஒன்று

عَلَيْهَا تِسْعَةَ عَشَرَ

என்ற 30வது வசனம் இதன் நேரடி மொழிபெயர்ப்பு பின்வருமாறு தரப்படுகிறது.

"அதன்மீது பத்தொன்பது (உண்டு)".

அடுத்தது, 31வது வசனம். இவ்வத்தியாயத்திலுள்ள மற்ற 55 வசனங்களும் நீளத்தில் மிகச் சிறியவையாக இருக்க இவ்வசனம் மட்டும் அவற்றைவிடப் பத்து மடங்கு நீள முடையதாக வேறுபட்டுத் தோன்றுகிறது.

இங்கு எமது சிந்தனையை முதலாவதாகக் கிளறுவது 30வது வசனமாகும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எண் எதன் எண்ணிக்கையைக் குறிக்கின்றது? அதிலும் குறிப்பாக ஏன் இந்தப் "பத்தொன்பது" என்னும் எண்? குர்ஆனின் ஏனைய இடங்களில் தோன்றும் 7, 40, 1000 போன்ற எண்களுடன் ஒப்பிடும்போது 19 சிறிது புதுமையாகவே தென்படுகிறது.

குர்ஆன் விரிவுரையாளர்கள் 30வது வசனத்திற்கு விளக்கமளிக்கும்போது, இவ்வசனமும் இதற்கு முன்னுள்ள சில வசனங்களும், இஸ்லாத்தின் ஆரம்பகாலத்தில் குர்ஆன் வசனங்களை நிராகரித்த வலீத் இப்னு முகைரா போன்ற காபிர்கள் பற்றியருளப்பட்டதாகக் கூறுகின்றனர். பெரும்பான்மையான விரிவுரையாளர்கள் இவ்வசனங்களைப் பின்வருமாறு மொழிபெயர்க்கின்றனர்.

"ஆகவே 'இது மயக்கக்கூடிய சூனியமேயன்றி வேறில்லை; இது மனிதர்களுடைய சொல்லேயன்றி வேறில்லை' என்றும் கூறினான். ஆகவே அவனை நாம் நரகத்தில் எறிவோம். (நபியே! அந்த) நரகம் என்னவென்று நீர் அறிவீரா? அது எவரையும் மிச்சம் வைக்காது. விடவும்மாட்டாது. (அது எரித்து) மனிதனுடைய கோலத்தையே மாற்றிவிடும்." (74 : 24 — 29)

"அ[ந்நரகத்]தின் மீது பத்தொன்பது பேர்கள் [நியமிக்கப்பட்டு] இருக்கின்றனர்" [74 : 30]

இவர்களில் பெரும்பான்மையானோரின் கருத்து, குர்ஆனைப் பொய்யென நிராகரித்தோரைத் தண்டிப்பதற்காக நரகில் நியமிக்கப்பட்டுள்ள மலக்குகளின் எண்ணிக்கையே பத்தொன்பது என்பதாகும். இதுபோன்ற வேறு பல விளக்கங்களையும் ஏனைய ஆராய்ச்சியாளர்கள் தருகின்றனர். ஆனால் இவ்விளக்கங்கள் நாம் மேலே கேட்ட இரண்டாவது கேள்விக்கு விடையளிப்பதாகத் தெரியவில்லை. அதாவது மலக்குகளின் எண்ணிக்கை ஏன் 20 ஆகவோ, 25 ஆகவோ அல்லது 1000 ஆகவோ அன்றிப் பத்தொன்பதாக உள்ளது? இந்நிலையில் ஆரம்பத்தில் எம்மைக் கவர்ந்த இதற்கடுத்த 31வது வசனத்தின்பால் எம் கவனம் செல்கிறது. நீளத்தில் பெரிய வசனம் அதன் உட்கருத்திலும் ஒரு பெரிய இரகசியத்தை உள்ளடக்கியிருப்பது போல் தோன்றுகிறது. உண்மையும் இதுதான் என்பதை மிக அண்மையில் சில ஆராச்சியாளர்கள் தரும் விளக்கங்கள் ஊர்ஜிதப்படுத்துகின்றன. இவ்விளக்கங்கள் எமது கேள்விகளுக்கு விடையளிப்பது மட்டுமன்றி குர்ஆனின் பல அற்புதப்பண்புகளை நோக்கி எம்மை எடுத்துச் செல்கின்றன. இவர்கள் இவ்விரு வசனங்களையும் பின்வருமாறு மொழிபெயர்க்கின்றனர்.

''அதன் மீது பத்தொன்பது (உள்ளது)'' (74 : 30)

''நரகத்தின் காவலாளிகளாக மலக்குகளையன்றி (மற்றெவரையும்) நாம் ஏற்படுத்தவில்லை. நிராகரிப்பேரைச் சோதிப்பதற்காகவே (இவ்வாறு) அவர்களுடைய தொகையை (ப்பத்தொன்பதாக) நாம் ஏற்படுத்தினோம். ஏனெனில் வேதத்தைக் கொடுக்கப்பட்டவர்கள் உறுதிகொள்வதற்காகவும் விசுவாசங்கொண்டவர்கள் விசுவாசத்தை அதிகரித்துக் கொள்வதற்காகவும், வேதத்தை கொடுக்கப்பட்டவர் (களான யூத, கிறிஸ்தவர்)களும் விசுவாசிகளும் சந்தேகங் கொள்ளாமலிருப்பதற்காகவும் வேண்டியே. எனினும் எவர்களுடைய இருதயங்களில் நோய் இருக்கின்றதோ அவர்களும் நிராகரிப்போரும் ''இந்த உதாரணத்தைக்கொண்டு அல்லாஹ் எதை அறிவிக்க நாடினான்?'' என்று கூறுவார்கள். (நபியே!) இவ்வாறே அல்லாஹ் தான் நாடியவர்களைத் தவறான வழியில் செலுத்துகிறான். தான் நாடியவர்களை நேரான வழியில் செலுத்துகின்றான். உமதிறைவன் படைகளை அவனைத் தவிர மற்றெவரும் அறிய மாட்டார்கள். இவை மனிதர்களுக்கு நல்லுபதேசங்களேயன்றி வேறில்லை.'' (74 : 31). 3 1 வது வசனத்தை ஆதாரமாகக் கொண்டு இவ்வாராய்ச்சியாளர்கள் பின்வரும் விளக்கத்தைத் தருகின்றனர்.

நரகில் நியமிக்கப்பட்டுள்ள மலக்குகளின் எண்ணிக்கையை அல்லாஹ்வே அறிவான். 30 வது வசனத்தின் கருத்து குர்ஆன் மீது 19 என்னும் எண் ஒரு விஷேட தொடர்பையுடையதாக உள்ளது என்பதாகும். இத்தொடர்பு சில அற்புதத் தன்மைகளையுடையது. இவ்வற்புதங்கள் குர்ஆனை நிராகரிப்போருக்குக் கலக்கத்தையும் சோதனையையும் ஏற்படுத்தும். விசுவாசிகளின் ஈமானை உறுதிப்படுத்தும்.

இவ்விளக்கம் நம் மனதில் முன்பு எழுந்த கேள்விகளை ஓரளவுக்குத் தீர்க்கிறது. எனினும் இது ஒரு புதுக் கேள்வியைத் தோற்றுவிக்கிறது. இப்படிக் குர்ஆனிற்கும் 19 இற்கும் இடையிலிருப்பதாகக் கூறப்படும் அற்புதப் பிணைப்பு என்ன?

இக்கேள்விக்கு விடை காணும் பொருட்டு நாம் குர்ஆனின் பக்கங்களைச் சிறிது புரட்டுவோம். மேற்கூறிய 31 வது வசனம் இஸ்லாத்தின் ஆரம்பகாலத்தில் அருளப்பட்டதாக முன்பு கூறியிருந்தோம். எனவே நாம் தேடும் இவ்வற்புதத் தொடர்பு அதற்கு முன் அருளப்பட்ட ஒரு சில வசனங்களிலேயே காணப்படவேண்டும். குறிப்பாக, முதன்முதலாகப் பெருமானாராவர்களுக்கு அருளப்பட்ட ஸூரா அலக் என்னும் 96ம் அத்தியாயத்தை எடுப்போம். இவ்வத்தியாயத்தின் முதல் ஐந்து வசனங்களுமே ஜிப்ரயீல் (அலை) அவர்கள் பெருமானிடம் முதன்முறை வந்தபோது அருளியவை. முதலில் இவ்வசனங்களுக்கும், பத்தொன்பதிற்கும் ஏதும் தொடர்புண்டா எனப் பார்ப்போம். இவ்வசனங்களிலுள்ள சொற்களை எண்ணுகிறோம். சரியாகப் பத்தொன்பது உள்ளன. அடுத்து இவ்வசனங்களிலுள்ள எழுத்துக்களை எண்ணிப் பார்ப்போம். அவற்றின் தொகை 76. அதாவது, பத்தொன்பதின் ஒரு பெருக்கம் ($76 = 19 \times 4$) இவ்வத்தியாயத்தில் எத்தனை வசனங்கள் உள்ளன? விடை: பத்தொன்பது! இனி, இவ்வத்தியாயம் குர்ஆனில் எவ்விடத்தில் அமைந்துள்ளது? கிட்டிய பக்கத்திலிருந்து, அதாவது, இடதுபக்கத்திலிருந்து இவ்வத்தியாயம் எத்தனையாவதாக உள்ளது? நீங்களாகவே எண்ணிப் பாருங்கள். இங்கும் விடை பத்தொன்பது! ஆம், முதன்முதல் அருளப்பட்ட இவ்வத்தியாயம், அதிலுள்ள வசனங்கள், சொற்கள், எழுத்துக்கள் இவையனைத்தும் பத்தொன்பதுடன் ஒரு அழகிய பிணைப்பையுடையதை நாம் காண்கிறோம். இப்பொழுது, எம் கவனத்தை முன்பு ஈர்த்த 30—வது வசனம் ஒரு கருத்துச்செறிவுடன் நம் கண்முன் தோன்றுகிறது. ''அதன் மீது பத்தொன்பது (உள்ளது)''

குர்ஆனை நிராகரிப்போர் இவ்விடத்தில் ஆட்சேபிக்கலாம். "இதில் என்ன அவ்வளவு பெரிய விஷேடம் உள்ளது? தற்செயலாக ஏற்பட்ட ஒரு தொடர்பாக இது இராதா? நாமும் விரும்பியிருந்தால் இது போன்று 19 வசனங்களைக் கொண்ட ஒரு கவிதையே ஆக்கியிருக்கலாமே." இவர்களுக்குத் தடுமாற்றத்தை உண்டாக்கப் 'பத்தொன்பது' மேலும் தொடர்கிறது. இதற்காக நாம் குர்ஆன் முழுவதையும் புரட்டத் தேவையில்லை. அதனைத் திறந்து அதன் ஆரம்ப அத்தியாயத்தின் ஆரம்ப வசனத்தையேஎடுத்துக் கொள்வோம். நாம் அனைவரும் தினமும் பலமுறை உச்சரிக்கும்.

بسم الله الرحمن الرحيم

என்ற வசனமே இது. இவ்வசனத்தின் கருத்துச்செறிவு பற்றியோ, மகிமை பற்றியோ இங்கு நாம் எதுவும் கூறவில்லை. இதுபற்றி மார்க்க அறிஞர்கள் சிறந்த விளக்கங்களைத் தருகின்றனர். இங்கு நாம் பார்க்கப் போவது அவ்வசனத்தின் அமைப்பிலுள்ள சில சிறப்பியல்புகளையே. முதலில் இதிலுள்ள எழுத்துக்களை எண்ணிப் பாருங்கள். சரியாகப் பத்தொன்பது எழுத்துக்களே உள்ளன! அடுத்ததாக இவ்வசனம் குர்ஆனில் எத்தனை முறை தோன்றுகிறது என்பதைப் பார்ப்போம். விடையை நாம் மனதிலேயே கணித்துவிடலாம். இவ்வசனம் குர்ஆனின் ஒவ்வொரு அத்தியாயத்தின் தலைப்பிலும் தோன்றுகிறது — 9 வது அத்தியாயமான ஸூரா தௌபாவைத் தவிர. குர்ஆனில் எல்லாமாக 114 அத்தியாயங்கள் உள்ளன. எனவே மொத்தமாக அத்தியாயங்களின் ஆரம்பத்தில் இவ்வசனம் 113 முறை தோன்றுகிறது. இது பத்தொன்பதின் பெருக்கமா என ஆவலுடன் பார்க்கிறோம். இல்லை இத்தொகை பத்தொன்பதின் மடங்காக இருப்பதற்கு ஒன்றேயொன்று குறைவாக உள்ளது. ($113 = 19 \times 6 - 1$) இக்குறையை நிவர்த்திக்கக் குர்ஆனில் வேறெங்காவது நடுவில் ஓரிடத்தில் இவ்வசனம் இன்னும் ஒரேயொரு முறை தோன்றுதா என ஆவலுடன் தேடுகிறோம். என்ன ஆச்சரியம், 27ம் அத்தியாயம் 30ம் வசனத்தைப் பாருங்கள். நாம் எதிர்பார்த்தபடியே "பிஸ்மில்லாஹிர்ரஹ் மானிர்ரஹீம்" என்ற வசனம் இங்கு மறைந்து இருக்கின்றது. எனவே மொத்தமாக இவ்வசனம் குர்ஆனில் தோன்றும் முறைகளின் எண்ணிக்கை 114 ஆகிறது. இது பத்தொன்பதின் ஒரு பெருக்கமே. அடுத்து இவ்வசனத்திலுள்ள சொற்களை எடுத்துக்கொள்வோம். இதில் இஸ்மிஅல்லாஹ், அர்ரஹ்மான், அர்ரஹீம் என்ற நான்கு சொற்களே உள்ளன. இச்சொற்கள் ஒவ்வொன்றும் எத்தனை முறை குர்ஆனில் தோன்றுகின்றன என்ற கேள்வி அடுத்து எழுகின்றது. இதற்குரிய விடையைப் பின்வரும் அட்டவணையில் தருகிறோம்.

| வசனம் | இஸ்மி | அல்லாஹ் | அர்ரஹ்மான் | அர்ரஹீம் |
|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 19 | 2698 | 57 | 114 |

இவையொவ்வொன்றும் பத்தொன்பதின் ஒரு பெருக்கமே அ—து $19 = 19 \times 1$, $2698 = 19 \times 142$, $57 = 19 \times 3$, $114 = 19 \times 6$. எனவே இங்கும் வசனம், சொற்கள், எழுத்துக்கள் அனைத்தும் பத்தொன்பதுடன் அழகாகப் பிணைந்துள்ளன. இங்கும் சிலருக்குச் சந்தேகம் எழலாம், யார் இந்தச் சொற்களையெல்லாம் எண்ணிப் பார்த்தது என்று. குர்ஆனிலுள்ள வசனங்கள், சொற்கள், எழுத்துக்கள் ஆகியவற்றைக் கணிப்பது புதிதானதொன்றல்ல. இவற்றைக் கணிப்பது மட்டுமன்றி, ஒவ்வொரு சொல்லும் எவ்வெவ்விடங்களில் தோன்றுகின்றன போன்ற விபரங்களைத் தரும் அகராதி போன்ற புத்தகங்களும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே வந்துவிட்டன. இப்புத்தகங்களினுதவியால்

நாம் எந்தவொரு சொல்லும் குர்ஆனில் எத்தனைமுறை வருகிறது என்பதை எளிதில் எண்ணி விடலாம். ஆனுல் நாம் மேலே தந்த தரவுகள் இப்படிப் பெறப்பட்டவையல்ல. இன்றைய நவீன யுகத்தின் அற்புதச் சாதனமான கம்பியூட்டரின் உதவியால் பெறப்பட்டவையாகும். அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் ரசாத் கலீபா என்பவர் அண்மையில் குர்ஆனைக் கணணிப்படுத்தியுள்ளார். (Computerized) இதன்மூலம் குர்ஆனில் எண்ணிக்கை சம்பந்தப்பட்ட எந்தவொரு விபரத்தையும் நாம் உடனடியாகப் பெற்றுக் கொள்ளலாம். மேலே நாம் அட்டவணையில் தந்த தரவுகளும், இக்கட்டுரையில் நாம் குறிப்பிடும் வேறுசில விபரங்களும் இவரது ஆராய்ச்சியின் பயனுகவே கிடைத்தவையே.

இதுவரை நாம் "பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்" என்ற குர்ஆனின் முதலாவது வசனத்திற்கும், பத்தொன்பதிற்கும் இடையிலுள்ள பல தொடர்புகளைக் கண்டோம். இவை நமக்கு, குர்ஆன் பற்றிய பல படிப்பினைகளைத் தருகின்றன. குர்ஆன் வசனங்கள் ஒரு மனிதரின் கற்பனையில் தற்செயலாக உதித்தவையோ அல்லது அவரால் திட்டமிடப்பட்டு இயற்றப்பட்டவையோ அல்ல. எல்லாம்வல்ல அல்லாஹ்விடமிருந்து அருளப்பெற்ற வேத வசனங்களே இவை. இப்படியான வசனங்களை மனிதர்கள் இயற்றுவது ஒரு புறமிருக்க அவற்றில் சிறு மாற்றங்களையேனும் செய்ய அவர்களால் இயலாது. குர்ஆனிலுள்ள வசனங்களில் ஒன்றையாவது கூட்டவோ அல்லதுகுறைக்கவோ அவர்களால் முடியாது. உதாரணமாக, மனிதர்கள் அனைவரும் சேர்ந்து குர்ஆனுக்கு ஒரு வசனத்தைக் கூட்ட முடிவுசெய்தால் அவர்கள் இலகுவாகச் செய்யக்கூடிய ஒரேயொரு காரியம், ஸூரா தௌபாவின் தலைப்பில் "பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்" என்ற வசனத்தைச் சேர்ப்பதாகும். ஆனுல் அப்படி ஒரேயொரு வசனத்தையேனும் சேர்ப்பதால் கிடைக்கும் புத்தகம் குர்ஆன் அல்ல. அது ஒரு போதும் குர்ஆனிற்குச் சமமாகாது என்பதை நமது பகுத்தறிவே இப்போது கூறுகிறது. ஓரிடத்திலாவது "பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்" என்ற வசனத்தைக் கூட்டுவதால் நாம் முன்பு பார்த்த அற்புதக் கணிதத் தொடர்புகள் அற்றுப் போவதே இதற்குக் காரணமாகும்.

இது போன்று பத்தொன்பதிற்கும் குர்ஆனிற்கும் இடையிலுள்ள இன்னும் பல தொடர்புகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். உதாரணமாகக் குர்ஆனிலுள்ள சில அத்தியாயங்கள் முதலெழுத்துக்களுடன் ஆரம்பமாவதை நாம் அறிவோம். அதாவது சில அத்தியாயங்களின் ஆரம்பத்தில் அலிப் — லாம் — மீம், ஹா — மீம், யா — ஸீன் போன்ற எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவ்வெழுத்துக்கள் அவ்வவ்வத்தியாயங்களின் ஒரு பகுதியாகக் கருதப்படினும், இவ்வெழுத்துக்கள் எதைக்குறிக்கின்றன என்பதை யாரும் திட்டவட்டமாகக் கூறவில்லை. உண்மையை அல்லாஹ்வே அறிவான். அனுல் இப்படியான அத்தியாயங்களில் பெரும்பாலானவற்றில் இவ்வெழுத்துக்கள் தோன்றும் எண்ணிக்கைக்கும் பத்தொன்பதுக்கும் ஒரு தொடர்பு இருப்பதாகத் தெரியவந்துள்ளது உதாரணமாக 50 வது அத்தியாயத்தில் காப் என்ற எழுத்து தனியாக முதலெழுத்தாக வந்துள்ளது. அதே வேளையில் இவ்வத்தியாயத்திலுள்ள காப்களின் எண்ணிக்கை 57. அதாவது $19 \times 3$. இதேபோல் 36ம் அத்தியாயத்தில் யா — ஸீன் என்ற எழுத்துக்கள் முதலெழுத்துக்களாக வந்துள்ளன. அத்தோடு இவ்வத்தியாயத்தில் இவ்விரு எழுத்துக்களும் தோன்றும் எண்ணிக்கை 285 ($= 19 \times 15$) ஆக உள்ளது. இன்னும் பல அத்தியாயங்களிலும் இதேபோன்ற தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. பத்தொன்பதுக்கும் குர்ஆன் வசனங்களுக்கும் இடையிலுள்ள தொடர்பு பற்றி ஆராய்ச்சி செய்த அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் ரசாத் கலீபா அவர்களும், தென்னுபிரிக்-

காவைச் சேர்ந்த அஹ்மத் தீதாத் அவர்களும் இது போன்ற இன்னும் பல அரிய தகவல்களை தாங்கள் வெளியிட்டுள்ள புத்தகங்களில் தருகின்றனர்.

இதுவரை நாம் பார்த்தவற்றிலிருந்து குர்ஆன் ஒரு இணையற்றகணித நிபுணனின் கைவண்ணமென்பதையே உணர்கிறோம். அதிலுள்ள ஒவ்வொரு சொல்லும் எழுத்தும் அவனால் திட்டமிடப்பட்ட ஒரு அழகிய கணித அமைப்பிற்கேற்பவே தோன்றுகின்றன. சுருக்கமாகச் சொல்லுவதென்றால் குர்ஆன் ஒரு அற்புதச் சுடர் அதிலிருந்து வெளியாகிய ஒரேயொரு ஒளிக்கதிரையே நாம் இதுவரை கண்டோம். இதே சுடரிலிருந்து வெளியாகும் இன்னொரு ஒளிக்கதிரை — இன்னொரு — அற்புதத்தை — இக்கட்டுரையில் நாம் வேறொரிடத்தில் பார்ப்போம்.

இவ்விடத்தில், நிராகரிப்போர் குர்ஆன் பற்றிப் பரப்பும் தப்பான கருத்துக்கள் பற்றிக் குறிப்பிடுதல் பொருத்தமாகும். அண்மையில் எமது வளாக நூல் நிலையத்தில் முஸ்லிமல்லாத ஒரு ஐரோப்பியரால் எழுதப்பட்ட குர்ஆன் மொழிபெயர்ப்பு கருத்துரைப் புத்தகமொன்றைப் 1 பார்த்தேன்.

**Foornote 1. Rev. E. M. Wherry. M. A, A Comprehensive Commentary On Quran. Trubner & Co. London. *(1882)***

பல வால்யூம்களைக் கொண்டிருந்த இப்புத்தகத்தில், குர்ஆன் பெருமானாரின் ஒரு படைப்பே என்ற தனது கருத்தை வலியுறுத்த ஆசிரியர் மிகுந்த பிரயத்தனம் எடுத்திருந்தார். தனது கருத்துக்கு ஆதாரமாகப் பல விளக்கங்களைக் கொடுத்தார். அவற்றுள் முதலிரண்டு விளக்கங்களையும் வாசித்தேன். அதன்பின் அவரது மற்றைய விளக்கங்களை வாசிக்கவேண்டிய தேவையேற்படவில்லை. அவ்விரு 'விளக்கங்களையும்' இங்கு தருகிறேன். அவரது முதலாவது விளக்கம் 'பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர் ரஹீம்' என்ற வசனத்தைப்பற்றியது. இதே வசனத்தை யொத்த கருத்தையுடைய ஒரு வசனத்தை அன்றைய பாரசீக மதகுருமார்கள் உபயோகித்து வந்தார்கள் என்றும் அதைப்பார்த்துத் தான் பெருமானார் இவ்வசனத்தை யுண்டாக்கினார் என்றும் இவர் குறிப்பிட்டுள்ளார். நாம் முன்பு இதே வசனத்திற் கண்ட கணித இயல்புகளை நினைவு கூற இவரது வாதம் வலுவிழந்து விடுகிறது. அல்லாஹ்வுக்கு அழகிய திருநாமங்கள் தொண்ணூற்றியொன்பது இருக்கின்றன. இவற்றை வைத்துக்கொண்டு பெருமானாரவர்கள், 'அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பிக்கிறேன்' என்ற கருத்தையுடைய வசனங்கள் எத்தனை ஆக்கியிருக்கலாம்? விடை: 99 × 98 = 9702. இந்த 9702 வசனங்களிலிருந்தும் பெருமானாரவர்கள் எப்படி, நாம் கண்ட அற்புதப்பண்புகளைக் கொண்ட "பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்" என்ற வசனத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். அப்படி அவர்களே அச்சொல்லைத் தேர்ந்தெடுத்திருந்தால், அவர் அவ்வசனங்கள் ஒவ்வொன்றிலுமுள்ள எழுத்துக்களை எண்ணியிருக்கவேண்டும். அதே போன்று இருபத்து மூன்று வருடங்களாகக் குர்ஆனை இயற்றிக்கொண்டிருக்கும் போது, தொடர்ச்சியாக அல்லாஹ், அர்ரஹ்மான் போன்ற சொற்கள் எத்தனை முறைகள் வந்துள்ளன என்பதையும் மனதில் கணக்கு வைத்திருக்கவேண்டும். எழுதவாசிக்கத் தெரியாத பெருமானாரவர்கள் நிச்சயம் இக்காரியத்தைச் செய்திருக்க முடியாது. ஒரு கணித மேதையால் கூட சாதிக்க முடியாத ஒன்று இது எனவே "பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்" என்ற சொல்லின் ஆசிரியன் இணையற்ற அல்லாஹ்வே தான்.

அவரது இரண்டாவது விளக்கம், நாம் முன்பு பார்த்த முதலெழுத்துக்களையுடைய அத்தியாயங்களைப் பற்றியது. இவ்வத்தியாயங்களிலுள்ள முதலெழுத்துக்கள் எதைக் குறிக்கின்றன என்பதற்கு இவர் கூறும் விளக்கம் விநோதமானது. எழுத வாசிக்கத் தெரியாத பெருமானாரவர்கள் குர்ஆன் வசனங்கள் அருளப்படும் போது அவற்றை எழுதிக்கொள்வதற்காகப் பல எழுத்தாளர்களை நியமித்திருந்தார்கள் என்பது நாமறிந்ததே இவர்களில் சிலர் தாம் எழுதிய குர்ஆன் கையெழுத்துப் பிரதிகளின் தலைப்பில் தந்தம் பெயர்களின் முதலெழுத்துக்களைக் குறித்தனரென்றும், இவையே பிற்காலத்தில் குர்ஆன் ஒன்று சேர்க்கப்பட்டபோது தவறுதலாக வந்திருக்கலாம். என்றும் இவர் காரணம் காட்டுகிறார். நாயகத் தோழர்கள் பற்றியும், அவர்கள் குர்ஆன் வசனங்களுக்கு அளித்த கண்ணியம், பற்றியும் சிறிதளவாவது அறிந்த எவரும், இப்படியொரு தவறு நடந்திருக்கலாம் என நினைக்கமுடியாது. அது ஒரு புறமிருக்க நாம் மேலே கண்ட கணிதத் தொடர்புகளும் இவரது வாதத்தைத் தகர்த்தெறிகின்றன.

இனி நாம் முன்பு கூறியபடி குர்ஆனில் நாம் காணக்கூடிய இன்னொரு கணித அழகை — அற்புதத்தைப் — பார்ப்போம் அரபு மொழியிலுள்ள எழுத்துக்களை இரு வகுப்புக்களாகப் பிரிக்கலாம். முதலாவது வகையில் ط.ص.س.ر.د.ح.ا போன்ற எழுத்துக்களும், இரண்டாவது வகையில் ح.ج.ث.ت.ب போன்ற எழுத்துக்களும் உள்ளன. அதாவது, முதலாவது வகுப்பில் 'நுகத்' என்னும் புள்ளி இல்லாத எழுத்துக்களும், இரண்டாவதுவகுப்பில் 'நுகத்' உள்ள எழுத்துக்களும் அடங்குகின்றன. இரு வகுப்புகளிலும் ஏறக்குறைய சம எண்ணிக்கை யுள்ள எழுத்துக்களேயுள்ளன. கணிதவியலில் ஆர்வமுள்ள ஒருவர் மனதில் இப்பொழுது பின்வரும் கேள்வி எழுகிறது.

முழுக்குர்ஆனிலும் நுகத் இல்லாத எழுத்துக்களினுலான வசனங்கள் எத்தனையுள்ளன ?

நிகழ்தகவின் அடிப்படையில் இதற்குரிய அண்ணளவான விடையை நாம் கணிக்கலாம். ஆனல் குர்ஆனில் நேரடியாகத் தேடியும் இவ்வசனங்களை நாம் கண்டு பிடித்து விடலாம். அப்படிப் பார்க்கும் போது குர்ஆன் முழுவதிலும் பரந்து ஏறக்குறைய இருபத்திஐந்து வசனங்கள் காணப்படுகின்றன. இதில் அதிசயமொன்றுமில்லை. ஆனல் இந்த இருபத்திஐந்து வசனங்களும் தெரிவிக்கும் கருத்தைப்பார்க்கும் போதுதான் நமக்கு அதிசயம் ஏற்படுகின்றது. குர்ஆன் முழுவதிலும் பரந்துள்ள இவ்வசனங்கள் ஒரே கருத்தைத்தான் தெரிவிக்கின்றன. அது மட்டுமல்ல, குர்ஆன் முழுவதிலும் எந்தவொரு அடிப்படை உண்மை வலியுறுத்தப்படுகின்றதோ அந்த அடிப்படை உண்மையின் சாரம் தான் இந்த இருபத்திஐந்து வசனங்களில் ஒவ்வொன்றிலும் தொனிக்கின்றன. வெளித்தோற்றத்திலுள்ள ஒரு பண்பை அடிப்படையாக வைத்து வடித்தெடுக்கப்பட்ட இவ்வசனங்கள், கருத்திலும், தேர்ந்தெடுக்கப்பட்ட வைரங்களாக ஒளி விடுவதே நமது ஆச்சரியத்திற்குக் காரணம். இவ்வசனங்களை இருபகுதிகளாகப் பிரிக்கலாம். முதற்பகுதி வசனங்கள் அல்லாஹ் ஒருவனே என்ற அடிப்படை தத்துவத்தையும், மற்றவை பெருமானார் அல்லாஹ்வின் திருத்தூதரே என்பதையும் எடுத்துரைக்கின்றன. உதாரணத்திற்குப் பின்வரும் வசனங்களைக் குறிப்பிடலாம்.

اللّٰه لا إله إلا هو

وإلهكم إله واحد

محمد رسول الله

وما محمد إلا رسول

1. அல்லாஹ் - அவனைத் தவிர வேறு நாயகனில்லை. (4 : 87)

2. (மனிதர்களே !) உங்கள் வணக்கத்துக் குரியவன் வணக்கத்துக்குரிய (அல்லாஹ்) ஒருவனேதான். (2 : 163)

3. முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ் வின் திருத்தூதராக இருக்கிறார்கள். (48 : 29)

4. முஹம்மது (ஸல்) ஒரு தூதரேயன்றி (இறக்காமல் இருக்கக்கூடிய ஆண்டவன்) அல்ல. (3 : 144)

மேலே பார்த்த வசனங்களை நோக்கும் போது எமது கவனம் முஸ்லிம்களின் மூல மந்திரமான கலிமா தைய்யிபாவின் பக்கம் செல்கிறது.

لا إله إلا الله محمد رسول الله

என்ற இவ்வசனத்தின் வெளிப்படையான கருத்து பின்வருமாறு. ''அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குரிய நாயகன் வேறுயாருமில்லை. முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் திருத்தூதருமாயிருக்கும்.'' இவ்வசனத்தின் ஆழமான கருத்துக்கள் பற்றியும், அதன் மகிமை பற்றியும் மார்க்க அறிஞர்கள் நிறைய விளக்கங்களைத் தருகின்றனர். எவனொருவன் இவ்வசனத்தைப் பொருளுணர்ந்து மொழிகிறானோ அவன் உடனே முஸ்லிமாகி விடுகிறான். இவ்வசனத்தை ஒருவர் ஒரு முறை மொழிந்தால் அவருக்கு இலட்சக்கணக்கான நன்மைகள் பதியப்படுவதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறு ஆன்மீக அடிப்படையில் அதியுயர்ந்த அந்தஸ்தையுடைய இந்தக் கலிமாவின் வெளி அமைப்பின் மீது எமது கணிதக் கண்ணோட்டத்தைச் செலுத்துகிறோம். என்ன அதிசயம்! அதன் வெளித்தோற்றத்திலும் நாம் ஒரு ஒப்பற்ற கணித அழகைக் காண கிறோம். இவ்வசனம் 24 எழுத்துக்களைக் கொண்டது. இதிலுள்ள தனிஅழகு — அதிசயம் இவ்வெழுத்துக்கள் அனைத்தும் நுகத் இல்லாதவையாக இருப்பதாகும். அரபு மொழியில் 24 எழுத்துகளைக் கொண்ட ஒரு வசனம் நுகத் இல்லாமல் இருப்பது மிக அரிதான ஒரு காரியமே. எவ்வளவு அரிதானதென்பதை கணிதத்தின் துணையால் பார்ப்போம்.

அரபு மொழியில் நுகத் இல்லாத எழுத்துக்களும் உள்ள எழுத்துக்களும் எண்ணிக்கையில் சமமாகவிருப்பதால் ஒரு எழுத்து நுகத் இல்லாமல் இருப்பதற்குரிய நிகழ்தகவு $\frac{1}{2}$ ஆகும். எனவே 24 எழுத்துக்களையுடைய ஒரு சொல் நுகத் இல்லாமல் இருப்பதற்குரிய நிகழ்தகவு $= (\frac{1}{2})24 = 1 / 1677726$. இதன் கருத்து, ஒவ்வொன்றும் 24 எழுத்துக்களைக்கொண்ட 1677726 வசனங்களை எடுத்தால் தான் அதில் நாம் நுகத் இல்லாத ஒரு வசனத்தைக் காணக்கூடிய சாத்தியம் உண்டு. எனவே வெளியமைப்பிலுங் கூட இவ்வசனம் ''கோடியில் ஒன்று'' என்ற மகிமையை யுடையதாகக் காணப்படுகிறது.

இதுவரை நாம் பார்த்த உதாரணங்களனைத்தும் திருக்குர்ஆன் மனித சக்திக்கப் பாற்பட்ட ஒன்று என்பதையே நமக்கு உணர்த்துகின்றன. அறிவுடையோர் சிந்தித்து நல்லுணர்ச்சி பெறும் பொருட்டே அல்லாஹ் இப்படியான பல அத்தாட்சிகளைக் குர்ஆனில் பொதித்து வைத்துள்ளான்.

"அவ்வாறன்று, கல்வி ஞானங் கொடுக்கப் பெற்றோர்களின் இதயங்களில் (பதியத்தக்க) வசனங்களாக இது இருக்கின்றது. ஆகவே அக்கிரமக்காரர்களைத் தவிர மற்றெவரும் நம்முடைய வசனங்களை நிராகரிக்க மாட்டார்கள்"

இங்கு நாம் ஒரு முக்கிய விடயத்தை மனதில் கொள்ளவேண்டும். திருக்குர்ஆன் அருளப்பட்ட நோக்கம் நாம் இப்படியான அற்புதங்களைக் கண்டு மகிழ்வதற்கோ அல்லது தர்க்கம் புரிவதற்கோ அல்ல. அது கூறும் போதனைகளைச் சிந்தித்துணர்ந்து, அதன் கட்டளைகளுக்கேற்ப செயற்படுவதன் மூலம் மனித இனம் ஈடேற்றம் பெறவே அது அருளப்பட்டுள்ளது.

"நிச்சயமாக இந்தக் குர்ஆன், (மனிதர்களுக்குத் தெளிவான) மிகநேரான வழியை அறிவிக்கின்றது. அன்றி விசுவாசங் கொண்டு நற்கருமங்கள் செய்வோருக்கு, நிச்சயமாக மிகப்பெரிய கூலியுண்டென்றும் நன்மாராயம் கூறுகிறது. *(17 : 9)*

"(நபியே!) உம்முடைய பாஷையில், நாம் இதை (இறக்கி) எளிதாக்கி வைத்ததெல்லாம், இதன் மூலம் பயபக்தியுடையோருக்கு நன்மாராயம் கூறுவதற்கும், (வீண்) விதண்டா வாதங்கள் செய்யும் ஜனங்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகவுமே". *(16 : 97)*

"(நபியே!) நிச்சயமாக நாம் மனிதர்களு(டைய நன்மை)க் காகவே முற்றிலும் உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை உம்மீது அருளினோம். ஆகவே எவன் (இதனைப்) பின்பற்றி நடக்கின்றானோ, அவனுக்கே அது நன்று. எவன் (அதிலிருந்து) வழிதப்பிவிடுகின்றானோ அது அவனுக்கே தீங்காக முடியும். (நபியே!) நீர் அவர்களை (நேர்வழியில் நடக்குமாறு நிர்ப்பந்தித்து)க் காப்போரல்ல. *(39 : 41)*

எனவே இப்புனித திருமறை கூறும் நல்லுபதேசங்களைக் கேட்டு அதன்படி ஒழுகுவதன் மூலம் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பொருத்தத்தைப் பெற்றுக் கொள்ள நாமனைவரும் முயற்சிப்போமாக.

With the best wishes

FROM:

# AL-HAJ. C. L. M. ABUL HASSEN

21, Stadium Road,
Chaina fort,
BERUWALA.

28/A, Fifth Lane,
Colpetty.
COLOMBO.
T'Phone: 36780

*Best Wishes from :*

**GLASS HOUSE**

General Merchants
&
Lorry transporters

182, K. K. S. Road, Jaffna.
T. Phone: 201

*Best compliments from :*

**FITTEXT**

Tailoring

9, Grand Bazaar,
JAFFNA.

T. Phone : 8199

**அன்பளிப்பு :**

- O மாவரி,
- O கோழிப்பண்ணை, விவசாய, வீட்டுப் பாவனையாளர்களுக்கேற்ற தகரச் சாமான்கள்

மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

பிலிவேலி ஓடர்கள் உடன் கவனிக்கப்படும்

**தன்மிரு இண்டஸ்ரீஸ்**

( டிங்கர் வேர்க்ஸ் )

மும்லாக் பில்டிங்,
45, ஜும்மா மொஸ்க் லேன்,
( பஜார் லேன் )
( ஸ்ரான்லி றோட் பக்கம் )
யாழ்ப்பாணம்.

*உயர்ந்த ரகம் !* *நிதான விலை !*

**ஏ. கே. பிறதர்ஸ்**

22, புதிய மத்திய சந்தை,
யாழ்ப்பாணம்.
போன் : 7718

- △ பலவகை பிடவைத் தினிசுகள்
- △ தரமான றெடிமேட் உடைகள்
- △ அழகுசாதனப் பொருட்கள்

அனைத்தையும் ஒரே இடத்தில்
குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ளக்கூடிய
சிறந்த ஸ்தாபனம்

**A. K. Brothers**

22, New Central Market,
JAFFNA.

*With the best compliments from :*

# Buhary & Co.

**JEWELLERS**

154, Second cross street,
Pettah,
COLOMBO - 11.

T. Phone } Office: 28149
Residence : 28511

Cable : 'BURANDCO'

*With best compliments frcm;*

**SHUMS JEWELLERS**

168, Main Street,
COLOMBO.

*With Best compliments from :*

**NAINA ENTERPRAISES**

Dealer in: Empty Drums, Empty Container, G. I Ware & Hardware

*Agent & Distributor for;*
CEYLON OXYGEN LTD.

No 46. 3rd Cross Street
**COLOMBO - II**
T'Phone: 22021

# துணிந்தெழுவாய்!

எம். வை. முஹம்மது இபுறுஹீம்
கலைப்பீடம் — 1-ஆம் வருடம்,

இருந்ததுதான் பேரரசு பெருஞ்சிறப்பு
இன்றெங்கே ஏனென்று சிந்திக்காது
அருந்துகளாய் அடிநாக்கைச் சப்புக்கொட்டும்
அவர்களது ருசிச்சுகிப்பில் அர்த்தம்தேடு!

அஞ்ஞானத் தில்வாழ்ந்த அராபியர்கள்
அரசாண்டார் அறிவாண்டார், அதன்பேற்றினல்
விஞ்ஞானத் தின்தலையாய் வென்றதெல்லாம்
வீணுயிற்றே னென்று விஞவெழுப்பு.

உள்ளத்தில் களவெல்லாம் ஒளிர்வேயில்லை!
உயர்மறையின் விதிமுறைதன் உணர்வேயில்லை!
முள்ளைத்தின் றேசதையை வீசும்போக்கால்
முசீபத்தில் பலியானுர், முடியிழந்தார்!

காணுகின்ருேம், கண்முன்னே கனபுதினம்
ஹறும்முழுதும் ஹலாலாகிக் களமிறங்க
பேணுகின்ருே மில்லைமறைப் பேறுகளை
பெயர்தவிர வேறென்ன பெருமையுற்ருேம்!

மீலாத்து மேடைகளில் 'மைக்' கதிரும்!
மேலான சலவாத்து விண்பறக்கும்!
கோலாக லத்துடனே கொண்டாடிப்பின்
கலைந்தவுடன் வேதாளம் மரத்திலேறும்!

"ஞாலத்தில் நிகருண்டோ நபிகளைப்போல்
நாமெல்லாம் அன்னுரின் உம்மத்" தென்பார்!
கோலத்தில் மட்டுமிது; கொள்கையல்ல
கொன்ருெழிக்கத் தீன்வாளே துணிந்தெழுவாய்!

மரத்தூளைப் பொடிபோட்டு மூக்கைப்பொத்தி
மகுஷர்வரைத் தும்மலிடும் பிரமுகர்க்கு
உரத்தூதப் பொடிபோடும் ஒட்டுண்ணிகள்
உதிர்ந்துவிழத் துணிந்திடுவாய் துணிந்தெழுவாய்!

அக்காலப் பெருமையினை அளந்தளந்து
அரபிகளின் அடுப்புகளில் கூதல்காயும்
இக்காலப் பெருமனிதர் இற்ருெழிய
இலட்சியத்தின் கருவேற்றுத் துணிந்தெழுவாய்!

# இலங்கை முஸ்லிம் விடுதலை

**எம். எஸ். எச். எம். முஸ்தபா**
*கலைப்பீடம் — 1ம் வருடம்*

விடுதலை பெறுவதெனில் புரட்சியொன்று புரியவேண்டும். உலக வரலாற்றிலே எந்தவொரு சமுதாயமும் புரட்சியொன்றின்றி தம்மை மிதித்துக் கொண்டிருந்த பல் வகையான அரக்கர்களின் கோரப் பிடியில் இருந்து விடுதலை பெற்றனவென்று கூற முடியாது. இத்தகைய புரட்சிகள் இரத்தம் சிந்தியோ சிந்தாமலோ அமைந்திருக்கலாம். அவை அரசியல் புரட்சியாகவோ, சமுதாயப் புரட்சியாகவோ அல்லது பொருளாதாரக் கொள்கைப் புரட்சியாகவோ இருக்கலாம்.

இங்கு ஆராயப்படப்போகும் விடயம் இலங்கை முஸ்லிம்களின் விடுதலை பற்றிய தாகும். இன்றைய இலங்கை முஸ்லிம் சமுதாயம் கல்வி, கலை, கலாச்சாரம், பண் பாடு, சமயம், பொருளாதாரம், சமூகம் என்ற சகல துறைகளிலும் பின்னடைந்து வலுவிழந்து அழிவுப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. உலக முஸ்லிம்களின் நிலையும் இதுவே. எனினும் அவர்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர். விடுதலைத்தாகம் அவர்களிடையே குடிகொண்டு போராட்டத்தில் இறங்கத் தயாராகி விட்டனர்.

இலங்கை முஸ்லிம்களும் இதில் இருந்து விடுதலை பெறுவது அவசியமும், அவசர முமாகும். எமது சகல துறைகளிலும் ஊடுருவி அவற்றை அடிமைப்படுத்திக் கொண் டிருக்கும் தீய சக்திகளைப் படிப்படியாக நோக்குவோம்.

முதலாவது எமது கல்வி, கலை, கலாச்சாரம் முதலிய துறைகளில் ஊடுருவித் தான் நினைத்தபடி ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் மேற்கத்திய நாகரிகத்தின் தாக்கமும், ஸியோனிஸ்டிகளின் சூழ்ச்சியும். அடுத்தது எமது பொருளாதார, சமூக, சமயத்துறைகளைத் தன்வயப்படுத்திக் கொண்டிருக்கும் முதலாளித்துவ, ஐரோப்பிய சிந்தனைகளின் தாக்கம். மற்றது எமது உயர்பண்பாடு, நேர்வழி என்னும் துறை களில் இருந்து எம்மைத் திசை திருப்பிக் கொண்டிருக்கும் மிருக உணர்ச்சிகளின் மேலாதிக்கம்.

இவற்றை இனங்கண்டு அவற்றிலிருந்து விடுதலைபெற ஒவ்வொரு தனிமனிதனும் துணியவேண்டும். ஒவ்வொரு தனிமனிதனும் தன்னிலையில் இருந்து மாறும்போது சமுதாயம் தானாகவே மாறி விடுகின்றது.

ஒவ்வொரு தனிமனிதனும் இங்கு "ஜிஹாத்" என்னும் புனிதப் போராட்டம் நடத்த வேண்டியுள்ளது. போராட்டம் நடத்துவதற்குப் பலத்த ஆயுதம் எம்மிடம் தேவை. அந்த ஆயுதம்தான் நேர்வழி எனும் அல்லாஹ் காட்டிய பாதையாகும். இந்த ஆயுதம் எம்மிடத்திற் பலமாக இருக்கும்போது எதிரிகளை இலகுவில் அடக்கிவிட முடியும். அது பலவீனமுறும்போதுதான் எதிரிகள் எம்மை ஆட்கொண்டு விடுகின்றனர். இறைவன் மனிதன் சமுதாயத்திற்களித்த தனது திருமறையில் "எவர்கள் நம்முடைய வழியில் (செல்ல) முயற்சிக்கிறார்களோ அவர்களை நிச்சயமாக நாம் நம்முடைய (நேரான) வழியில் செலுத்துகிறோம். நன்மை செய்வோர்களுடன் நிச்சயமாக அல்லாஹ் இருக்கிறான்." (29 : 69) என்று எமக்கு ஊக்கம் தந்து கொண்டிருக்கின்றான்.

உண்மை முஸ்லிம் என்று கூறும்போது ஒரே இறைவனுக்கு மாத்திரம் அடி பணிந்து அந்த இறைவனின் தூதரைப் பூரணமாகப் பின்பற்றியவனுக இருப்பவனையே குறிக்கும். அவன் அல்லாஹ்வின் கட்டளைகளை வெறுமனே நம்புபவனுக மாத்திரமன்றி அதனை வாயால் உரைப்பவனுகவும், உடலாற் கிரியை புரிபவனுகவும் இருக்கவேண்டும். ஒருவனது பெற்ருேர் முஸ்லிம் என்றதாலோ, அவன் முஸ்லிம் பெயரைச் சூட்டிக் கொண்டிருப்பதாலோ அல்லது தாடிவைத்துத் தொப்பியணிந்து கொண்டிருப்பதால் மாத்திரமோ முஸ்லிமாகிவிட முடியாது.

நாம் இப்போது காணும் சமூக அமைப்போ மிகமிக்க கவலைக்குரிய ஒரு அமைப்பாகும். பக்கத்து வீட்டிலே குழந்தை 'பசி, பசி' என்று கதறுகின்றது. ஒரு வேளை உணவுக்காகப் பக்கத்து வீட்டுக்காரன் மாடாய் உழைத்தும் வறுமையால் வாடுகின்ருன். அடுத்திருக்கும் மாடி வீட்டிலோ — அது ஒரு முஸ்லிம் முதலாளியின் வீடு — புரியாணிச் சாப்பாடு நாய்க்கென சாக்கடையிலே கொட்டப்படுகின்றது. மற்ருெரு போடியார் வீட்டிலே ஆடம்பரமான ஒரு திருமண வைபவம்; அங்கு உயர்ரக சாப்பாடு; இனிமையான சங்கீதக் கச்சேரி. பக்கத்துக் குடிசையிலோ முப்பது வயதைத் தாண்டியும் திருமணம் செய்துகொள்ள முடியாமல் வறுமையால் வாடும் இரண்டு குமரிப் பெண்கள் தமது ஓலைக் கொட்டிலின் யன்னல் ஓரமாக நின்று இந்தக் கண் கொள்ளாக் காட்சியைப் பார்த்துக் கொண்டே நிற்கின்றனர்.

''பக்கத்து வீட்டான் பசித்திருக்கத் தான் மாத்திரம் வயிறு புடைக்க உண் பவன் முஸ்லிமல்லன்'' என்று எமது வழிகாட்டி, உத்தம தூதர் முகம்மது (ஸல்) அவர்கள் எமக்கிட்டுள்ள கட்டளையை இன்றைய இஸ்லாமிய சமுதாய அமைப்பு கடைப் பிடிக்கின்றதா? இன்று முஸ்லிம்கள் என்று கூறிக்கொண்டிருப்போர் இஸ்லாம் என்று வேறெதையோ புரிந்து கொண்டிருக்கின்ருர்கள் புரிய வைத்துக் கொண்டிருக்கின்ருர்கள்.

இன்று இஸ்லாத்தைப் பற்றிக் கற்றுள்ளவர்களும் இஸ்லாம் என்ருல் தொழுகை, இறைவனைத் துதிப்பது, 'சூபித்துவம்' என்பனவற்றைக் கொண்ட ஒரு மதம். குர்ஆன் இறைவனின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காக ஓதப்படும் ஒரு புனித நூல். மேலும் இஸ்லாம் என்பது மகோன்னத ஒழுக்கநெறிகளைப் பின்பற்றுமாறு போதனையளவில் விடுக்கப்படும் ஒரு அழைப்பாகும் என்று கருத்தையே கொண்டுள்ளனர்.

இஸ்லாம் பற்றிய இக்கருத்தை முஸ்லிம்கட்குக் கற்றுக் கொடுத்தவர்கள் ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகளே. இவர்கள் தம்வசப்படுத்திக் கொண்டிருந்த முஸ்லிம் நாடுகளில் இக்கருத்துக்களையே மாணவர்களுக்குக் கொடுத்தனர். இஸ்லாம் என்பது ஒரு சமூக பொருளாதார முறையைக் கொண்ட ஒரு ஆட்சியமைப்பு என்பது பற்றியோ, அதன் அரசியல்அமைப்புப் பற்றியோ, உள்நாட்டு வெளிநாட்டுக் கொள் கைகளுக்கான அதன் அடிப்படைகள் பற்றியோ, அதன் கல்விக் கொள்கைகள் பற்றியோ, அது ஒரு வாழ்க்கைநெறி என்பது பற்றியோ எதுவும் மாணவர்களுக்கு ஊட்டப்படவில்லை. ''அரசியலில் சமயம் கலக்கக் கூடாது, இஸ்லாத்தில் இருந்து விஞ்ஞானம் பிரிக்கப்படவேண்டும்'' என்ற கொள்கை அனைத்தும் ஐரோப்பியர் கற்றுக் கொடுத்தவையே. இக் கொள்கைகளிலிருந்து அவர்களைப் பிரிக்க முடியாதவாறு இன்றைய முஸ்லிம்கள் அடிமைப்படுத்தப்பட்டு விட்டனர். எனவேதான் நாம் இக் கொள்கையிலிருந்து விடுதலை பெற எமது சிந்தனையுடன் போராட்டம் நடாத்த வேண்டியுள்ளது.

சிலர் தாம் பெரும் மதபக்தர்கள் என்று காட்டிக் கொண்டு சமுதாயத்தையே ஏமாற்றித் தமது செல்வ வளத்தை மேலும்மேலும் விரிவாக்குவதிலேயே ஈடுபட்டுள்ளனர். ''நாம் இறைவனை வணங்குவதால் எமக்கு இறைவன் நிறைய அள்ளித் தருகின்றான்'' என்று கூறிக் கொண்டு இஸ்லாம் அனுமதிக்காத எல்லா வழிகளிலும் பணம் சம்பாதிக்கின்றனர். பதுக்கல், கொள்ளைலாபம், தொழிலாளியைச் சுரண்டல், நுகர்வோரை ஏமாற்றுதல் இவைகள் இவர்கள் பணம் திரட்டும் முக்கிய வழிகள். இறைவன் கூறும் ''உண்மையாகவே விசுவாசம் கொண்டு பூரணமாகவே இஸ்லாத்தில் நுழைந்துவிடுங்கள்'' என்ற வார்த்தைகளை இவர்கள் உணரத் தவறிவிட்டனர். இவர்களது தெய்வீக உணர்வுகளையும் இஸ்லாமிய அறிவினையும், பணம் சம்பாதிக்கவேண்டும், நான் உலகில் பெருமைக்குரிய செல்வந்தனாகவேண்டும், பல்லாயிரம் மக்கள் வந்து எனக்கு அடிபணியவேண்டும் பலர் என்னைப் புகழ வேண்டும், அதற்காக நான் அள்ளி அள்ளித் தர்மம் செய்ய வேண்டும் என்ற பிர்அவுன், ஹாமான் போன்ற கொடிய மன்னர்கள் கொண்டிருந்த மிருக உணர்ச்சிகளை அடிமைப் படுத்திவிட்டனர். இவற்றிலிருந்து விடுதலை பெறுவதற்குத்தான் போராட்டம் (ஜிஹாத்) நடத்தவேண்டும். ''ஓர் உண்மைவியாபாரி தான் வாங்கும் பொழுதும், விற்கும் பொழுதும், அளக்கும் போதும், நிறுக்கும் போதும் உண்மையாகவே தனது மனதுடன் பெரும் போராட்டம் நடத்தவேண்டியிருக்கிறது. இந்தப் போராட்டத்தில் வெற்றி பெற்றால் அவன் தியாகியாக மாறுகிறான். அவனே சுவர்க்கத்தில் முதலில்நுழைபவன்'' என்று. இதனையே இஸ்லாம் கூறுகின்றது.

திருக்குர்ஆன் கூறும் அணுகு முறைகளையே நாம் சகல துறைகளிலும் கையாள வேண்டும். அப்போதுதான் நாம் முரண்வழி செல்லாதிருக்க முடியும். திருக்குர்ஆன் கூறும் ''நிச்சயமாக இந்தக் குர்ஆன் மனிதர்களுக்கு மிகவும் நேரான வழியை அறிவிக்கின்றது'' என்ற கூற்று இங்கு கவனிக்கத்தக்கது.

எனவே இஸ்லாமிய அமைப்பின் கீழ் இலங்கை முஸ்லிம்களின் முக்கிய பிரச்சினையாகிய பொருளாதார சமத்துவமின்மை என்ற பிரச்சினையை எவ்வாறு அணுகலாம் என்பதைக் கவனிப்போம். இன்று முழுஉலகுமே எதிர்நோக்கியிருக்கும் பெரும் பிரச்சினை அளவுகடந்த சனப் பெருக்கத்தால் உண்டான பொருளாதார ஏற்றத்தாழ்வு எனக் கூறுவர். இப்பிரச்சினைகள் உலகில் இன்று நேற்று ஏற்பட்டவையல்ல. இவற்றைத் தீர்ப்பதற்காக ஏற்பட்ட அமைப்பு முறைகளும் பூரண வெற்றிகாணாது மறைந்தன. தூய இஸ்லாமிய சமுதாய அமைப்பு மாத்திரம்தான் ஏற்றத்தாழ்வற்ற சகோதரத்துவ சமுதாயம் ஒன்றை அமைக்க முடியும் என்பதை இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்பப் பகுதியை நோக்கும் எவரும் உணர்ந்து கொள்வர்.

உமர் இபுனு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களது ஆட்சிக் காலத்தில் இஸ்லாமிய சமுதாயம் மிகவும் உன்னதநிலையை அடைந்தது என்பதை நினைவு கூரலாம். உமர் இபுனு அப்துல் அஸீஸ் அவர்களின் கீழ் கடமையாற்றிய ஸகாத் சேகரிப்பாளர்களில் ஒருவராகிய யெஹ்யா இபுனு சைத் கூறுகின்றார். ''ஆபிரிக்காவில் இருந்து ஸகாத் சேகரித்து வருமாறு என்னை எமர் இபுனு அப்துல் அஸீஸ் அவர்கள் அனுப்பினார்கள். அவ்வாறே நான் சேகரித்தபின் அதனைப் பகிர்ந்தளிப்பதற்கு வறியவர்களைத் தேடிப்பார்த்தேன். ஆனால் ஒருவரும் கிடைக்கவில்லை. அதனை என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய ஒருவரையும் நான் கண்டுபிடிக்க இயலவில்லை. இதற்குக் காரணம் உமர் இபுனு அப்துல் அஸீஸ் அவர்கள் மக்களின் பொருள் வளத்தைப் பெருக்கி இருந்ததாகும்.''

இந்த வரலாறு இஸ்லாமிய நடைமுறைகளைப் பூரணமாகக் கடைப்பிடிப்பதால் ஒரு சீரிய சமுதாயத்தை உருவாக்க முடியும் என்றும், "ஸகாத்" என்பது பிச்சைக் காரரை வளர்க்கும் ஒரு வழி என்று எண்ணும் மேற்கத்திய சிந்தனையாளரை உண்மை' அவ்வாறன்று என்றும் உணரச் செய்கின்றது.

நிதித்துறையை அடிப்படையாக வைத்து நோக்கினுல், உலகில் முதன்முதலாக விதிக்கப்பட்ட வரி "ஸகாத்" ஆகும். "ஸகாத்" மூலம் கிடைக்கும் வரும்படி செல்வந்தர்களினுலல்லாமல் அரசாங்கத்தினுலேயே பகிர்ந்தளிக்கப்படல் வேண்டுமென இஸ்லாம் கூறுகின்றது. இஸ்லாமிய அமைப்பிலே அரசாங்கத் திறைசேரி (பைதுல்மால்) என்பது தற்கால நிதிஅமைச்சை ஒத்ததாகும். இதன்மூலம் வசூலிக்கப்படும் "ஸகாத்" சமூகத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காகச் செலவிடப்படும். இறைவன் தன் திருமறையிலே சமுதாயத்தின் அடிப்படைத் தேவைகளை எட்டுப் பிரிவுகளாக வகுத்துக் கொடுத்துள்ளான். அவை: (1) தொழிலற்றோர் பிரச்சினை (2) தொழில் இருந்தும் அதில் வருவாய் குறைந்தோர் பிரச்சினை (3) இஸ்லாத்தில் புதிதாகச் சேர்ந்துகொள்வோர் பிரச்சினை (4) இடையில் பணக் கஷ்டமுறும் பிரயாணிகளின் பிரச்சினை (5) கடன் தொல்லைக்குட்பட்டோர் பிரச்சினை (6) அடிமைகள் பிரச்சினை (7) புனித யுத்தத்தில் ஈடுபடும் யுத்தவீரர் பிரச்சினை (8) ஸகாத்து சேகரிப்போர் சம்பளம் என்பனவாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் ஸகாத்தை வசூலிப்பதற்கோ, அதனை அடிப்படைத் தேவைகளில் செலவிடுவதற்கோ, ஸகாத் கொடுக்காதோர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ ஒரு இஸ்லாமிய அரசாங்கம் கிடையாது. அதனுல் ஒவ்வொருவரும் தாம் தனிப்பட்ட முறையில் 'ஸகாத்' தைக் கொடுத்துக் கொள்வோம் என்று கூறி, வருடம் ஒருமுறை ஒரு பிச்சைக்காரர் கூட்டத்தையே திரட்டித்தாம் தருமம் வழங்குகின்றோம் என்பதை அனைவருக்கும் பிரபல்யப்படுத்தி, வரிசையாக நிறுத்தி ஐம்பது ரூபா, நூறு ரூபா நோட்டுக்களைப் பகிர்ந்துவிடுவதால் இஸ்லாம் கூறும் ஸகாத்து முறை நிறைவேறிவிட முடியாது. எமக்கு ஒரு அரசு இல்லை என்றதனுல் நாம் இஸ்லாமிய சமுதாயம் என்ற ரீதியில் ஒன்றுதிரண்டு ஒரு திணைக்களத்தை உண்டாக்கி அதன்மூலம் 'ஸகாத்' அறவிடப்பட்டு எமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முயலுவதே எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரே வழி.

இந்தத் திணைக்களம் இலங்கை அரசாங்கத்தின் அனுமதி பெற்று, அதிகாரங்களும் பொறுப்புகளுமுடையதாக அமைய வேண்டும். இதுவரை காலமும் இந்தப் பெயரால் இயங்கிவந்த எத்தனையோ இயக்கங்கள் தமது கடமையைச் சரிவர நிறைவேற்ற முடியாமல் தோல்வி கண்டன. இதற்கான காரணம், அந்த இயக்கங்கள் பூரண இஸ்லாமிய வழிமுறைகளைக் கடைப்பிடிக்காது ஐரோப்பியர் கற்றுக்கொடுத்த இஸ்லாமிய முறைகளையும், மேற்கத்திய நடைமுறைகளையும் கடைப்பிடிக்கத் துணிந்தமையே என்றல் மிகையாகாது.

எனவே இப்படியான ஒரு திணைக்களத்தில் அங்கம்வகிக்கும் அங்கத்தவர்கள் நடைமுறையில் உண்மை முஸ்லிமாகத் திகழ வேண்டும். தமது மூளையைச் சூழ்ந்திருக்கும் ஐரோப்பிய சிந்தனைத் தாக்கம், முதலாளித்துவ, சோசலிச, கம்யூனிச கொள்கைத் தாக்கங்கள், மிருக உணர்ச்சிகளின் தாக்கம் என்ற வழிகேடுகளைக் களைந்து, விடுதலை அடைந்த இஸ்லாமிய சிந்தனையாளராகத் திகழ வேண்டும். அப்போதுதான் இயக்கத்தின் நோக்கத்தைச் செவ்வனே நடைமுறைப்படுத்த முடியும்.

திருக்குர்ஆன் கூறும் எட்டு அடிப்படைத் தேவைகளில் இன்று இலங்கையில் நான்கு தேவைகளே பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளன. அவை: (1) தொழிலற்றோர் பிரச்சினை (2) தொழில் புரிந்தும் போதிய வருவாயின்றித் தவிப்போர் பிரச்சினை (3) புதிய முஸ்லிம்கள் பிரச்சினை (4) கடன் தொல்லையில் உழலும் முஸ்லிம்கள் பிரச்சினை.

முதலாவது பிரச்சினையைத் தீர்ப்பதெனில் மேற்கூறிய திணைக்களம் வேலையற்றவர்களுக்கு வேலைதேடிக் கொடுக்க வேண்டும். அப்படியல்லாமல் ரூபா நோட்டுக்களை மாற்றி வைத்துக்கொண்டு அவர்களுக்கு வருடமொருமுறை பகிர்ந்து விடுவதல்ல. இவர்களுக்கு வேலைதேடிக் கொடுப்பது சமூகத்தின் கடமையும் பொறுப்புமாகும். இலங்கையில் வேலையற்றிருக்கும் முஸ்லிம்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்து, அவர்கள் வாழும் பிரதேசங்களையும் அடிப்படையாகக் கொண்டு இலாபந்தரக்கூடிய தொழிற்தாபனங்களை நிறுவுவதன் மூலம் இப் பிரச்சினையை ஓரளவுக்குத் தீர்க்க முடியும். இவ்வாறு ஒவ்வொரு வருடமும் தொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலமும் அவற்றினால் கிடைக்கக்கூடிய இலாபத்தைக் கொண்டு மேலும் அத் தொழிற்தாபனத்தை விசாலிப்பதன் மூலமும் அல்லது வேறு தொழிற்தாபனங்களைப் புதிதாக ஏற்படுத்துவதன் மூலமும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்றான் இப் பிரச்சனையை முற்றாகத் தீர்த்துவிட முடியும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டிய முறையும் இதுதான். பின்வரும் நபிமொழி இதனை உறுதிப்படுத்துகின்றது. "ஒருவர் நபிமணி அவர்களிடம் வந்து தான் வாழ ஏதாவது வழிசெய்து கொடுக்கும்படி கேட்டார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த மனிதனிடம் ஒரு கோடரியையும் கயிற்றையும் கொடுத்து விறகு சேகரித்து விற்றுப் பிழைக்குமாறு கட்டளையிட்டார்கள். என்ன நடந்தது என்பதைப் பின்னர் தன்னிடம் வந்து கூறும்படியும் அம்மனிதனிடம் கூறினார்கள்".

மேற்குறிப்பிட்ட சம்பவம் தனிப்பட்ட ஒரு மனிதன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி என்றும் இவ்விருபதாம் நூற்றாண்டில் அது முக்கியமான தொன்றல்ல என்றும் தவறான சிந்தனைப் போக்குள்ளவர்கள் கூறலாம். மேலும் மேற்கூறிய உதாரணமானது ஒரு கோடரியையும், கயிற்றையும், ஒரு மனிதனையும் பற்றியது என்றும் ஆனால் தற்கால வாழ்க்கை பெரும்பெரும் தொழிற்சாலைகளையும், வேலையில்லாத இலட்சக் கணக்கானோரையும் கொண்டது என்றும் கூறப்படலாம்.

இது போலித் தர்க்கவாதமாகும். தொழிற்சாலைகள் உருவாகுவதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொழிற்சாலைகளைப் பற்றிப் பேசவோ, அவற்றிற்குரிய சட்ட விதிகளை வகுக்கவோ நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எவ்விதத் தேவையும் இருக்கவில்லை. அவர்கள் அவ்வாறு செய்திருந்தால் அதனை எவரும் விளக்கிக் கொண்டிருக்கவும் மாட்டார்கள்.

சட்டம் ஆக்குவதற்கு அவசியமான அடிப்படைக் கொள்கையை அவர்கள் வகுத்துச் சென்றமையே போதுமானது. இவ்வடிப்படைக் கொள்கையை வரம்புக்குள் ஒவ்வொரு சந்ததியினரும் காலச் சூழலுக் ஏற்ப அதனைச் செயல்படுத்துவதற்கான முறைகளை வகுத்துக் கொள்ளலாம். எமது முதலாவது பிரச்சனையைத் தீர்த்து விட்டால் மற்றைய இரண்டாம், மூன்றும், நான்காம் பிரச்சனைகளைத் தீர்த்து விடுவது இலகுவாகும்.

அகில இலங்கை ரீதியான ஒரு இஸ்லாமிய வங்கியை [இது அரசாங்கத்தின் சட்ட அங்கீகாரம் பெற்றதாக இருக்க வேண்டும்.] அமைத்து இஸ்லாமியர்களது பணத்தைச் சேமிப்பதன் மூலம் வட்டித் தொல்லையிலிருந்து நீங்குவதுடன் கடனாளிகளின் பிரச்சினையையும், வருவாய் குறைந்தவர்களுக்கு வட்டியற்ற இலகு கடன் வழங்குவதன் மூலம் அவர்களது பிரச்சினையையும் தீர்த்துவிட முடியும்.

புதிய முஸ்லிம்களின் பிரச்சனையும் உடன் தீர்க்கப்படவேண்டிய ஒன்றுதான். அகில இலங்கை ரீதியாக இவர்களுக்கென தனி ஒரு கலாபீடமாவது நிர்மாணித்து, ஒரு சில ஆண்டுகளுக்கு இவர்கட்கு மார்க்க ஞானத்தையும், இஸ்லாமிய நடைமுறைகளையும் போதித்து இவர்களது விசுவாசம் உறுதியடைந்ததன் பின் தொழில் வசதியும் செய்து கொடுக்கப்படல் வேண்டும்.

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்த இம்முறைகளின்றி தற்பொழுது நாம் நடைமுறையில் கையாண்டுவரும் எந்த முறைகளாலும் முற்றாகத் தீர்த்துவிட முடியாது. தீர்ப்பதற்குப் பதிலாக பிரச்சினைகள் மேலும்மேலும் அதிகரிக்கும். அதனை நாம் நடைமுறையில் காணக்கூடியதாக இருக்கின்றது. ஸக்காத் வாங்குவோர் தொகை ஒவ்வொரு வருடமும் கூடிச் செல்வதல்லாமல் குறைந்து செல்வதை நாம் காணமுடியவில்லையே.

மேற்கூறிய இத்திட்டங்கள் வெற்றியடைய வேண்டுமெனில் பெருமானார் காட்டிச் சென்ற சீரிய சமுதாய அமைப்பு மீண்டும் நிலைநிறுத்தப்பட வேண்டும். இதற்கு ஒவ்வொரு இஸ்லாமியனும் தானாகவே தனது உளப்பாங்குகளில் இருந்து விடுதலை பெற்று தியாக உணர்வோடு முன்வரவேண்டும்.

With the best wishes of

P. S. K. V. PALLAK LEBBE & CO.

163, Second cross Street,
COLOMBO - 11.

*Best compliments from:*

Lucky Leather Stores

27, Third cross street,
COLOMBO - 11.

*Best compliments*

General Importers & Merchant
Glasses, Mirrors, Hardware,
Brassware Etc.

M. S. Abdurahman
& Co. Ltd.
No. 1, 3rd Cross Street,
COLOMBO - 11.

*If you want to have the best*

***Visit***

## COLOMBO DRAPERY STORES

THE ONE STOP SHOP

For:

Quality Radios,
Radio Recorders, T. V. Sets,
Building Meterials,
Gift Articles and
Handy House wares.
Agents for 'PHILIPS' and
'SANYO' Products.

24, Main Street,
KALMUNAI.

- **T. V.**
- **Radio Cassets**
- **Refrigerator**

***Visit***

## Hitachi Agency House

143, Main Street,
KALMUNAI.

***Best wishes from:***

## AL-HAJ. A. A. L. M. ABDULLA

**60, Moor Street, KALUTARA.**

*Space Donated by*

**K. T. M. JEWELLERS**

67, Kannathiddy,
JAFFNA.

அன்பளிப்பு :

'செல்லம்ஸ்'
படப்பிடிப்பாளர்
*94, 96, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*போன் : 436*

With best wishes
and
kind regards
from

**NISTHAR GEMS**

56, W-A, Silva Mawatha,
COLOMBO - 6.

# இஸ்லாமிய சமுதாயத் தத்துவமும் இறை சிந்தனையும்

மௌலவி எம். ஐ. அப்துர்ரஸ்ஸாக் B. A. (Hons)
உதவி விரிவுரையாளர்,
அரபு, இஸ்லாமிய நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

இஸ்லாம் நிறுவும் உன்னத சமுதாய அமைப்பின் அடிப்படை அதன் இறையியற் கொள்கையே. இஸ்லாமிய போதனைகள், சட்டதிட்டங்கள் அனைத்தும் இறை நம்பிக்கையைக் கொண்டே உருவம் பெறுகின்றன. இறைவன் சம்பந்தமான அல்லது இறைமை (Sovereignty) யாருக்குச் சொந்தமானது பற்றி திர்க்கமான கொள்கையே எல்லாக் காலங்களிலும் மனிதனது ஒழுக்க வளர்ச்சி, ஆத்மீக முன்னேற்றம் என்பனவற்றிற்குக் காரணமாக அமைந்து வந்திருக்கின்றது. இஸ்லாம் இத்துறையில் அதன் தீர்க்கமானதும் முடிவானதுமான ஏக தெய்வக் கொள்கையை வலியுறுத்தி நிற்கின்றது.

இஸ்லாத்தின் தோற்றத்துக்கு முன்னைய அரேபியத்தீபகற்பத்தின் நிலை எவ்வாறு இருந்தது என்பதுபற்றித் திருக்குர்ஆன் வர்ணிக்கும்போது "அவர்களது கரங்கள் செய்தனவற்றைக் கொண்டு கடலிலும், கரையிலும் குழப்பம் வெளிவந்துவிட்டது" எனக் கூறுகின்றது. 'அய்யாமுல் ஜாஹிலிய்யா' (மடமைக்காலம்) என உலக சரித்திரத்தில் வர்ணிக்கப்படுகின்ற இக்காலம், மனித ஒழுக்கமானது மிகவும் தாழ்ந்து அருகிச்சென்ற ஒரு காலப்பகுதியெனின் மிகையாகாது. இறைவனைப்பற்றிய ஒரு தெளிவான கொள்கை இவர்களிடம் காணப்படாமையே இதற்குக் காரணமாக அமைந்தது. இத்துர்ரதிஷ்ட நிலையானது சமுதாய அமைப்பிலும் ஊடுருவி ஆட்டம் ஏற்படுத்திய வரலாற்றை ஜோசப்ஹெல் (Josephhell) என்பவர் தனது 'அரேபியநாகரிகம்' (Arabcivilization) எனும் நூல் "அன்றைய அரபுமக்கள் தேசிய ஐக்கியம் எனும் அடிப்படையில் சிந்திக்கத் தவறினர். தனது குலம், குடும்பம் என்பவற்றையே பெரிதென மதித்தனர். அரேபியத்தேசம் எனும் வகையில் ஒற்றுமைக்கு வழிசெய்யவில்லை" எனக் குறிப்பிடுகின்றார். ஏகதெய்வக் கொள்கையின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட வாழ்க்கை அமைப்பானது அன்றைய அரபுமக்களிடம் இல்லாமல் போனதே அவர்கள் தேசிய ரீதியில் சிந்திக்கத் தவறியமைக்குக் காரணம் எனின் மிகையாகாது.

மனிதனிடம் இறை நம்பிக்கையின் அவசியம் உணரப்படாதபோது, அவனது சிந்திக்கும் ஆற்றல் குறுகி விடுகின்றது. பரோபகாரியாக வாழவேண்டிய மனிதன் சுயநலமியாக மாறிவிடுகின்றான். இந்நிலைமையானது அன்றைய அரபு சமுதாயத்தில் பரவலாகக் காணப்பட்டது. குழுவுணர்ச்சியானது அதிகளவில் தூண்டிவிடப்பட்ட காரணத்தினால் சின்னஞ்சிறு வாழ்க்கைப் பிரச்சினைகளையெல்லாம் மையமாக வைத்து பல்லாண்டுகள் தலைமுறை, தலைமுறையாக யுத்தம் செய்யக்கூடிய மக்களாக அவர்கள் மாறினர். புலமைத்துவம் பெற்ற கவிஞர்களின் சேவை பெரிதும் போற்றப்பட்டது. தன்னுடைய கோத்திரத்தைப் புகழ்ந்தும் ஏனைய கோத்திரங்களை இகழ்ந்தும் இவர்கள் கவிதைகளைப்பாடி வேற்றுமைகளை வளர்த்தனர். எனவே, புலவர்கள் சமுதாயத்தின்

உயர்ந்த இடத்தில் வைத்துக் கௌரவிக்கப்பட்டனர். இதுபற்றி நிகல்ஸன் என்பவர் தனது "அரபு இலக்கிய வரலாறு" (A literery History of arabic) எனும் நூலில் பக்கம் 71-ல் "ஒரு கவிஞன் அரேபியக் குடும்பம் ஒன்றிற் தோன்றி விட்டான் என்று கேள்விப்பட்டதும் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் அனைவரும் ஒன்றுகூடி அவனை ஆரவாரம் செய்வர். அவர்களது நல்லதிர்ஷ்டத்துக்காக அக்குடும்பத்தையே வாழ்த்திப் பாடுவர். ஒரு குடும்பத்தில் ஓர் ஆண்குழந்தை பிறந்தாலும் அல்லது ஒருவர் கவிபாடும் ஆற்றலைப் பெற்றாலும் அக்குடும்பத்தை அரபிகள் கௌரவித்துக் கொண்டாடுவர்" எனக் குறிப்பிடுகின்றார்.

அன்றைய அரபியரின் சமுதாய அமைப்பில் ஒவ்வொரு கோத்திரத்திலும் முக்கியம் வாய்ந்த பல புலவர்கள் காணப்பட்டனர். குழுவின்பலம், செல்வாக்கு முதலியனவற்றைக் கட்டிக்காக்கும் பொறுப்பு இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வகையில் "அஜ்த்" குழுவுக்கு "ஷன்பரா", "அப்ஸ்", "அன்தரா" எனும் புலவர்களும் "முஸைனா" எனும் குழுவுக்கு "ஸுஹைர் இப்னு அபீஸீல்மா" என்பவனும் 'கிந்த்' எனும் கோத்திரத்துக்கு "இம்ரவுல் கைஸ்" என்பவனும், "பக்ர்" குழுவுக்குத் "தரபா"வும், "தஃலப்" எனும் குழுவுக்கு "அம்ரபின் குல்ஸீம்" என்பவனும். "பனூ ஜஃபர்" குழுவுக்கு "லபீத்பின்அபீரபீஆ" எனும் புலவனும் இருந்தனர். இவ்வாறான புலவர்கள் ஒவ்வொரு குழுவிலும் இருந்து கொண்டு அக்குழுக்களின் போர் நடத்தைகளைக் கவனித்து வந்தனர். நாடோடிகளாகக் காணப்பட்ட அன்றைய அரபிகள், தமது மந்தைகளினது உணவு, நீர் முதலியவற்றின் தேவையின் பொருட்டு இடம்விட்டு இடம் பெயர வேண்டிய தேவையேற்பட்டபோது இரண்டு வேறுபட்ட கோத்திரத்தினர் வசதியான பாலைவனப் பசுந்தரையொன்றைப் போயடைய சின்னஞ் சிறு வாழ்க்கைப்பிரச்சனைகள் ஏற்பட்டு இரண்டு, கோத்திரத்தினர்களும் தொடர்ந்து பல வருடங்கள் சண்டையிட்டுக் கொள்வதுண்டு. இவ் வகையில் ஏற்பட்டு 40 வருடங்கள் தொடர்ந்து நடைபெற்ற ஒரு போர் பற்றி வர்ணிக்கும் கவிதைத் தொகுப்பொன்றை "முஹல்ஹில் பின்ரபீஆ" என்பவர் இயற்றியிருக்கின்றார். இவ்வாறு அன்றைய அரேபியர் மிலேச்சத்தனமாக நடந்துகொள்ள அவர்களைத் தூண்டியது. தெளிவான இறை நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்த சீரிய ஒழுக்கங்கள் அருகிப்போய்க் காணப்பட்டதே எனின் மிகையாகாது.

செயல்கள் அனைத்தும் இறை நம்பிக்கையைக் கொண்டேயன்றி சீர்மை பெறா. இறை நம்பிக்கையானது நற்செயல்களைக் கொண்டுதான் பூரணத்துவம் பெறும். திருக்குர்ஆன் வசனங்களின் அடிப்படையிலும், இஸ்லாமியக் கண்ணோட்டத்திலும் பார்க்கும் போது இன்றைய மேற்கத்திய நாகரிகமும், நவீன உலகும் எதிர்நோக்கும் பிரச்சனைகள் கூட அவை எவ்வளவுதான் தொழில்நுட்ப, செல்வவளங்களுடன் கூடியனவாக இருந்த போதும், தூய இறை சிந்தனையின்மையின் குறைவை எடுத்துக் காட்டக்கூடியனவாக இருக்கின்றன. இதை அவர்களே ஒப்புக்கொண்டு சிறிதுசிறிதாக இறை நம்பிக்கையின் அடிப்படையில் சமுதாயத்தை அமைப்பதற்கான திட்டங்களை இப்போது தீட்டிக் கொண்டு வருகின்றனர். வெள்ளையன் - கறுப்பன், உயர்ந்தவன் - தாழ்ந்தவன், அரசன்- அடிமை, பணக்காரன் - ஏழை என்ற வித்தியாசங்கள் நீங்கி, மனித சமுதாயத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களுக்கிடையில் அவர்கள் அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போன்ற அன்னியோன்ய, பரஸ்பர நல்லெண்ணத்தை ஏற்படுத்தி விருத்தி செய்யக்கூடிய சக்தி ஏக தெய்வக் கொள்கைக்கே சொந்தமானவொன்று. இவ்வேகதெய்வக் கொள்கையின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படாத சமுதாயங்கள் மத்தியில்தான் நிற வேறுபாடு, குல வேறுபாடு, தர வேறுபாடு முதலியவற்றின் பெயரால் சமூகப்

பிரச்சினைகள் தலைதூக்குகின்றன. ஐக்கிய அமெரிக்க நாட்டில் நடைபெற்ற பின்வரும் நிகழ்ச்சி இதை விளங்கிக்கொள்ளத் துணை செய்யும் என நினைக்கின்றேன்.

ஐக்கிய அமெரிக்க நாட்டின் 'அலபாமா' எனும் மாகாணத்தைச் சேர்ந்த 'அவ்ஸரீன் லூஸி' எனும் ஒரு கறுப்பு இனத்தைச் சேர்ந்த பெண், அம்மாகாணத்தில் அமைந்து இருக்கும் பல்கலைக்கழகத்தில் நுழைவதற்கு அனுமதி கேட்டு விண்ணப்பித்த போது, அவளது நிறத்தை மாத்திரம் கருத்தில் எடுத்துக்கொண்ட பல்கலைக்கழகம் அனுமதி கொடுக்க மறுத்து, விண்ணப்பத்தை நிராகரித்து விட்டது. அப்பெண் தனக்கு இழைக்கப்பட்ட அநீதி பற்றிக் கூறி பேர்மின்ஹாம் (அலபாமா மாகாணத் தலைநகர்) நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தாள். நீதிமன்றம் அவளது வேண்டுகோளை நியாயமானது எனக் கண்டு அவளுக்குப் பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பட வேண்டும் எனத் தீர்ப்புச் செய்தது. இதுபற்றித் தெரியப்படுத்தி 1900 ம் ஆண்டு யூன் மாத முற்பகுதியில் ஒரு கட்டளையைக் குறிப்பிட்ட பல்கலைக்கழகத்துக்கு நீதிமன்றம் பிறப்பித்தது. இதுபற்றிக் கேள்விப்பட்டதும், அப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஏறக்குறைய ஏழாயிரம் மாணவ, மாணவியர் நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்தனர். இம்மாணவர்கள் ஆயிரக்கணக்கில் பாதைகளில் ஊர்வலமாக நீக்ரோப் பெண்களை ஒழிக்க வேண்டுமெனக் கோஷம் எழுப்பிக் கொண்டு சென்றனர். இப்பெண்ணின் உருவப் படமொன்றைச் செய்து தீயிட்டுக் கொழுத்தினர். இத்துடன் இவர்கள் தங்களது அட்டகாசங்களை நிறுத்திக்கொள்ளாது, அவர்களில் ஒரு கூட்டத்தினர் அவ்வப்பாவிப்பெண் மீது கற்களையும், அழுகிய முட்டைகளையும் எறிந்து காயப்படுத்தினர். மாணவர்களின் இவ்வட்டகாசங்கள் பல்கலைக்கழக அதிகாரிகளுக்குத் தெரியவந்தபோது, நீதிமன்ற உத்தரவையும் லட்சியம் செய்யாது 02-06-1900 ஆந் திகதி இப்பெண்ணைப் பல்கலைக்கழகப் படிப்பை விட்டும் இடைநிறுத்தம் செய்தனர். திரும்பவும் இவள் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தாள். இதற்கிடையில் இப் பெண்ணை நோக்கி எவ்வளவோ எச்சரிக்கைகள் தொலைபேசி மார்க்கமாக வெள்ளையர்களால் மேற்கொள்ளப்பட்டன. இப்பெண்ணின் வீட்டில் இருந்த தொலைபேசி இரண்டு நிமிடங்களுக்கொருமுறை தொடர்ந்து ஏழு மணித்தியாலங்கள் ஓரிரவில் மாத்திரம் அடித்தது. கடைசியில் தொல்லை பொறுக்க முடியாது தனது வீட்டை விட்டு வேற்றிடம் செல்ல வேண்டிய நிர்ப்பந்தந்தத்துக்கு ஆளாகினாள்.

அமெரிக்காவில் வெள்ளையர் - கறுப்பர் எனும் பாகுபாடு பொது வாகனங்களிலும்கூடக் கடுமையான முறையில் அமுல் செய்யப்படுகின்றது. இந்நாட்டில் பொது வாகனங்களில் வெள்ளையருக்கான ஆசனங்கள் வேறாகவும், கறுப்பருக்கான ஆசனங்கள் வேறாகவும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஒருமுறை பேர்மின்ஹாம் நகரைச் சேர்ந்த ஒரு நீக்கிரோப் பெண் பொதுவாகனமொன்றில் பிரயாணம் செய்யும் போது வெள்ளையருக்கென ஒதுக்கப்பட்டுள்ள ஆசனத்தில் அமர்ந்தபோது, எழும்பி நீக்ரோமக்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் ஆசனங்களில் ஒன்றில் அமரும்படி வேண்டிக் கொள்ளப்பட்டாள். ஆனால் அப்பெண் எழும்ப மறுக்கவே, பொலிசில் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றத்தின் முன்னிலையில் கொண்டு நிறுத்தப்பட்டு அபராதமும் விதிக்கப்பட்டது. பிறப்பினால் கிடைக்கப்பெற்ற நிற அழகை மையமாக வைத்து தோல் நிறங்களுக்கிடையில், வேற்றுமைகாட்டி கறுப்புநிறத்தவன் என்பதால் ஒருவன் இழிநிலையில், அவனது தகைமை, உணர்வு, மானம், மரியாதை முதலியன குழிதோண்டிப் புதைக்கக்கூடிய வகையில் ஒரு சமுதாய அமைப்பு அமைந்திருக்கின்றது என்றால் அங்கே தூய இறை சிந்தனையின்மைதான் காரணமன்றி வேறென்னவாக இருக்கமுடியும்? இக்கருத்தைப் பெருமானார் (ஸல்) அவர்கள் தனது கடைசி ஹஜ்ஜின் போது கூடியிருந்த தோழர்கள் மத்தியில் மிகவும் தெளிவானமுறையில் இவ்வாறு விளக்கினார்கள் " ஜனங்களே

நீங்கள் அனைவரும் ஆதமுடைய மக்கள். ஆதமோ மண்ணால் படைக்கப்பட்டார். உங்களில் அரபியல்லாதவனைவிட அரபிக்கோ, கறுப்பனைவிட வெள்ளையனுக்கோ எவ்வித சிறப்புமில்லை. ஆனால் சிறப்பானது (குலம், கோத்திரம், நிறவித்தியாசங்களைப் பொறுத்தன்றி) இறைபக்தியைக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது'' என்பதாக, இக்கருத்தைத் திருக்குர்ஆன் ஊர்ஜிதம் செய்யும் போது பின்வருமாறு குறிப்பிடுகின்றது. ''மனிதர்களே! நாம் உங்களை ஓர் ஆணில் இருந்தும் பெண்ணில் இருந்தும் படைத்தோம். நீங்கள் ஒருவரையொருவர் அறிந்து புரிந்து கொள்வதற்காக உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். நிச்சயமாக யார் அல்லாஹ்வை அஞ்சி நடக்கின்றாரோ அவரே உங்களில் சங்கைமிக்கவன். நிச்சயமாக அல்லாஹ் திட்சண்ய ஞானமுடையவன்'' (49.)

இவ்வசனமானது மனித உரிமைகள் பற்றிய ஒரு தெளிவானசிந்தனையையும், சமுதாயத்தின் இறுக்கமான அமைப்பின் அவசியத்தையும் வலியுறுத்துவதாக இருக்கின்றது. மனிதர்கள் அனைவரும் ஒரே சமூகத்தைச் சேர்ந்தோர் எனும் உயரிய மனப்பான்மையை நம்மில் வளர்ப்பதற்கு இவ்வசனம் தூண்டுகோலாக அமைவதுடன், மனிதர்களுக்கிடையில் எவ்வளவுதான் வேற்றுமைகள் பிரிவினைகள் இருந்தபோதும் ஒருவரையொருவர் புரிந்து வாழ்வதன் அவசியமும், அவ்வாறான வாழ்க்கையமைப்பானது சிறப்பானதாக ஆகுவதற்கு ஏகத்துவசிந்தனை இன்றியமையாதது எனும் கருத்தும் இவ்வசனத்தில் விளக்கப்படுகின்றன.

ஏகத்துவக் கொள்கையின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட இஸ்லாமிய சமுதாய அமைப்பில் ஆண், பெண் இருபாலாரும் அவரவர் இயல்புகளுக்கும் ஆளுமைகளுக்கும் ஏற்றவகையில் உரிமைகள் அளிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டிருக்கின்றனர், மேற்கத்திய நாகரிகத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட சமுதாய அமைப்பில் பெண்இனத்தின் பாதுகாப்பானது ஊர்ஜிதம் செய்யப்படாதவொன்றாக இருக்கின்றது. திருக்குர்ஆன் இதுபற்றிக் கூறும்போது ''விசுவாசியாக இருக்கக்கூடிய நிலையில் ஒரு ஆணோ பெண்ணோ நல்லமல் செய்கின்றார்களாயின் அவர்களை மணமான ஒரு வாழ்க்கையில் நாம் வாழச் செய்வோம். மேலும், அவர்கள் செய்து கொண்டிருந்ததைவிட அழகான முறையில் அவர்களுக்கான கூலியை நாம் கொடுப்போம்'' என விவரிக்கின்றது. இவ்வசனத்தில் அப்பழுக்கற்ற ஏக இறை விசுவாசம் நிபந்தனையாக அமைந்திருப்பது கவனிக்கற்பாலது. 1976-ம் ஆண்டில் இலண்டன் மாநகரத்தில் நடைபெற்ற சர்வதேச இஸ்லாமிய ஆராய்ச்சிக் கருத்தரங்கில் ''இஸ்லாமும் அதன் நாகரிக அமைப்பும்'' எனும் பொருளில் இந்தியநாட்டு ஸைபிய்யாப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலாநிதி யூஸுஃப் நஜ்முத்தீன் அவர்கள் பேசும் போது இவ்வசனத்தை மேற்கோள்காட்டி இதில் பின்வரும் கருத்துக்கள் இடம் பெற்றிருக்கின்றன எனவும் சுட்டிக்காட்டினார்.

1. சமுதாயத்தின் அங்கத்தினர்களான ஒவ்வொரு ஆணும், பெண்ணும் வாழ்க்கையின் சம்பூரணத் தன்மைக்கும் பொலிவுக்கும் பாடுபடவேண்டும்.
2. வாழ்க்கையின் பூரணத்துவமும், பொலிவும் தூய இறைநம்பிக்கையிலும் நற்கருமங்களிலுமே தங்கியிருக்கின்றன.
3. வாழ்க்கைப்பயனுக்கு இறைவனது அருட்கொடைகள் அவசியம் என உணர்ந்து இவையின்றேல் வாழ்க்கையானது அர்த்தமற்றது எனவும் புரிந்துகொள்ளல்.
4. மனித வாழ்க்கையின் சிறப்புக்கு ஆண், பெண் இருபாலாரதும் ஒத்துழைப்பு அவசியம்.

இஸ்லாத்தில் பலதார மணத்துக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதைப் பெண் குலத்துக்கான ஒரு சாபக்கேடு என மேனாட்டு நாகரிகத்தினர் சித்தரித்துக் காட்டுகின்றனர். இதற்கான ஒரு சிறுவிளக்கத்தைத் தருவது ஏற்புடைத்து என நினைக்கின்றேன். இஸ்லாத்தில் பலதார மணத்துக்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றதே யொழிய கட்டளையாக இது விதிக்கப்படவில்லை. இதுபற்றி விவரிக்கும் திருக்குர்ஆன் வசனம் பின்வருமாறு: ''அனாதை(ப் பெண்களை விவாகம் செய்து கொண்டு அவர்)கள் விஷயத்தில் நீதமாக நடக்கமாட்டோம் என நீங்கள் அஞ்சினால், மற்றப் பெண்களில் உங்களுக்கு விருப்பமானவர்களை இவ்விரண்டாகவோ, மும்மூன்றாகவோ, நான்கு நான்காகவோ நீங்கள் விவாகம் செய்துகொள்ளலாம். (அவ்வாறு பலரை விவாகம் புரிவது கொண்டு நீங்கள் அவர்கள் மத்தியில் நீதமாக நடந்துகொள்ள வேண்டும்.) அவ்வாறு நீதமாக நடக்க முடியாதென நீங்கள் பயந்தால், ஒரு பெண்ணையே (விவாகம் செய்து கொள்ளவேண்டும்.)
[4 : 3]

இவ்வனுமதியானது இஸ்லாத்தில் அளிக்கப்பட்ட சந்தர்ப்பத்தைப்பற்றித் தெரிந்து கொள்வதும் இவ்விடயம் சம்பந்தமாகத் தெளிவான ஒரு விளக்கத்தையேற்படுத்திக் கொள்ள உதவியாக இருக்கும். உஹுத் யுத்தத்தையடுத்தே இவ்வசனங்கள் இறக்கப்பட்டன. இவ்யுத்தத்தில் எழுபது முஸ்லிம்கள் மரணித்த காரணத்தினால் அனாதைகளையும், விதவைகளையும் பாதுகாக்கும் பாரியபொறுப்பு ஒரு சமூகப்பிரச்சினையாக உருவெடுத்தது. மேலும் இவ்வழக்கமானது இதற்கும் முன்பும் அரேபியாவில் வேரூன்றிக் காணப்பட்டவொன்றாக இருந்தது. எனவே பலதார முறையின் கலாசாரப் பங்களிப்பை எடுத்துக்காட்டி இம்முறையைத் திருத்தி ஒழுங்குபடுத்தியதே இஸ்லாம் ஆற்றிய பணி எனின் மிகையாகாது.

இன்றைய உலக சனத்தொகையில் 65% வீதமானோர் பெண்களே டாக்டர் வெஸ்டர்மார்க் என்பவர் இதன் விபரீதமான விளைவுபற்றி எடுத்துக் கூறும்போது ''விவாகவயதை இருபது தொடக்கம் இருபத்தைந்தாக நாம் கணக்கிடுவோமாயின் ஆண்பாலாருக்கும் பெண்பாலாருக்குமிடையேயுள்ள ஏற்றத்தாழ்வு அதிகமானதாக இருக்கும். ஏகதார முறையின் விளைவாக மூன்று அல்லது நான்கு வீதம் பெண்கள் தனித்து வாழ்க்கை நடத்த நிர்ப்பந்திக்கப்பட வேண்டிவரும்'' எனக் கூறுகின்றார். பிரிட்டிஷ் பத்திரிகையான ''சண்டே கிரொனிகிள்'' பின்வருமாறு புள்ளி விபரத்தைத் தந்து உண்மையை வெளிப்படுத்தி நிற்கின்றது. ''புருஷனோ, குழந்தையோ, உண்மையான வீடோ இல்லாமல் 30 லட்சத்துக்கு மேற்பட்ட பெண்கள் பிரிட்டனில் தனித்த வாழ்க்கை நடாத்த வேண்டியோராக இருக்கின்றனர். கடந்த நூற்றாண்டில் மேலதிகமான பெண்களின் தொகை படிப்படியாக அதிகரித்து வந்திருக்கின்றது. 1939 செம்படம்பர் மாதம் பிரிட்டனில் ஆண்களை விட 21,18,343 பெண்கள் அதிகமாக இருந்திருக்கின்றனர். யுத்தத்தின் பின் தங்கள் கணவர்களையும், காதலர்களையும் இழந்த பல்லாயிரக்கணக்கான பெண்களுக்கு என்ன நடக்கப்போகின்றதென்பது பிரிட்டன் சமாளிக்க வேண்டிய ஒரு முக்கிய பிரச்சினையாகும். ஒரு ஆணுக்கு ஒரு பெண் எனும் வீதத்தில் தீர்மானித்தால் கூட 40 லட்சம் பெண்கள் கணவர்களற்ற நிலையில் வாழவேண்டி வரும்'' அமெரிக்காவில் கூட பெண், ஆண் விகிதம் 4 : 3 ஆகவே இருக்கின்றது. எதிர்காலத்தில் ஐரோப்பிய சட்டமானது பலதாரமணத்தை அங்கீகரிக்கும் எனத் தீர்க்கதரிசனம் கூறும் பாலியல் நிபுணர் டாக்டர் லெபொன், ''ஆண் பெண் பாலாருக்கிடையே இயற்கையான உறவை உண்டுபண்ணும் பலதார முறைக்குத்திருப்புவது, விபசாரம், மேகநோய்கள், கருச்சிதைவு, சட்ட விரோதமாகப் பிறக்கும் குழந்தைகளின் துயரங்கள், ஆண், பெண் சனத்தொகை வேறுபாட்டின் காரண

மாக ஏற்படும் விவாகமாகாத கோடானுகோடிப் பெண்களின் துர்அதிர்ஷ்டம், பொருமை ஆதியாம் கெடுதிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகும்.'' எனக் குறிப்பிடுகின்றார். எனவே, பலதார மணத்துக்கான இஸ்லாத்தின் அனுமதி சமூகப் பிரச்சினைகளுக்கான வொரு தீர்வேயன்றிப் பெண்களுக்கான சாபக்கேடல்ல.

இதுவரை இஸ்லாத்துக்கு முன்னைய சமுதாய அமைப்பிலும் இன்றைய நவீன வுலக சமுதாயவமைப்பிலும் காணக்கூடிய முக்கியமான சில குறைபாடுகளையும் இவற்றிற்குக் காரணமாக அமைந்திருப்பது தூய இறை சிந்தனையின்மையே என்பதையும் கவனித்தோம். இனி ஏகத்துவக் கொள்கையை உலகில் நிலைநாட்டுவதற்காகவும், மனித இனம் மிகவும் இலகுவில் வாழ்வில் கொண்டுவருவதற்காகவும் இஸ்லாம் ஆற்றியுள்ள பணிகளை ஆராய்வோம்.

ஏகத்துவக் கொள்கை சம்பந்தப்பட்டவரையில் இஸ்லாம் 3 முக்கிய பணிகளைச் செய்திருக்கின்றது.

1. ஏக இறைவனான அல்லாஹ்வின் இருக்கும் தன்மை பற்றி முதல் மனிதனான ஆதம் (அலை) அவர்கள்தொட்டே அறிவித்துக்கொண்டு வந்திருக்கின்றது.
2. இறை நம்பிக்கை மனிதனிடம் குறைந்து கொண்டு போகும்போது தக்க வழிகாட்டிகளையும், வேதக்கிரந்தங்களையும் இறக்கி உயிர்ப்பித்துக் கொண்டே வந்திருக்கின்றது.
3. வாழ்க்கையில் மிகவும் இலகுவான முறையில் கடைப்பிடித்து ஒழுகக்கூடிய வகையில் அமைத்துக் கொடுத்திருக்கின்றது. முதலிரு பணிகள் பற்றித் திருக்குர்ஆன் மிகவும் அழகான முறையில் வரிசைக்கிரமமாக வர்ணித்துச் செல்வது நோக்கற்பாலது.

1. ''மேலும் நூஹ்நபியை நாம் அவருடைய இனத்தினரிடம் அனுப்பினோம். அவர், ''என் இனத்தினரே! இறைவனுக்கு வழிப்படுங்கள். உங்களுக்கு அவனையன்றி, வேறு தெய்வமில்லை. நீங்கள் தீமையில் இருந்து விலகியிருக்கமாட்டீர்களா?'' என்றார். **(23 : 23)**
2. ''பின்னர் ஆத் எனும் வகுப்பினரைப் படைத்தோம். அவர்களைச் சேர்ந்த ஒரு இறைதூதர் அவர்களிடம் அனுப்பப்பட்டார். ''அல்லாஹ் ஒருவனை வணங்குங்கள். உங்களுக்கு அவனையன்றி வேறு தெய்வமில்லை'' என்று அவர் கூறினர். **(23 : 31,32)**
3. ''பிறகு நாம் மூஸாவையும் அவரது சகோதரன் ஹாரூனையும் அனுப்பினோம்'' **(23 : 45)**
4. ''மேலும் நாம் மர்யமின் மைந்தரையும், அவருடைய தாயாரையும் ஒரு அத்தாட்சியாக்கினோம்.'' **(23 : 50)**
5. இதன்பின் ரசூல் (ஸல்) அவர்களைக் குறித்து, ''(விசுவாசிகளே!) நூஹ் நபிக்கு எது போதிக்கப்பட்டதோ, எதன்படி நடக்கும்படி இப்ருஹீம், மூஸா, ஈஸா ஆகியோருக்குக் கட்டளையிடப்பட்டதோ, அந்த ஏகதெய்வக் கொள்கையாகிய தினுடைய பாதையையே உங்களுக்காகவும் அல்லாஹ் நிலையாக நிறுவியிருக்கின்றான். அம்மார்க்கத்தின் மீது நிலைத்திருங்கள். இப்பாதையில் தனித் தனியே பிரிந்து விடாதீர்கள்.'' **(42 : 13)**

ஏக தெய்வக் கொள்கையில் ஆரம்ப காலத்தில் அனைத்து சமூகத்தினர்களு ் ஒன்றுபட்ட கொள்கையுடையோராகவே இருந்தனர் எனும் கருத்து, யூனுஸ் எனும் திருக்குர்ஆன் அத்தியாயத்தின் பத்தொன்பதாவது வசனத்தில் விபரிக்கப்பட்டிருக்கின் றது. இக்கொள்கையை உயிர்ப்பிக்கவே, இறைவன் தூதுவர்களையும் வஹீயையும் அனுப்பினான். "இறைவனுடைய தூதுவர்கள் அனுப்பப்படாத எவ்வகுப்பினரும் உலகத்தில் இல்லை." எனும் கருத்து பாத்திர் எனும் அத்தியாயத்தின் 25-வது வச னத்தில் விளக்கப்பட்டுள்ளதுடன், "நபி அனுப்பப்படாத நிலையில், ஒரு சமூகத்தினர் செய்யும் தீவினைகளைக் கொண்டு அவர்கள் அழிக்கப்பட மாட்டார்கள்" எனும் கருத்து 17 : 16, 28:59 முதலிய வசனங்களில் விபரிக்கப்பட்டுள்ளன. ஏகத்துவ நம்பிக்கையின் உண்மை நிலையைப் பொறுத்தே மனிதனது ஈடேற்றம் தீர்மானிக்கப் படுகின்றது என்பதை,

1. "தளர்ந்து விடாதீர்கள்; கவலை கொள்ளாதீர்கள். நீங்கள் (அப்பழுக்கற்ற) இறை விசுவாசம் உடையோர்களாயின் நீங்களே மேலானவர்கள்." (3 : 139)

2. "அல்லாஹ்வுடன் இன்னொரு கடவுளை (கூட்டாக வைத்து) வணங்காதீர்கள். அவ்வாறு செய்யின், நீர் (நபியே!) ஏமாற்றமும் இழிவும் அடைய நேரிடும்" (17 : 22)

3. "அல்லாஹ்வைத் தவிர, உமக்கு எவ்வித நன்மையோ, தீமையோ செய்ய முடியாத எதையும் அழைக்காதீர். அவ்வாறு அழைப்பின் நிச்சயமாக வழி தவறியோர்களைச் சேர்ந்தவராவீர்." (10 : 106)

4. "அந்த (வானம், பூமி ஆகிய) இரண்டிலும் அல்லாஹ் அல்லாத இன்னொரு இறைவன் இருப்பான் என்றால் அவையிரண்டும் நிலைமாறிப் போயிருக்கும்."

5. "அல்லாஹ்வுடன் மற்றொரு இறைவனை ஆக்காதீர். நீர் நிந்திக்கப்பட்டு சபிக்கப்பட்டு நரகில் எறியப்படுவீர்."

6. "இன்னொரு பொருளை அவனுக்கு இணையாக ஆக்குவதை அல்லாஹ் மன் னிக்க மாட்டான்; ஏனைய பாவங்களை நாடியோருக்கு மன்னிப்பான்."

எனும் வசனங்களின் மூலமும் இன்னும் பல வசனங்களின் மூலமும் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். (இதுபற்றி இன்னும் கூடிய விளக்கங்களை ஏற்படுத்திக் கொள்ளவும், அல்லாஹ் தன்னை அறிமுகப்படுத்தி நிற்கும் பான்மையைப் புரிந்துகொள்ளவும் 59 : 22, 39 : 24, ஸூறும்ல், ஸூறதுல் கிஸஸ், ஸூறதுல் இக்லாஸ் போன்ற வச னங்களையும், அத்தியாயங்களையும் கவனிக்கும்படி வேண்டிக்கொள்கின்றேன். விரிவஞ்சி அதன் விளக்கங்களை விட்டுவிடுகின்றேன்)

ஏகத்துவ வழிபாடு பற்றிய உணர்வானது மனிதனுடைய பிறப்புடன் ஒட்டிப் பிறந்தவொன்று என்பது திருக்குர்ஆனினதும், ஹதீஸினதும் கருத்தாகும். கடவுட் கொள்கையில் பரிணாம வளர்ச்சித் (Evolutionary View of Religion) தத்துவம் என்றவொன்று பிற்காலத்தில் புகுத்தப்பட்டது. ஆனால், இது புத்திக்கு ஏற்றவொன்றா என்பது ஆராய்ச்சிக்குரியதே. பரிணாம வளர்ச்சித் தத்துவத்துக்கேற்ப, கடவுட் கொள் கொள்கையில் படிப்படியான முன்னேற்றமே ஏற்பட்டிருக்க வேண்டும். பதிலாக ஒரே கடவுள் எனும் கொள்கை படிப்படியாகக் குறைந்து சென்று இன்று உருவ வழி பாடாக மாறியிருக்கின்றது.

*1860ம் ஆண்டில்* "**DEBROSSES**" *என்பவர் கடவுட்கொள்கையின் தோற்றம் துர்தேவதைகளின் வழிபாட்டில் இருந்து தோன்றியவொன்று எனக்குறிப்பிட்டார். 1861-ல்* "**Comete**" *என்பவர் இதில் இருந்து தான் இறைவணக்கம் ஏற்பட்டது எனும் தனது கொள்கையை வெளியிட்டார். "ஸர்ஜோன்லபக்" என்பவர் இதையுறுதிப் படுத்த அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.*

*மனிதன் தனது மூதாதையர்களுக்குக் கொடுக்கும் மரியாதையின் அடிப்படையிலேயே* (**Manism**) *இறை வணக்கம் தோன்றியது எனும் கொள்கையும் இக்காலத்திலேயே எழுந்தது. 1870-ல்* (**Herbert Spencer**) *என்பவர் தனது பிசாசுக் கொள்கையை* (**Ghost Theory**) *வெளியிட்டார். இதனடிப்படையில்* (**T. B. Tailor**) *என்பவர், தனது விலங்கியியல் கொள்கையை 1872-ல் புராதன கலாச்சாரம்* (**Primitive Culture**) *எனும் பெயருடன் புத்தகவடிவில் வெளியிட்டார். இதையடுத்து இயற்கைச் சக்திகளின் வணக்கத்தில் இறைவணக்கம் ஏற்பட்டது எனும் கொள்கை தலைதூக்கியது. இதை மறுத்து* **Robert Spencer** *என்பவர், விலங்குகளை வழிபடும் வழிபாட்டை அடிப்படையாக வைத்துத்தான் இறைவணக்கம் ஏற்பட்டது எனும் தனது கொள்கையைப் பிரசாரம் செய்தார். இதற்கு ஆதாரமாக, இந்தியாவில் பசுவும், எகிப்தில் காளைமாடும், ஆர்டிக்நாடுகளில் கரடியும் வழிபாட்டுக்குரியனவாக வழக்கில் இருந்து வந்தன என்று வாதிட்டார். எனினும் பேராசிரியர்* **J. G. Frasar, J. K. Kenning** *முதலியோர் இதை மறுத்தனர். வியன்னாப் பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்த* **W.** *ஸ்மித்* (**W. Smith of Vieenna University**) *என்பவர், தனது 'சமயத்தின் மூலமும் வளர்ச்சியும்' (1931)* (**Origin And growth of Religion**) *எனும் தனது நூலில் கடவுட் கொள்கையில் பரிணாமத்தத்துவத்தை மறுப்பதுடன், இவ்வுணர்வானது மனிதனுடன் ஒட்டிப்பிறந்த ஒன்று எனக் கூறித் திருக்குர்ஆனின் கொள்கையை ஊர்ஜிதம் செய்கின்றார்.*

*எனவே, இதுவரை நாம் கவனித்தவற்றில் இருந்து இஸ்லாமிய சமுதாயத்தத்துவத்தின் அடிப்படையாகவும், ஆணிவேராகவும் திகழ்வது இறை நம்பிக்கையே என்பதும், இதுவும் ஏக அல்லாஹ்வைப் பற்றிய பூரண விசுவாசமாக அமையவேண்டும் என்பதும் தெளிவாகின்றது.*

**உசாத்துணை நூல்கள்:**


1. *ஹுகூகுல் இன்ஸானிபில் இஸ்லாம்*
2. *அல் இஸ்லாம் வதக்வீனு ஹலாரதிஹி*
3. **Islamic Faith**
4. *திருமறையின் தோற்றுவாய்*
5. **Islam. H. A. R. Gibb**
6. *இஸ்லாம் ஒரு அறிமுகம்*
7. *இதுதான் இஸ்லாம்*
8. *ஹலாரதுல் அரப் வமராஹிலுததவ்வுரிஹி அபரல் உஸுர்.*

# பலஸ்தீனப் போராட்டக் கவிதைகள்

மூலம் : கடாகர்மி

தமிழாக்கம் : எம். ஏ. நுஃமான்

அரேபிய கலாசார மரபில் எப்போதும் கவிதை ஒரு முக்கிய பாத்திரம் வகித்து வந்துள்ளது. இஸ்லாத்திற்கு முந்திய காலத்திலிருந்து அது ஒரு கலையாக மட்டுமன்றி ஒரு வாழ்க்கை முறையாகவும் கருதப்பட்டு வந்துள்ளது. ஒவ்வொரு இனக் குழுவும் தங்களுக்கேயுரிய கவிஞர்களைக் கொண்டிருந்தது. அவர்கள் தங்கள் குழுக்களின் தலைவர்களைப் புகழ்ந்தோ அல்லது தங்களின் எதிரியான இனக்குழுக்களை இகழ்ந்தோ கவிதைகள் இயற்றினர்கள். அக்கால வாழ்க்கை முறை நாகரிகமானதாக இருக்கவில்லை. அவர்களின் கவிதைகள் உள்ளூர்ச் செய்திகளையும் பாலைவன வாசிகளான அராபியரின் கற்பனைக்குரிய நட்சத்திரங்கள், மணல்வெளி, ஒட்டகம் முதலியனவற்றையும் பற்றியதாகவே இருந்தன. அக்காலக் கவிதைகள் தாளில் எழுதப்படவில்லை. ஆனல், அதற்கென்றே உரிய சிலர் அக்கவிதைகளை மனப்பாடம் செய்து தேவையானபோது பாடிக் காட்டக்கூடியவர்களாய் இருந்தனர். இவ்வினக் குழுக் கவிஞர்கள் மிகுந்த செல்வாக்கானவர்களாகவும் இருந்தனர். ஒரு இனக்குழுவை இகழ்ந்து பாடப்பட்ட ஒரு கவிதையே இரண்டு குழுக்களுக்கும் இடையே பயங்கரமான யுத்தம் ஏற்படுவதற்குக் காரணமாக அமைவதும் உண்டு.

7-ம் நூற்றண்டில் இஸ்லாத்தின் வரவுடன் அராபியர்கள் தங்கள் மொழியை மிகவும் நேசிக்கத் தொடங்கினர்கள். அவர்களின் புனித நூலாகிய குர்ஆனும் அரபி மொழியிலேயே உள்ளது. குர்ஆன் கடவுளின் உண்மையான வார்த்தைகள் என்றே முஸ்லிம் மக்கள் நம்புகின்றனர். இக்காரணத்தினல் முன் எப்போதையும்விட மொழி மிகவும் முக்கியமானதாக மாறியது. கவிதை அழகியல் வெளிப்பாட்டுக்குரிய பிரதான ஊடகமாகக் கருதப்பட்டது. அராபிய சாம்ராச்சியம் ஸ்பானியாவிலிருந்து 'சமர்கந்து' வரை பரவிய அராபிய வரலாற்றின் பொற்காலமாகக் கருதப்படும் 8ம்-, 9ம்-, 10-ம் நூற்றண்டுகளில் ஒவ்வொரு கலீபாவின் அரண்மனையிலும் பெருந்தொகையான தொழில் முறைக் கவிஞர்கள் இருந்தனர். இக்கவிஞர்கள் கலீபாவைப் புகழ்ந்து பாடிப் பெறும் பரிசில்கள் மூலம் வாழ்க்கை நடத்தினர். கலீபாவின் கவனத்தைக் கவர்வதற்காக ஒரே நேரத்தில் 50, 60 கவிஞர்கள் போட்டியிட்டு மோதிக்கொள்வார்கள்.

இக்காலகட்டத்தில் மிகப் பிரபலமான சில அரபுக் கவிஞர்கள் தோன்றினர்கள். ஒவ்வொரு அரபுப் பாடசாலை மாணவனும் இப்போது இவர்களின் கவிதைகளைப் படிக்கவும் பாடவும் செய்கின்றன். இக்காலகட்டத்திலேதான் ஆரம்ப அரசியல் கவிதைகளும் தோன்றின. சாம்ராஜ்யத்துள் குழப்பம் மிகுந்த காலங்களில் அரசியல் கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் வெளிப்படுத்தும் கவிதைகள் பெருமளவில் இயற்றப்பட்டன. உதாரணமாக 9ம் நூற்றண்டின் ஆரம்பத்தில் கலிபா ஹாரூன்அல்றசீதின் மரணத்தின் பின்னர் அவரது இரண்டு மக்களுக்கும் இடையே சிம்மாசனத்துக்கான போராட்டம் நிகழ்ந்தபோது இவ்வாறு அரசியல் கவிதைகள் பல தோன்றின. அத்தகைய கவிதைகள் அரசியல் சூழ்நிலைகளைப் பொறுத்துத் தோன்றிக்கொண்டும் மறைந்துகொண்டும் இருந்தன. ஆயினும், அக்காலகட்டத்தில் அது அதிகமாகக் கவனிக்கப்படவில்லை.

இந்த நூற்ருண்டின் ஆரம்பத்திலிருந்துதான் காத்திரமான அரசியல் கவிதைகள் அரேபியர்களிடையே தோன்றத் தொடங்கின. அரேபிய சாம்ராஜ்யத்தின் பிரகாசம் நீண்டகாலத்திற்கு முன்பே மங்கத் தொடங்கி விட்டது. அரேபியர்கள் துருக்கியின் அதிகாரத்தின் கீழ் இருந்தனர். இந்த நூற்ருண்டின் தொடக்க ஆண்டுகளில் ஆரம்பித்த அராபிய தேசிய உணர்ச்சியின் எழுச்சியுடன் அரசியல் கவிதைகளிலும் ஓர் புதிய அலை தொடங்கியது. தேசிய உணர்ச்சியை அக்கவிதைகள் பிரதிபலித்தன. ஒருநாட் காலை பெய்ருத் மக்கள் விழித்தெழுந்ததும், அராபியர்கள் தங்களைத் துருக்கியின் ஆதிக்கத்திலிருந்து விடுவித்துக் கொள்ளத் தூண்டும் கவிதைகள் தங்கள் நகரச் சுவர்களில் எழுதப்பட்டிருப்பதைக் கண்டனர். இத்தகைய கவிதைகள் விரைவாக அரபு உலகம் முழுவதிலும் எழுதப்படத் தொடங்கின. அராபியர்கள் பண்டைய இனக்குழு நாட்களில் துலங்கியதைப்போல கவிதையின் அழைப்பிற்குச் செவிகொடுக்கத் தொடங்கினர்கள்.

துருக்கிய அதிகாரிகள் இதைப் பார்த்துக்கொண்டே இருக்கவில்லை. அவர்கள் பழிவாங்கத் தொடங்கிஞர்கள். கடுமையான அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது கவிஞர்கள் சுற்றி வளைக்கப்பட்டார்கள். கொலை செய்யப்பட்டார்கள். நாடு கடத்தப்பட்டார்கள் அல்லது சிறையிடப்பட்டார்கள். உதுமானிய சாம்ராஜ்யம் இறுதியில் முறியடிக்கப்பட்டது. அரேபியர்கள் அதன் அதிகாரத்திலிருந்து விடுதலை செய்யப்பட்டனர், ஆனல், அரபுக் கவிதை அடக்கப்பட்ட அல்லது அரபுக்கவிஞர்கள் தங்கள் படைப்புகட்காகத் துன்பம் அனுபவித்த இறுதிச் சந்தர்ப்பமாக அது இருக்கவில்லை. பலஸ்தீனர்கள் அரபு உலகில் வேறுயாரும் அதைப்பற்றி உணர்ந்து கொள்வதற்கு முன்பே சியோனிச அபாயத்தைப் பற்றிய தங்களது பயத்தையும் அனுதரவான நிலையையும் பற்றி 1920 லேயே எழுதத் தொடங்கிவிட்டார்கள். அத்தகைய கவிதைகள் 1930 இல் குறிப்பாக 1936ம் ஆண்டு நிகழ்ந்த பலஸ்தீனப் பொதுவேலைநிறுத்தக் கிளர்ச்சிக் கால கட்டத்தில் பெருமளவிலும் சக்தி வாய்ந்ததாகவும் வெளிவந்தன. பிரித்தானிய அதிகாரிகள் அதை அடக்க முயன்றனர். கவிஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார்கள். கிளர்ச்சியூட்டும் கவிதைகளைத் தாங்கிவரும் அந்த ஒரு பலஸ்தீனச் செய்திப் பத்திரிகையும் தற்காலிகமாக மூடப்பட்டது. இந்தத் தணிக்கை முறை 1930 இன் இறுதியில் நடைமுறைக்கு வந்தது 1940லும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டது. பலஸ்தீன இலக்கியத்தின் எழுச்சியை நசுக்குவதற்கு பிரதம தணிக்கையாளராக பிரிட்டிஷ் அரசாங்கம் ஹேபேட் சாமுவேலின் மகனை நியமித்தது குறிப்பிடத்தக்கது. இவர் தனது தகப்பனைப் போலவே பூரணமாக சியோனிச இயக்கத்திற்கு தன்னை அர்ப்பணித்தவர் என்பது பிரசித்தம்.

19.8க்குப் பின்னர் துர்ப்பாக்கியம் தற்காலிகமாகப் பலஸ்தீன மக்களின்மேல் கவிந்தது. அவர்களுடைய வாய்சாலகம் தற்காலிகமாக மௌனமடைந்தது. அதனிடையே அவர்கள் நாடுகடத்தவும் துரத்தவும் பட்டார்கள். அத்தகைய சிக்கல்களுடன் போராடிக் கொண்டிருந்தார்கள். எவ்வாறெனினும் அரபு உலகின் எல்லா இடங்களிலும் அவர்களது வழிவந்த கவிஞர்கள் பலஸ்தீனத் துன்பியலினல் விழித்தெழுந்து அரபியர்களை ஐக்கியப்படவும், கொள்ளையடிக்கப்பட்ட நாட்டைத் திரும்பப் பெறவும் கோரிக் கவிதைகள் படைக்கத் தொடங்கிஞர்கள். 1950ல் பலஸ்தீனக் கவிதைகள் திரும்பவும் மீட்கப்பட்டுப் புதிய உக்கிரத்துடன் எழுதப்படத் தொடங்கின. 1956ல் "கபர்கசாம்" என்னும் சிறிய பலஸ்தீனக் கிராமத்தின் அப்பாவி மக்களை இஸ்ரவேலிய ராணுவத்தினர் கொன்று குவித்தனர். இந்த நிகழ்ச்சி பலஸ்தீனியர்களை ஆத்திரமூட்டியது. அவர்களது கவிதை வெஞ்சினங் கொண்டதாகவும் உக்கிரமான

சர்ச்சைக்குரியதாகவும் மாறியது. இதன் பெறுபேறாக இஸ்ரேலிய அதிகாரிகளின் மிருகத்தனமான அடக்குமுறையின் ஒரு புதிய அலை தோன்றியது. அவர்களுக்கு முன்னிருந்த துருக்கியர்களைப் போலவே இந்தப் புதிய தலைமுறைக் கவிஞர்களை அவர்கள் சிறையில் இட்டார்கள். நாடு கடத்தினார்கள். வீட்டுக்காவலில் வைத்தார்கள் அல்லது அவர்களை மௌனமாக இருக்கச் செய்ய முயன்றார்கள். இவ்வாறு நாடு கடத்தப்பட்ட கவிஞர்களுள் ஒருவர்தான் கமால்நாசர், இறுதியில் இவர் பெய்ரூத்தில் வசிக்கச் சென்றார். ஆயினும், இவர் 73ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இஸ்ரேலியர்களினால் கொல்லப்பட்டார்.

1960ல் புதிய பலஸ்தீனக் கவிஞர் குழு ஒன்று தோன்றியது. இவர்கள் பெரும்பாலும் இளைஞர்கள். பெரும்பாலும் இஸ்ரேலின் அதிகாரத்தின் கீழ் வாழ்பவர்கள். ஆக்கிரமிப்பின் கொடிய துன்பங்களைத் தவிர வேறு எதையும் தங்கள் வாழ்நாளில் அறியாதவர்கள். ஒரு புதிய சங்கர்ப்பத்தையும் ஒரு புதிய அறைகூவலையும் தங்கள் கவிதைகளில் வெளிப்படுத்துபவர்கள். மஹ்மூத்தர்விஸ், ஸமீஹ் அல்லாசிம், தௌபீக் செய்யத் போன்ற இத்தகைய கவிஞர்களுடன் போராட்டக் கவிதை மறுபிறப்பு எடுத்தது. முந்திய யுகத்துக் கவிதையில் காணப்பட்ட துன்பியல் விதியின்மீது இளைஞர்களின் வெற்றிப் பேரிகையாக மாற்றப்பட்டது. இவர்களின் கவிதைகள் வீடற்ற நிலை, அபகரிப்பு, தாய்நாட்டின் மீதுள்ள காதல் என்பவற்றைப் பேசுகின்றன. எனினும் அதேசமயம் போராட்டத் துணிவு, பூரண சங்காரத்தை அதிர்த்து நிற்றல், மனிதாபிமானமற்ற அந்நிய ஆட்சியை நிராகரித்தல் ஆகியவற்றையும் அவை பேசுகின்றன, இக் கவிதைகளினூடே ஒரு உறுதிப்பாடும் மனவெழுச்சியும் பரவி உள்ளன. அராபியர்களின் மொழி மீண்டும் ஒருமுறை அவர்களது அறைகூவலையும் ஏக்கத்தையும் உச்சமாக வெளிக்காட்டுகின்றது.

இஸ்ரேல் இக்கவிஞர்களை நசுக்குவது பலஸ்தீன மக்களைச் சங்காரம் செய்வதற்கு எடுக்கும் பிறிதொரு முயற்சியாகும். அதாவது அவர்களது கலாச்சாரத் தனித்துவத்தை அடக்குவதன் மூலம் இதைச் சாதிக்க முயல்கிறார்கள். 1948 முதல் இஸ்ரேல் பலஸ்தீனர்களை ஏதோ ஒரு வழியில் அழித்துவிடுவதற்கு முயற்சிசெய்து வருகின்றது. அதன் மூலம் அவர்களது நாட்டின் உரிமையைக் கவர்ந்ததற்குரிய நேரடியான சாட்சியத்தை அகற்றிவிட முடியும் என்று இஸ்ரேல் கருதுகின்றது. அவர்களினால் பழிவாங்கப்படும் அபாயத்தில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கும் கூட அது உதவும் என்று இஸ்ரேல் கருதுகின்றது. அரபு அகதிகள் என்ற பெயரில் அண்மையிலுள்ள அரபு நாடுகளில் குடியேறுவதன் மூலம் பலஸ்தீனர்கள் மறைந்து போவார்கள் என்று இஸ்ரேல் ஆரம்பத்தில் நம்பியது அதன் அடிப்படையில் அப்படி ஒரு பகுதியினர் இருந்தார்கள் என்பதை உலகம் மறந்துபோகச் செய்வதற்கான பிரச்சார முறைகளைத் தொடங்கினார்கள். மேலை நாடுகளில் பலஸ்தீன், பலஸ்தீனர் என்ற சொற்கள் உபயோகத்திலிருந்து அகற்றப்பட்டன. இஸ்ரேலின் பாடசாலை மாணவர்களுக்கு அவர்களுடைய பெற்றோர் அவர்களுடைய நாட்டை நிரப்புவதற்குத் திரும்பிவரும்வரை அவர்களது நாடு மனிதர்கள் இல்லாத நிலமாக இருந்து வந்ததாகக் கற்பிக்கப்பட்டது. முக்கியமான இஸ்ரேலியத் தலைவர்கள் எல்லாரும் 1948க்கு முன்னரே அங்கு வசிப்பதற்கு வந்துவிட்டார்கள். சண்டையிட்டார்கள்; கொன்றார்கள். ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்களைத் துரத்தினார்கள். ஆனால் அவர்கள்தான் பலஸ்தீன மக்கள்என அப்படியாரும் இருக்கவில்லை என்று இப்போது கூறுகின்றார்கள்.

பலஸ்தீனப் போராட்டம் இயக்கத்தின் எழுச்சியுடன் இப்பிரச்சாரம் தோல்வியடைந்தது. குறிப்பாக 1967ம் ஆண்டு யுத்தத்திற்குப் பின்னர் அது முற்றிலும் சாத்தியமற்றதாக மாறிவிட்டது. இஸ்ரேல் ஆக்கிரமித்த பிரதேசங்கள் பலஸ்தீனர்களின் சொந்தப் பிரதேசங்களே என்பதை இஸ்ரேலிய மக்களே தெளிவாகக் கண்டார்கள். ஆகவே, பலஸ்தீனர்களைச் சங்காரஞ் செய்யும் முயற்சியில் இஸ்ரேல் முழுமூச்சாக ஈடுபட்டது. சிரிய, லெபனுனியக் கிராமங்களிலும் அகதிகள் முகாம்களிலும் விமானத் தாக்குதல்களும், இராணுவ நடவடிக்கைகளும் மிகவும் அதிகரித்தன. மேலும் போராட்ட இயக்கத்தை அழித்தொழிக்கும் தனது முயற்சியில் உதவுவதற்கு ஜோர்தானிய, லெபனுனியத் தலைவர்களை இஸ்ரேல் நிர்ப்பந்தித்தது.

பலஸ்தீனக் கவிஞர்கள் மீதும், எழுத்தாளர் மீதும் திணிக்கப்பட்ட கட்டுப்பாட்டை நாம் இந்தச் சூழ்நிலையில் இருந்தும் நோக்க வேண்டும். பலஸ்தீன ஆன்மாவை முற்றிலும் அதற்கேயுரிய விசேட குண இயல்புகளுடன் மீள் உயிர்ப்படைய அனுமதிக்க முடியாது; இதன் அர்த்தம் இஸ்ரேலிய ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தின் ஒரு மீள் எழுச்சி என்பது மட்டுமன்றி யூத அரசின் பலவீனமான தொடர்புகளை அச்சுறுத்துவதாகவும் அது இருக்கும் என்பது இஸ்ரேலியரின் கருத்து. இஸ்ரேலிய மக்களில் அநேகர் நடைமுறையில் அனுசரிக்காத ஒரு மதத்தைத் தவிர இஸ்ரேலுக்கு அதற்கேயுரிய சொந்தக் கலாச்சாரமோ, புகழ்ச்சிக்குரிய ஒரு வரலாறே, பங்குகொள்வதற்குரிய சம்பிரதாயங்களோ, தேசிய இசையோ, தேசிய சம்பிரதாயமோ, தேசிய சமையல் முறையோ இல்லை என்பதை இஸ்ரேலியத் தலைவர்கள் நன்கு அறிவார்கள். இந்த இடைவெளியை நிரப்புவதற்காக இஸ்ரேலியர்கள் பிரதேச அராபியக் கலாச்சார அம்சங்களைப் பெற்றுக்கொண்டு, அதையே தங்கள் சொந்தக் கலாச்சாரம் என்று அழைக்கின்றனர். இங்கிலாந்து போன்ற வெளிநாடுகளில் அண்மைக்காலத்தில் இஸ்ரேலிய கலாச்சார அம்சங்கள் என்று அறிமுகப்படுத்தப்படுவன எல்லாம் இவ்வாறு வந்தனவேயாகும்.

இஸ்ரேலிய கலாச்சாரப் பஞ்சமும், இஸ்ரேலியர்களின் குறைவான பிறப்பு விகிதமும் சேர்ந்து அராபியர்களின் சக்திவாய்ந்த கலாச்சாரத் தனித்துவம், வந்தேறியவர்களான தங்களை ஒருநாள் முற்ருக விழுங்கிவிடும் பலஸ்தீனர்களல்ல, தாங்களே சங்காரம் செய்யப்படுவோம் என்ற ஒரு உண்மையான ஆதங்கத்தை அவர்களுக்குக் கொடுத்திருக்க வேண்டும். **Jewish Chronicle** என்ற சஞ்சிகையில் (மே, 4, 1973) இஸ்ரேலின் ஆறுண்டு கால ஆட்சிக்குப் பின் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களின் நிலைமை பற்றி அபாஇபான் கொடுத்த ஒரு பேட்டியில் இந்தப் பயம் பிரதிபலித்தது. அவர் சொன்னுர்:

"எங்கள் வெற்றியினுல் பாதிக்கப்படாது அராபிய தனித்துவம் எங்களதைப் பார்க்கிலும் மிகவும் பாதுகாப்பாகவே இருக்கின்றது. நாங்கள் அவர்களது சமூக நடத்தையில் அதிக பாதிப்பைச் செலுத்தவில்லை. நெப்லஸ் அல்லது துல்கார்ம் என்னும் இடங்களுக்கு போகும் யாரும் அங்கு அதிகமாக ஏதும் நடந்திருப்பதைக் காணமாட்டார். இஸ்ரவேலின் பிரவேசம் வலுவற்றதும் நொய்மையானதுமாக இருப்பதும் 'அராபிசம்' மிக ஆழமானதாகவும் இறுகியதாகவும் இருப்பதுமே இதன் காரணமாகும். அவர்கள் நமது சமுதாயத்தின் மீது அதிக பாதிப்பைச் செலுத்தி இருக்கிருர்கள். தனது தனித்துவத்தைப் பேணிக் கொள்வதற்காக இஸ்ரேலிய சமூகம்

அரேபியர்களிடம் இருந்து அதிகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று நான் நினைக்கின்றேன். அவர்களுக்கு நம்மிடம் இருந்து தேவைப்படும் பாதுகாப்பை விட நமக்கு அவர்களிடம் இருந்து அதிக பாதுகாப்புத் தேவைப்படுகிறது.''

அவரது கருத்தை யாரும் ஏற்றுக்கொள்ளாது இருக்க மாட்டார்கள். ஆனால் அவர்களால் துரத்தப்பட்ட மக்களின் தனித்துவத்தை அழித்தொழிக்க முயல்வதனால் இஸ்ரேலியர்கள் ஒரு தனித்துவத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதையும் அபா இபான் சேர்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

நன்றி :

**ARAB PALASTINAN**
**Resistance - Vol - VI. No. 3**
March - 1974

---

நபிமணியின் உயரம் நடுத்தர மனிதர்களின் உயரத்தை ஒத்திருந்தது. அன்னாரின் நிறம் பழுத்த செந்நிறத்தில் தூய்மையைக் கலவையிட்டுக் காண்பது போலிருந்தது. அகன்று விரிந்த நெற்றி அண்ணலுக்கு அழகு செய்தது. அந்த நெற்றியின் நடுவே சற்று மேலே இளம்பிறை ஒத்த வடு ஒன்று காட்சி தந்தது. அன்னாரின் மூக்கு சற்று நீளமானது. வட்ட வடிவான கச்சிதமான தாடி - பால் போன்ற முகப்பொலிவுக்கு அந்தத் தாடி அமைப்பு - இரட்டிப்புச் சக்தியாகத் திகழ்ந்திருந்தது. முத்துப்பல் வரிசை - சிவந்த உதடுகள் - அங்கே எப்போதும் புன்னகை ஒளிரும். நீண்ட கரங்கள் - மெல்லிய விரல்கள்; முழங்காலை மறைக்கும் ஜுப்பா - அரப் மக்களுக்கேயுரிய சருமம் - இவையே அண்ணல் நபியாக அழகாகி நின்றன.

— வாஷிங்டன் இர்விங்

ஏழு கவிதைகள்

# மஹ்மூட் தர்வீஷ்

புதுடில்லியில் 1970ம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற நான்காவது ஆசிய ஆபிரிக்க எழுத்தாளர் மகாநாட்டில் தாமரை விருது பெற்ற மஹ்மூட் தர்வீஷ் ஒரு புகழ்பெற்ற பலஸ்தீனக் கவிஞர். இஸ்ரவேலர்களின் பயங்கரவாதத்தின்கீழ் அவர்களால் கைப்பற்றப்பட்ட பிரதேசத்தில் வளர்ந்தவர். 1960ம் ஆண்டில் இருந்து பலஸ்தீனப் போராட்ட இலக்கியத்தின் முக்கிய கவிஞராக இவர் திகழ்ந்து வருகிறார். இவரது கவிதைகள் தனித்துவமானவை. இவரது கவிதை நடையும், மொழியும், படிமங்களும் உண்மை உலகில் இருந்து, இவரது சொந்த சமூகத்தில் இருந்து வருபவை.

ஆங்கில மொழி பெயர்ப்பில் இருந்து இவரது ஏழு கவிதைகள் இங்கு தமிழாக்கம் செய்யப் பட்டுள்ளன. இக்கவிதைகள் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் (P.L.O) இந்தியக்கிளை 1976ல் வெளியிட்ட **Forever Palestine** என்ற கவிதைத் தொகுப்பில் இருந்து பெறப்பட்டன.

## வாக்கு மூலம்

எழுதிக்கொள் இதனை
நான் ஓர் அராபியன்.
எனது அட்டையின் இலக்கம் 50,000
எட்டுக் குழந்தைகள் உள்ளனர் எனக்கு
ஒன்பதாவது அடுத்த கோடையில்
கோபமா உனக்கு?

எழுதிக் கொள் இதனை
நான் ஓர் அராபியன்
தொழிலாளருடன்
கற்கள் உடைக்கிறேன்
கற்பாறைகளைக் கசக்கிப் பிழிகிறேன்
எனது எட்டுக் குழந்தைகளுக்கும்
ரொட்டித் துண்டினைப் பெறுவதற்காக!
புத்தகம் ஒன்றைப் பெறுவதற்காக!

ஆயினும்
கருணை கேட்டு நான் இரந்திடமாட்டேன்
உன் அதிகாரத்தின் ஆளுகையின்கீழ்
முழந்தாள் இட்டுநான் பணிந்திட மாட்டேன்
கோபமா உனக்கு?

எழுதிக்கொள் இதனை
நான் ஓர் அராபியன்
பேர்புகழ் அற்ற ஒருவனே நான்
மூர்க்க உலகில் நிலைபேறுடையவன்.
யுகங்களுக் கப்பால்
காலத்துக் கப்பால்
எனது வேர்கள் ஆழச்செல்வன.

உழவர் குலத்தின் எளிய மகன்நான்
வைக்கோல் குடிசையில் வாழ்பவன்நான்
எனது தலைமுடி: மிகவும் கறுப்பு
எனது கண்கள் : மண்நிறமானவை
எனது அரபுத் தலைஅணி
ஆக்கிரமிப் பாளரின் கைகளைப் பிறாண்டும்

அனைத்துக்கும் மேலே
தயவுசெய்து இதனையும் எழுது
யாரையும் நான் வெறுப்பவன் அல்ல
யாரையும் கொள்ளை அடித்தவன் அல்ல
ஆயினும்
பட்டினி வருத்தும் போதிலோ, என்னைக்
கொள்ளை அடித்தவன் தசையினைப் புசிப்பேன்
கவனம்!
எனது பசியை அஞ்சிக்
கவனமாய் இருங்கள்
எனது சினத்தை அஞ்சிக்
கவனமாய் இருங்கள்

## சிற்றம்

என் இதயத்தின் தாமரைகள்
கறுப்பாகி விட்டன.
என் இதழ்களில் இருந்து
சுவாலைகள் பறந்தன.
பசிப் பிசாசுகளே,
எந்த வனத்தில் இருந்து
எந்த நரகில் இருந்து இங்கு வந்தீர்கள் ?

என்துன்பங்களுக்கு நான் என்னை அர்ப்பணித்திருக்கிறேன்
தேசப் பிரஷ்டத்துடனும் பசியுடனும்
நான் கைகுலுக்கி இருக்கிறேன்.
சீற்றம்தான் எனது கை
சீற்றம்தான் எனது வாய்
எனது நரம்பின் குருதி சீற்றத்தின் சாறே
ஆகவே,
நான் ஒரு பாடலைப் பாடுவேன் என
நீ எதிர் பாராதே
அடர்ந்த வனங்களில் மலர்கள்
காட்டு மலர்களாகத்தான் மாறுகின்றன.

நாட்பட்ட எனது புண்ணுக்கோர் ஆறுதலாக
எனது களைத்த வார்த்தையைத் தருகிறேன்.
இதுவே என் வருத்தம்:
மண்ணுக்கோர் பெரும் உதை
மேகங்களுக்குப் பிறிதொன்று
இது போதும், இப்போது நான் சீற்றமாய் இருப்பதால்
ஆனல் நாளை; புரட்சி வரும்.

## ஒரு மனிதனைப் பற்றி

அவனது வாயில் அவர்கள் சங்கிலிகளைப் பிணைத்தனர்
மரணப் பாறையுடன் இறுகக் கட்டினர்
பின்னர் கூறினர்
நீ ஒரு கொலைகாரன் என்று.

அவனது உணவையும் உடைகளையும்
கொடிகளையும் அவர்கள் கவர்ந்து சென்றனர்
மரண கூடத்தினுள் அவனை வீசி எறிந்தனர்
பின்னர் கூறினர்
நீ ஒரு திருடன் என்று.

அவன் எல்லாத் துறைமுகங்களில் இருந்தும்
துரத்தி அடிக்கப் பட்டான்
அவனது அன்புக்குரிய காதலியை
அவர்கள் கவர்ந்து விட்டனர்
பின்னர் கூறினர்
நீ ஒரு அகதி என்று.

தீப்பொறி கனலும் உனது விழிகளுக்கும்
இரத்தம் படிந்த உனது கரங்களுக்கும்
நீ கூறு :
இரவு அகன்று விடும்
எந்தச் சிறையும், எந்தச் சங்கிலியும்
எஞ்சியிராது.
நீரோ இறந்துவிட்டான்
ஆனல் ரோம் இன்னும் இறக்கவில்லை.
ரோம் தன் கண்களால் தொடர்ந்தும் போரிட்டாள்
காய்ந்துபோன ஒரு கோதுமைக் கதிரின் விதைகள்
கோடிக் கணக்கான பசிய கதிர்களால்
சமவெளியை நிரப்பும்.

## மனிதருக்குரிய பாடல்.

துயரங்களின் தோழர்களே
தளையுண்ட நண்பர்களே
வாருங்கள்.
என்றென்றும் தோல்வியுறு
அணிவகுத்துச் செல்வோம்.
நாம் எதையும் இழக்கோம்
நமது சவப்பெட்டிகளைத் தவிர.

விண்ணகம் நோக்கிநாம் பாடல் இசைக்கலாம்
நம்பிக்கைகளை நாங்கள் அனுப்பலாம்
தொழிற்சாலை களிலும்
கல்லுடைக்கும் இடங்களிலும்
வயல் வெளிகளிலும் நாங்கள் பாடலாம்.
மறைவிடங்களை விட்டும் நீங்கலாம்
சூரியனைப் பார்க்கலாம்.

'அவர்கள் அரபிகள், காட்டு மிராண்டிகள்'
நமது எதிரிகள் முணுமுணுப் பார்கள்
ஆம்! நாங்கள் அரபிகள்
நாங்கள் அறிவோம்
தொழிற் சாலைகளும் வீடுகளும்
ஆஸ்பத்திரிகளும் பாடசாலைகளும்
எப்படிக் கட்டுவது என்பதை அறிவோம்.
குண்டுகளும் ஏவுகணைகளும்
எப்படிச் செய்வது என்பதை அறிவோம்
இசையும், அழகிய கவிதையும் கூட
நாங்கள் இயற்றுவோம்.

## நான் பிரகடனம் செய்கிறேன்

எனது நாட்டில் ஒருசாண்நிலம்
எஞ்சி இருக்கும் வரை
என்னிடம் ஒரு ஒலிவமரம் எஞ்சி இருக்கும் வரை
ஒரு எலுமிச்சை மரம்
ஒருகிணறு ஒருசப்பாத்திக்கள்ளி
எஞ்சி இருக்கும் வரை

ஒரு சிறு நினைவு
ஒரு சிறு நூலகம்
ஒருபாட்டனின் புகைப்படம் — ஒரு சுவர்
எஞ்சி இருக்கும் வரை

அரபுச் சொற்கள் உச்சரிக்கப்படும் வரை
நாட்டுப் பாடல்கள் பாடப்படும் வரை
கவிஞர்கள்
அந்தர் அல் — அப்ஸ் கதைகள்
பாரசிகத்துக்கும் ரோமுக்கும் எதிரான
யுத்த காவியங்கள்
எனது நாட்டில் இருக்கும் வரை

எனது கண்கள் இருக்கும் வரை
எனது உதடுகள், எனது கைகள்
எனது தன்னுணர்வு இருக்கும் வரை

விடுதலைக் கான பயங்கரப் போரை
எதிரியின் எதிரில் நான் பிரகடனம் செய்வேன்.
சுதந்திரமான மனிதர்கள் பெயரால்
தொழிலாளர்கள் — மாணவர்கள் — கவிஞர்கள் பெயரால்
நான் பிரகடனம் செய்வேன்
கோழைகள் சூரியனின் எதிரிகள்
அவமான ரொட்டியினால் ஊதிப் புடைக்கட்டும்
நான்வாழும் வரை எனது சொற்களும் வாழும்
சுதந்திரப் போராளிகளின் கைகளில்
ரொட்டியாயும் ஆயுதமாயும்
என்றும் இருக்கும்.

## எதிர்ப்பு

நீஎன்னைச் சுற்றிக் கட்டலாம்
வாசிப்பதற்கும் புகைப்பதற்கும்
நீ தடை விதிக்கலாம்
எனது வாயில் நீ மண்இட்டு நிரப்பலாம்
ஆயினும் என்ன?

கவிதை என் துடிக்கும் இதயத்தின் குருதி
என் ரொட்டியின் உப்பு, கண்ணின் திரவம்
நகங்களால், கண்இமைகளால்
கத்திமுனையால்
அதை நான் எழுதுவேன்.

சிறைச்சாலையில்
குளியலறையில்
குதிரை லாயத்தில்
நான் அதைப் பாடுவேன்.

சவுக்கடியிலும்
சங்கிலிப் பிணைப்பிலும்
கைவிலங்கின் வேதனை இடையிலும்
நான் அதைப் பாடுவேன்.

போரிடும் எனது பாடலைப்பாட
என்னுள் ஓர் கோடி
வானம்பாடிகள் உள்ளன.

## நம்பிக்கை

உனது பாத்திரத்தில்
இன்னமும் சிறிது தேன் எஞ்சி உள்ளது.
ஈக்களைத் துரத்து
தேனைப் பேணு

இன்னமும் கூட
உனது வீட்டுக்கோர் கதவுண்டு
இன்னமும் கூட
உனது வீட்டிலோர் பாய்உண்டு
கதவை மூடு
குளிர்காற்றில் இருந்தும் உன்
குழந்தைகளைப் பேணு

மிகமிக மோசம் இக்குளிர் காற்று
குழந்தைகள் நன்கு தூங்குதல் வேண்டும்
நெருப் பெரிக்க சிறிது விறகு
கொஞ்சம் கோப்பி
நெருப்புச் சுவாலை
இன்னமும் கூட உன்னிடம் உண்டு

தமிழாக்கம்: எம். ஏ. நுஃமான்

With Best Compliments
from:

# MAJEED TEXTILES

Whole sale and Retail
TEXTILE MERCHANT

64, Grand Bazaar.
**JAFFNA.**

அன்பளிப்பு:

# பாரத் ஸ்ரூடியோ

82/1+2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 252

With Best Compliments
from:

# MEEYANNA KAWANNA & SONS
# &
# *M. K. S. TOURS*

45/11, Chaina fort
BERUWALA

Office:
320 51/1, Galle Road
COLOMBO - 3
T.'Phone: 31194

*With the best compliments from:*

# HABIB BANK LIMITED

No. 163, Keyzer Street
COLOMBO - 11

AMEER TEX
LEADING TAILORS
in Sri lanka

## AMEER TEX

Specialist for readymade clothes

24 A, Grand Bazaar,
JAFFNA.

*Visit for your*

**Children Garments**
&
TEXTILES

## REFINE & CO.

41, Grand Bazaar,
JAFFNA.

*Best wishes from:*

**Siyanas**

**TAILORING**

**176, Model Market,**

**JAFFNA.**

மலர் சிறப்புற
எமது வாழ்த்துக்கள்

சுவையான
ஐஸ்கிறீம் வகைகளுக்கு

**றிக்கோ**

**சுவீற்ஸ் அன்ட் கிறீம் ஹவுஸ்**

யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 464

நீங்கள் விரும்பும் பாடல்களை
ஒலிப்பதிவு செய்வதிலும்
றேடியோ, ரேப்றெக்கோடர்
மற்றும் சகல விதமான
மின்சார உபகரணங்களைத்
திருத்துவதிலும்
திறமை மிக்கவர்கள்

**ஈரோ எலெக்ரோனிக்ஸ்**

23, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

தொழிற்சாலை :
1, மேல் மாடி, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

நவயுகத்தின்
நாகரிகமான

சேட்டிங், சூட்டிங்
றெடிமேட் சேட் வகைகள்
பென்ஸி குட்ஸ் சாமான்கள்

தெரிவு செய்ய
இன்றே
விஜயம் செய்யுங்கள்

**நியூ செலக்ஷன்**

64, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

*Space Donated By:*

# Salams Transporters
## COLOMBO TO JAFFNA

95, K. K. S. Road,
JAFFNA.
T.'Phone: 697

65, Dam Street,
COLOMBO - 12.
T.'Phone: 35509

சகல விதமான

நவ நாகரிக
ரெடிமேட் ஆடைகளுக்கும்
மற்றும்
சேட்டிங், சூட்டிங்
போன்றவைகளுக்கும்

இன்றே
விஜயம் செய்யுங்கள்,

## பஸ்ஹஸ்

48, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

- அழகுசாதனப் பொருட்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- கோல்ட் கவரிங் நகைகள்

மற்றும்

- வெளிநாட்டு விளையாட்டுப் பொருட்கள்

ஆகியவற்றிற்குச்
சிறந்த ஸ்தாபனம்

## Tajmahal's

21, Model Market,
JAFFNA.

# விண்மறையில் விஞ்ஞானம்

**எம். எச். எம். முனஸ்**
பௌதிகவிஞ்ஞானம் — 3ம் வருடம்

அறித்துறையின் அதியுச்சநிலையில் கம்பீரமாகப் பிரயாணஞ் செய்யும் நவயுகம் இந்நிலையை அடைந்ததில் மனிதப்பிரயத்தனம் எந்தளவு ஆதிக்கம் செலுத்தியுள்ளது என்பது நாம் நன்கு புரிந்துகொண்ட ஒன்றே எனினும் கட்புலனாகாத ஏதாவது சக்தி மனிதனின் பின்புறமிருந்து இயக்குகிறதா? அவ்வாறாயின் அதன் பங்கு எந்தளவு முக்கியத்துவம் வகிக்கிறது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். இந்நோக்கத்தில் நாம் சந்திக்கும் முதலாவது கருவி மனிதவாழ்வின் சகலதுறைகளிலும் வழிகாட்டும் வாழ்க்கை நூலான அல்குர்ஆன்.

குர்ஆன் அதன் விளக்கமாக — மனிதப்பிரதிபலிப்பாக — வாழ்ந்து நின்ற இறைதூதர் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) மீது அண்டசராசரங்களையும் படைத்துப் பரிபாலித்துக் கொண்டிருக்கும் அல்லாஹ்வினால் அருளப்பட்ட வேளையானது ஒழுக்கக்கேடும், அறியாமையும் மனிதகுல நாகரிகமாகக் கொள்ளப்பட்ட காலமாகும். இந்நிலையில்தான் குர்ஆன் கூறுகிறது. "(இறைவனாகிய) அவன்தான் தனது அடியார் மீது, உங்களை இருள்களிலிருந்து பிரகாசத்திற்குக் கொண்டுவரும் பொருட்டு தெளிவான வசனங்களை இறக்கி வைத்துள்ளான்" என்று. இவ்வாறு கூறும் குர்ஆன் அறியாமை இருளிலிருந்து அறிவுத்துறையின் பக்கம் எவ்வாறு மானிடரை வழிநடத்துகிறது என்பதைக் கவனிப்போம்.

மனிதனின் பிறப்பு பற்றி குர்ஆன் கூறுகிறது: "(இறைவனாகிய நாமே) மனிதனை களிமண்ணிலுண்டாகும் சத்தினால் சிருஷ்டித்தோம். பின் பாதுகாப்பான ஓரிடத்தில் இந்திரியமாக ஆக்கினோம். பின் அதை உதிரக்கட்டியாக்கினோம், பின் தசைக் கட்டியாக்கினோம், பின் அதனை எலும்புகளாக்கினோம். பின்னர் அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம்."

"அவன் ஒன்றினுள் ஒன்றாக மூன்று இருள்களுக்குள் வைத்து உங்களை வளர்த்துப் பாதுகாத்தான்"

"அவனே உங்களுக்குக் கேள்வியையும், பார்வையையும், இருதயத்தையும் அமைத்தான்"

மேற்கண்ட, மனிதனின் சிருஷ்டிப்பு பற்றி 20ம் நூற்றாண்டின் பிற்பட்ட விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களைத் தாங்கிய, ஒருசில வசனங்கள 1400 வருடங்களுக்கு முன் — சத்திரசிகிச்சை பற்றிய எண்ணமே எழுந்திராத காலத்தில் — அருளப்பட்டவை. மண்ணிலுள்ள சகல மூலகங்களும் மனிதனில் உள்ளன என்ற கூற்று மூலமாக, மனிதன் களிமண்ணின் சத்திலிருந்தே படைக்கப்பட்டவன் என்பதை, நவீன அறிவு சாட்சி பகர்கின்றது. அதுமட்டுமல்ல, பெண்ணின் வயிறு, கருப்பை, சிசுவைச் சூழ்ந்துள்ள மென்சவ்வு ஆகிய மூன்று அறைகளை ஒன்றன் பின் ஒன்றான மூன்று இருள்களென எவ்வளவு நுணுக்கமாக 14 நூற்றாண்டுகளின் முன் அல்குர்ஆன் கூறியுள்ளது. அது மட்டுமல்லாமல் கருக்கட்டலின் பின் மனிதனின் வளர்ச்சிப்படிகள் பற்றி நவீன விஞ்

ஞானம் எக்கருத்துக்களைக்கூறி நிற்கின்றதோ அதேவிடயம் எவ்வளவு எளிமையாக, நுணுக்கமாக விபரிக்கப்பட்டுவிட்டது.

இத்தனை போதாதென்று மனிதச் சிசுவின் வளர்ச்சியுடன் புலன்களின் வளர்ச்சி பற்றியும் குர்ஆன் கூறுகின்றது, கேள்விப்புலன் (செவி) பார்வைப்புலனுக்கு (கண்) முன் சிருஷ்டிக்கப்படுகிறது என்னும் இதேகூற்று இன்றுஅறிவியலாளரால் அறிவிக்கப்படுகிறது. ஆயினும் ஒலி, ஒளி ஆகிய இரண்டில் ஒளியே முந்துகிறது என்பதையும் குர்ஆன் இதோ கூறுகின்றது: '' அவர்கள் கூறுவார்கள் நாங்கள் பார்த்தோம், கேட்டோம் ......'' ஒவ்வொரு சொல்லும் அடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு முறையைக் கொண்டே பலவிடயங்களை அறிவிக்கும் குர்ஆன் கூறுவதன் பிரகாரம் கேட்டலுக்கு முன் பார்த்தலே நடைபெறுகிறதென விளங்குகிறது.

இத்தனை நுணுக்கமாக எத்தனையோ இடங்களில் மனித சிருஷ்டி அமைப்பு பற்றி விஞ்ஞானத்திற்கு முந்திய காலத்திலேயே குர்ஆன் குறிப்பிட்ட கருத்துக்கள் இன்று நாளுக்கு நாள் மெய்ப்பிக்கப்படுகின்றன. இவ்வாறெல்லாம் கூறுகின்ற குர்ஆன் மேலும் கூறுகிறது: '' அல்லாஹ் சகல பிராணிகளையும் ஜலத்தினால் சிருஷ்டித்தான்" ஆகவே இவற்றுள் தன் வயிற்றின்மூலம் நடப்பவை உள்ளன. இரு கால்கள் மூலம் நடப்பவையுமுள. நான்கின் மூலம் நடப்பவையுமுள.'' இக்கூற்றுமூலமாக எல்லாச் சிருஷ்டிகளும் ஜலம் கொண்டு ஆக்கப்படுகின்றன என்ற 20ம் நூற்றாண்டின் அறிவுக் கருத்துதனை 7ம் நூற்றாண்டிலேயே கூறி விஞ்ஞானத்திற்கு வித்து அன்றே நாட்டப்பட்டுவிட்டதல்லவா? இத்தனையும் கூறும் குர்ஆன் '' நீங்கள் இதனைச் சிந்திக்க வேண்டாமா?'', '' நிச்சயமாக இது நல்லுபதேசமாகும். இதனைக் கைப்பிடிப்பவர் நேர்வழி செல்வார்'' என்றும் கூறுகின்றது.

தாவரவர்க்கம் பற்றித் திருமறை கூறுகின்றது:

'' விவசாயப்பயிர்களையும், ஸைத்தூன் (olive), பேரீச்சை, திராட்சை, இன்னும் கனிவர்க்கங்களையும் அவன் உங்களுக்கு முளைப்பிக்கின்றான். நிச்சயமாக இதில் கவனித்தறியக் கூடியவர்களுக்கு ஓர் அத்தாட்சி (திருஷ்டாந்தம்) உள்ளது.''

'' அங்கு எல்லாக் கனிவர்க்கங்களும், பேரீந்து, மாதுளையுமுள''

'' அங்கு கனிவர்க்கங்களும், திராட்சையுமுள''

தர்க்கரீதியாக இக்கூற்றுக்களைக் கவனிப்பின் ' கனிவர்க்கங்கள்'' என்று குறிப்பிடப்பட்ட பதம் திராட்சை, மாதுளை, பேரீச்சை, ஸைத்தூன் என்பவற்றை உள்ளடக்கவில்லை என்பது புலப்படும். விஞ்ஞானம் கற்பித்த இறைமறையின் கூற்று இதுவாயின் மேற்கூறிய பேரீந்து போன்றவை சாதாரண கனிவர்க்கங்களிலிருந்து மாறுபாடானவை என்ற எண்ணத்தை உண்டாக்குகின்றதல்லவா? இது இன்றைய விஞ்ஞானிகளின் கருத்தை எப்படி எதிர்கொள்கிறதெனப் பார்க்குமிடத்து பேரீந்து, மாதுளை, திராட்சை என்பன அவை கொண்டுள்ள மூலகங்களின் விகிதாசாரப்படியும் வேறுபல தன்மைகளிலும் சாதாரண கனிவர்க்கங்களைவிட வேறுபாடான குணவியல்புகளையும் உடையனவாயுள என்பது இன்றைய அறிவியலாளரின் ஆய்வுகள் மூலம் ஏற்கப்படுகின்றன.

மேலும் குர்ஆனின் வாழ்வைப் பிரதிபலித்து முன்மாதிரி காட்டிய இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் கூற்று ஒன்று பின்வரும் கருத்தைத் தருகின்றது. பழம் உண்டவுடன் நீரருந்தல் கூடாது.'' பேரீந்து, திராட்சை, மாதுளை தவிர்ந்த

ஏனைய கனிகளை உண்டபின் உடனே நீர் அருந்துவதால் வாய்ப்புண், நாக்கில் கொப்புளம், வாய் அவிதல் போன்றவை ஏற்படுகின்றன என்பது யூனானி வைத்திய மேதைகள் பலரது கூற்று. எனவே 1400 ஆண்டுகளின் முன் குர்ஆன் விளக்கிவைத்த விஞ்ஞானக் கருத்துக்கள் இன்றுதான் நவீன அறிவியலாளரால் அறியப்படுகிறது என்றால் குர்ஆன் மூலமாக இவ்வறிவை மனிதகுலத்திற்களித்தது யார்? "நிச்சயமாக கவனித்தறிவோருக்கு இதில் திருஷ்டாந்தம் உண்டு" என்று அவனே கூறுகின்றான்.

இதோ வானவியல் பற்றி விண்மறை விளம்புகிறது:

"......தன்னுடைய வரையறைக்குள் செல்லும் சூரியனும்......"

"......சூரியன் சந்திரனை அணுகமுடியாது. இரவு பகலை முந்தமுடியாது. (இவ்வாறே வானிலுள்ளவை) ஒவ்வொன்றும் தத்தம் வரையறையுள் நீந்துகின்றன"

"சூரியனும் சந்திரனும் (த த் த ம்) கணக்கின் பிரகாரமே (செல்கின்றன)"

"......சூரியனை விளக்காகவும் சந்திரனை ஒளிதருவதாகவும் ஆக்கினான்......"

"......ஆரம்பத்தில் எல்லாமே சேர்ந்திருந்த ஒன்றாக இருந்தன"

இவ்வாறு இன்னும் பல வசனங்கள் மூலமாக இன்றுவரை விஞ்ஞான ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட, இனிக் கண்டுபிடிக்கப்படப் போகும் அறிவியல் விளக்கங்களை அன்றே கூறிவிட்டது குர்ஆன். சூரியனும் தனது பாதையில் செல்கிறது என்ற 20ம் நூற்றாண்டுக் கருத்தை எப்படித்தான் எழுத்தறிவில்லாத — ஒட்டகைக் கால அரபி — ஒருவர் கூறமுடியும். அன்றோ கிரேக்கதத்துவ அறிவியல் கருத்துக்கள் "வானத்தைப் பளிங்காகவும் நட்சத்திரங்களும், கிரகங்களும் அப்பளிங்குத்தகட்டில் பதிக்கப்பட்டுள்ளன." என்றும் கூறின. இந்நிலையில் விஞ்ஞானம் விளைவித்த விண்மறை கூறுகின்றது அழுத்தமாகவும் தெளிவாகவும் சூரியனும் சந்திரனும் நகர்கின்றன என. அதுமட்டுமல்ல, சூரியனை விளக்கெனக் கூறும் குர்ஆன் ஏன் சந்திரனை விளக்கெனக் குறிப்பிடவில்லை. தானே ஒளிதருந்தன்மையற்றதாகவும் ஆனால் பிரகாசிப்பதாயுமுள்ளது என இத்தனை தெளிவான விளக்கம் எப்படிப் பிறந்தது. ஏழாம் நூற்றாண்டின் ஏழை அரபியிடம். அதுமட்டுமன்றி எல்லாக் கிரகங்களும் ஆரம்பத்தில் ஒன்றாகவே சேர்ந்திருந்தன என்ற நவயுக அறிவுக்கருத்தை நாகரீகம் வளராத காலத்தில் — வானியல் ஆய்வுக்கான எவ்வுபகரணங்களும் இல்லாத அக்காலத்தில் — குர்ஆன் எவ்வாறு கூறிற்று?

இவைமட்டுமா? "......மலைகளைப்பாருங்கள். முகில்கள் ஓடுவதுபோல அவையும் ஓடுகின்றன. ஆயினும் நீங்களறியமாட்டீர்கள்......" என்கிறது குர்ஆன். ஆம்; நாம் பார்த்தறிய முடியாதபடி அவை ஓடுவதாயின் அவற்றுடன் சமவேகத்தில் நாமும் ஓடுகின்றோம் என்ற எண்ணத்தின் மூலமாக, எம்மையும் மலைகளையும் சுமந்து கொண்டு பூமி அசைகின்றது, ஓடுகின்றது என்ற சிந்தனை எற்படுபவரல்லாது மற்றவர் அறியமாட்டார் என்பதை குர்ஆன் எத்தனை நுணுக்கமாகக் கூறுகிறது. இவ்வாறு ஓடும் பூமியினது ஓட்டத்தின் தன்மையை இதோகூறுகிறது குர்ஆன்:"...... இரவினுள் பகலையும், பகலினுள் இரவையும் (நுழைத்து) நாமே சுழற்றுகின்றோம்" என்றகூற்று பூமியின் ஓட்டம் சுழற்சியுடன் நடைபெறுகிறது என்ற இன்றைய முடிவுதனை முழுதாகத் தெரிவிக்கின்றதல்லவா? இவ்வாறு சுழன்று நகரும் புவியின் உருவம் பற்றிய எண்ணத்தை இறைமறைகூறுகின்றது இவ்வாறு:- "கிழக்குகளுக்கும், மேற்குகளுக்கும்

எஜமானனுனவன் மீது பிரமாணமாக........''. பலகிழக்குகளை அடையும் அமைப்பில் சுழலும் புவி இருக்குமாயின் அது உருண்டையாகவே இருக்க வேண்டும். உருண்டையான ஒன்றிலேயே ஒருபுள்ளிக்கு கிழக்கு எனக் குறிக்கப்படும் மற்றொரு புள்ளி இன்னொரு (மூன்ரும்) புள்ளிக்கு மேற்காக அமைய முடியும். அதாவது உருண்டையான ஒன்றில் மட்டுமே ஒவ்வொரு புள்ளியும் கிழக்காகவும், மேற்காகவும் அமைய முடியும், எனவேதான் ''நீங்கள் சிந்திக்க வேண்டாமா? சிந்திப்போருக்கு மிகப்பெரும் அத்தாட்சிகள் உள்ளன'' என வினவெழுப்புகிறது இறைமறை.

புவியியல் பற்றி திருக்குர்ஆன் கூறும் போது ''உங்களைச் சுமந்துள்ளபூமி அசையா திருப்பதற்காக பெரிய மலைகளை அதன் மீது வைத்தான்'' என்கிறது. இவ்வாக்கியத்தின் மூலம் ஓர் முக்கிய விடயத்தை நம்முன் சமர்ப்பிக்கின்றது குர்ஆன். அதாவது பூமியானது தளம்பாமல் நிலையாக இருப்பதற்காகவே மலைகள் முளைகளாக அடிக்கப்பட்டுள்ளன என்பதாகும். இன்றைய விஞ்ஞானக் கருத்துக்களின் பிரகாரம் ''புவி யோட்டினுள்ளே அக்கினிக்குழம்புள்ளது. மலைகள் இல்லையேல் புவியின் சுழற்சிகாரணமாக, உறைந்துள்ள ஓடானது குழம்பின்மேல் வழுக்கிச் சுழலவேண்டி ஏற்பட்டுவிடும்.'' என்று கருதப்படுகிறது. அதாவது புவியின் ஓடு தன்னிச்சையாக வன்றி — விளாம் பழத்தின் கனிப்பகுதி அப்படியே இருக்க ஓடுமட்டும் அதன்மேல் வழுக்கிச்செல்வது போல — பலதிசைகளிலும் வழுக்க வேண்டியேற்படுவதை மலைகள் ஆப்புகளாக அமைந்து தடுக்கின்றன. நவீன பூமிசாஸ்திரத்தின் ஆழமான எண்ணக்கருவை 7-ம் நூற்ருண்டிலேயே குர்ஆன் கூறிவிட்டதென்ருல் ''விஞ்ஞான உலகு'' எனப்படுவதும் ''அறிவின் சகாப்தம்'' என்பதும் 7-ம் நூற்ருண்டின் குர்ஆனிய காலமா? அல்லது குர்ஆனை இன்னுமே புரிந்து கொள்ள மறுக்கின்ற இன்றைய மடமையின் காலமா?

இதுபோலவே ஒருதிசையில் உதிக்கும் சூரியன் மறுதிசையில் உதிக்கப்போவதையும், மலைகள் பொடிப்பொடியாக மணற்குவியல்கள் போன்றும், பஞ்சுப்பொதிகள் போன்றும் பறக்கடிக்கப்படும் உலகமுடிவுநாளையும் ''குர்ஆன்காரர்'' எதிர்பார்க்கின்றனர். நவயுக விஞ்ஞானிகளின் ஆய்வுகளும் பூமியின் சுழற்சி வேகம் குறைகிறது எனப் பறைசாற்றுகின்றன. (குறிப்பு:- இது தொடர்பாக "Mirror" என்ற சஞ்சிகையில் 1977 - May இதழில் "Through the periscope" என்னும் பகுதியில் "Is the earth slowing down?" என்ற தலைப்பில் Vivek Monteiro" என்பவர் எழுதியுள்ளார் ] சுழலும் பொருள், சுழற்சி முடிகையில் எதிர்த்திசையில் சுழன்றே ஓய்வடைவதை நாம் பார்க்கிரும். இவ்வாறே பூமியின் சுழற்சி எதிர்த்திசைக்கு மாறுகையில் சூரியன் மறுதிசையில் உதிக்கலாம். திடீரென நிற்கும் வாகனத்தினுள் பிரயாணிகள் முன்னே தூக்கி எறியப்படுவது போல மலைகள் பஞ்சுகள் போலப் பறக்கடிக்கப்படலாம்.

இவ்வாறு குர்ஆனுடைய கூற்றுக்களின் ஒவ்வொரு சொற்களும், வாசகங்களும், அவை அடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு முறைகளும் காலவரையின்றி, முழு மனித சமுதாயத்திற்குமே அறிவுத்துறையின் எல்லாக் கோணங்களிலும் வழிகாட்டி நிற்கின்றன. அத்துடனில்லாமல் தம்மை மறுப்பவர்களுக்கு ''...'நீங்கள் ( மனு, ஜின் ) ஆகிய இரு வகுப்பினரும் இதில் எதைப் பொய்யாக்குகின்றீர்கள்'', ''நீங்கள் அனைவரும் சேர்ந்து இதிலுள்ளது போல ஒரு வசனத்தையோ அல்லது ஒரு அத்தியாயத்தையோ கொண்டு வர முயன்ருலும் உங்களால் முடியாது.'' என சவால் விடுகின்றன. இந்தச் சவாலை நவீன உலகின் மனித சித்தாந்தங்களினுலோ, கணிதம், விஞ்ஞானம், அளவையியல் போன்ற அறிவுக்கூர்மை மிக்க ஆயுதங்களினுலோ ஏற்க முடியவில்லை; முறியடிக்க முடியவில்லை. மாருக எல்லாமே பணிந்து விட்டன என்பது காலம் காட்டுகின்ற உண்மையாகும். எனவே மேலும் காலந் தாழ்த்தாமல் குர்ஆன் வழி நடந்து நற்பயனடைவோமாக.

△

சிறுகதை

# அக்னிப் பிழம்புகள்

எம். ஐ. அப்துல்லத்திப்
வணிகமாணி (சிறப்பு) — 3ம் வருடம்

அந்த ஆசிரியையை நினைக்கும்போது பாறூக்கின் இதயத்தில் முள்ளால் குத்துவது போன்ற ஒருவேதனை நிஜமாகவே ஏற்படுகின்றது. அவளுக்கு அப்படி ஏற்பட்டிருக்கக் கூடாது. அந்தப் பாடசாலை ஆசிரியைகளிலேயே அவள்தான் ஒழுக்கமும் கண்ணியமும் கூடியவள் என்பது அவன் கருத்து. அடக்கமாகப் பேசுவாள்; சிரித்தாலும் மெதுவான மெல்லிய புன்சிரிப்புத்தான். உதடுகளின் பிரிகையே அவள் சிரிக்கின்றாள் என்பதைக்காட்டும். சத்தம் போட்டுக் கலகலவென அவள் நகைப்பதை அவன் கண்டதே இல்லை. உடை விடயத்திலும் எளிமைதான். ஆடம்பரமாக அவள் அவனுக்கு தெரிந்தவரை உடுத்ததே இல்லை. அதிகமாகத் தேவையில்லாமல் யாருடனும் பேசுவதில்லை. 'தானுண்டு, தன் வேலையுண்டு' என்று அவள் பாட்டுக்கு இருப்பாள். ஒவ்வொரு பாட நேரத்துக்கும் படிப்பிப்பதோடு சரி, சக ஆசிரியைகளின் தேவையில்லாத அரட்டைகளில் எல்லாம் அவள் பங்கு பெறுவதில்லை.

அவளைப்பற்றிச் சில ஆசிரியைகள் 'கிழவி' என்று கேலியாகப் பேசுவதை பாறூக் கேட்டிருக்கிறான். ஏனெனில் அவள்தான் அப்பாடசாலையில் வயதுகூடிய ஆசிரியை அவள் முகத்தில் சிறிய சுருக்கங்கள்கூட விழ ஆரம்பித்திருந்தன. அதை வைத்து அவள் வயது முப்பதுக்கு மேல் இருக்கும் என்றே பாறூக் அனுமானித்திருந்தான். இத்தனை வயதாகியும் திருமணமாகாமல் இருந்ததால் இந்தப் பட்டப்பெயரை அங்குள்ள சில இளம் ஆசிரியைகள் சூட்டியிருந்தனர். அவள் யாருடனும் பேசாமல் இருப்பதால், அவளைத் 'தலைக்கனம் பிடித்தவள்' என்றே அங்குள்ள ஆசிரியைகளும், ஆசிரியர்களும் — சிறப்பாகஆசிரியைகள் — முடிவு கட்டியிருந்தனர்.

ஆடம்பரமும் போலியும் நிறைந்த ஆசிரியைகள் மத்தியில், எளிமையும் அடக்கமும் கொண்டவளாக அவள் நடமாடினாள். இதனால் பாறூக் அவள் மீது அன்பும் மதிப்பும் கொண்டிருந்தான். அத்தகைய அடக்கமும், அன்பும் கொண்ட அவள்தான் சில தினங்களுக்கு முன்னால் பத்திரகாளியாக அதிபரின் முன் நின்றாள். அந்தக்காட்சியை இப்போது நினைத்துப் பார்க்கிறான் பாறூக். அவளது மஞ்சள் முகம் கோபத்தால் சிவந்திருந்தது. கண்களை உருட்டிக்கொண்டு உதட்டைப் பல்லால் கடித்துக் கொண்டு அதிபரின் முன் வந்து நின்றாள் அவள்.........

அறையிலிருந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்த பாறூக் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு சிந்தித்தபடி இருந்தான். அவனுக்குப் புத்தகம் படித்தாலும், அது வெறும் வாசிப்பாகவே இருக்கின்றது. மனதில் கிரகிக்க முடியவில்லை. மீண்டும்மீண்டும் அவளைச் சுற்றியே அவன் மனம் வட்டமிட்டு வந்தது. அந்த நினைவுகளை அவனால் விலக்க முடியவில்லை. காவில் ஒட்டிய அட்டை மாதிரி அந்த நினைவுகள் அவன் மனதில் விடாப் பிடியாக ஒட்டிக்கொண்டிருந்தன. இது அவன் இயல்பு. ஏதாவது மனதை உருக்கும் விடயங்களைப் பார்க்கவோ, கேட்கவோ நேரிட்டால் அவை அவன் மனதில் பதிந்து அவனை அலைக்கழிக்கச் செய்கின்றன. இவ்வாறான சில விடயங்களைக் கவிதையாகவோ, அல்லது கதையாகவோ எழுதினால் அவன் ஆத்ம திருப்தியைப் பெறுகின்றான். இச்சந்

சந்தர்ப்பத்தையும் ஒரு கதையாக எழுதினால் ஓர் ஆத்ம திருப்தி கிடைக்கும் போல் தோன்றியது அவனுக்கு. பக்கத்தில், மேசையில் அடுக்கியிருந்த 'புல்ஸ்கப்' பேப்பரை எடுத்து பேனையைத் திறந்து எழுதத்தயாரானான்.

எழுதுவதற்கு முன்னால் அச்சம்பவம் முழுவதையும் ஒரு முறை மீட்டிப்பார்த்துக் கொள்ள வேண்டியிருந்தது.

போனகிழமை ஒரு நாள் காலையில் பாடசாலைக்குப் போய் "அட்டன்டன்ஸ் ரெஜிஸ்டரில்" கையெழுத்து வைத்துவிட்டுத் திரும்பும் போது அதிபர் கேட்டார்;

"மாஸ்டர், ஒரு அதிசயத்தைக் கவனிச்சீங்களா?" என்ன அதிசயம் என்று சிந்தித்தவனைச் சுற்றிப் பார்த்தான் பாறூக். சில ஆசிரியைகள் கூடி நின்று ஏதோ பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டுமிருந்தார்கள். இது தவிர வேறொன்றுமில்லை. என்ன அதிசயம் என்று அவன் திருதிரு வென்று விழித்துக் கொண்டிருந்தபோது தொடர்ந்து அதிபர் கூறினார்; "என்ன அங்கபாக்கிங்க. அதிசயம் ரிஜிஸ்ட்டர் பொத்தகத்தில இரிக்கி."

அவன் பதிவுப்புத்தகத்தைப் பார்த்தான். அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அப்போது ஓர் ஆசிரியர் அவனிடம் வந்து பதிவுப் புத்தகத்திலிருந்து ஒரு கையெழுத்தைக் காட்டி 'இதப்பாருங்க' என்றார். அதைப்பார்த்தும் அவன் ஒன்றும் புரியாமல் விழிக்கவே, "அட என்னப்பா நீ, இந்த சைனப்பார், இதென்ன, இதுமாதிரிச் சைன் இது வரை இஞ்ச ஆரும் வெச்சிருக்காங்களா?" என்று எரிச்சலுடன் கேட்டார் அந்த ஆசிரியர்.

பாறுக் அப்பொழுதுதான் அந்தக் கையெழுத்தை உற்றுப் பார்த்தான். அதில் 'மிஸஸ் அகமத்' என்று எழுதப்பட்டிருக்கவே, அப்படி ஒருவரும் இங்கில்லையே என்று நினைத்த பாறூக், 'இல்லே' என்று அந்த ஆசிரியருக்குப் பதிலளித்தான்.

"இந்தச் சைன்தான் மர்ளியா டீச்சர்ர புதுச்சைன்" என்று சிரித்தார் அந்த ஆசிரியர். மர்ளியா டீச்சர்தான் அந்த அவனின் அன்புக்கும்,மரியாதைக்குமுரிய ஆசிரியை.

"அவக்கெப்படா கல்யாணம் நடந்திச்சி" என்று வியப்புடன் பாறூக் கேட்ட போது எல்லோரும் ஏகோபித்துச் சிரித்தனர்.

இப்படியாகத்தான் அந்தக் கோளாறு ஆரம்பமாயிற்று. அவனின் மதிப்புக்குரிய அந்த ஆசிரியை யாரோ ஒருவரைத் தன் கணவன் என்று கையெழுத்தின் மூலம் பாடசாலை ஆசிரியர்களுக்கிடையே பறை சாற்றினாள். அந்தஅகமது யார் என்பதை சக ஆசிரியர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான் பாறூக். அவர் அந்த வட்டாரத்தில் ஒரு கண்ணியமிக்க மனிதர். கல்யாணம் முடித்துத் தாரத்தை இழந்து விட்டுத் தனிக்கட்டையாக இப்போது இருக்கிறார்.

"இருவருக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமோ?" என்று அவன் சந்தேகத்தை வெளியிட்ட போது சக ஆசிரியர் சொன்னார்; "அண்டு அப்படித்தான் நானும் நினைச்சன். ஆனா, எனக்கொரு சந்தேகம், அந்தாள் தப்புத்தண்டாவுக்குப் போற ஆள் இல்ல. அவர்ர வூடு, டீச்சர்ர வூட்டிலிருந்து முக்கால் மைலிருக்கும். இஞ்சாலப்பக்கம் அந்தாள் வாறல்லப்பா, டீச்சரும் போறல்ல, எப்படி நடக்கும்?"

முஸ்லிம் மஜ்லிஸின்
இரண்டாவது இதழுக்கு
எமது வாழ்த்துக்கள்

## ஹாஜியார்ஸ்
## ஜுவல் ஹவுஸ்

*82/6,* கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

*Best wishes from:*

# Smacs

10 & 12 Bazaar Lane,
JAFFNA.

---

*For all your textiles*
*&*
*Readymade Garments*

*Visit*

# MISKINS TEXTILES

1, Grand Bazaar,
JAFFNA.

Branch:

## 'MISKIN'S'

22/1, Grand Bazaar,
JAFFNA.

---

தந்தி : 'ஜுவல்லர்ஸ்'

## தங்க மாளிகை

தங்க நகைகளுக்கு
தகுந்த ஸ்தாபனம்

# தங்க மாளிகை

*69,* கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி : *281*

Cable: **'IRUMBO'** T.' Phone: 443 (Ext)

# M. M. ABDULCADER & BRO.

*Direct Importers & Dealers in*

HARDWARES & BRASSWARE GOODS

WHOLESALE & RETAIL MERCHANTS

BANKERS

The Commercial Bank of Ceylon Ltd., Jaffna.

*Stores:*

**14, Stanley Road,**
**JAFFNA.**

**97, K.K.S. Road,**
**JAFNNA.**

*Best wishes from:*

## Plaus Cream House

**100, Manipay Road,**
**JAFFNA.**

For **attractive** jewellery
visit to

## Theeby Jewellers

**48, Kannathiddy,**
JAFFNA.
Phone: 282

நங்கையர் விரும்பும்
நவநாகரிக
நகைகளுக்கும்
வைரங்களுக்கும்
புகழ் பெற்று விளங்கும்
ஒரே ஸ்தாபனம்

# கே. என். எம். மீரான் சாஹிப்

-- தங்கப் பவுண் நகை மாளிகை --

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 585

**K. N. M. MEERAN SAHIB**

JEWELLERS & DIAMOND MERCHANTS.

SOVEREIGN PALACE

Kannathiddy, JAFFNA.

---

**KAPPAMARAIKKAR JEWEL HOUSE**

Dimond Soverign, Jewel Merchants & Manufacturing Jewellers

*For Guaranteed & Modernity*

**Gold Jewels**

*Orders Executed Promptly*

KAPPAMARAIKKAR
JEWEL HOUSE

Grand Bazaar,
MANNAR.

---

*Visit*

*New Razeenas*

*for*

***Oilman goods***
***Electrical &***
***Bicycle Spares***

சாய்ப்புச் சாமான்கள்
மின்சார, சைக்கிள்
உதிரிப்பாகங்களுக்கு

**நியூ றஸீனாஸ்**

பெரியகடை,
மன்னார்.

"ஆரு கண்ட எந்தப் புத்தில எந்தப் பாம்பு இரிக் கெண்டு" என்றான் பாறூக்.

அன்று முழுவதும் பாடசாலையில் இதே கதையாகத்தான் இருந்தது. அன்று யாரோ அந்த அகமதிடம் போய் இதைச் சொல்லியிருக்க வேண்டும். அவர் அன்றே அதிபரைச் சந்தித்து முழுவிபரத்தையும் தெரிந்து கொண்டதாக அதிபர் சொன்னார். அந்த அகமது இச்சம்பவத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தாராம். அதிபரே ஏதோ ஆறுதல் சொல்லி அனுப்பியதாகக் கூறினார்.

அடுத்த நாளும் அந்த ஆசிரியை 'மிஸஸ் அகமத்' என்று கையெழுத்திடுவதைக் கண்ட அதிபர் தடுத்திருக்கிறார். "அவர் எண்ட புருஷன்" என்று ஒரேஅடியாய் அடுத்துச் சொன்னாராம். ஆனால், அவருக்கு இந்த ஆசிரியையுடன் தொடர்பு ஏற்பட எவ்வித வழியுமில்லையென்றும், அவர் அவ்வாறு நடக்கக் கூடியவரல்லர் என்றும் அதிபர் உட்பட எல்லோரும் திட்டமாய்க் கூறினர்.

"இவளுக்கு ஊரில மாப்புள இல்ல அவரை வளைக்கப் போர்ற திட்டந்தான் இது" என்று ஆசிரியர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டனர்.

இச்சம்பவத்தைக் குறித்து அந்த மர்ளியா டீச்சர் எவ்விதத்திலும் அலட்டிக் கொள்வதில்லை. தன்னைப்பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கின்றார்கள் என்று, கூடக் கவலைப்பட்டதில்லை. பாறூக்குக்கு இது புரியாத புதிராகவே இருந்தது. ஆனால், அந்த டீச்சரிடம் அவன் நேரடியாக எதுவும் கேட்கவில்லை. அன்றிலிருந்து 'மிஸஸ் அகமத்' என்றே கையெழுத்திட ஆம்பித்தார் அந்த ஆசிரியை. இதனால் அவர்கையெழுத்திடும் போது அதிபர் பக்கத்திலிருந்து மர்ளியா என்று எழுதுமாறு சொல்லியே றிஜிஸ்டர் புத்தகத்தை அவரிடம் கொடுப்பார்.

நாட்கள் செல்ல இதுவொரு பழக்கப்பட்ட புளித்துப்போன செய்தியாகப் போய்விட்டது. அதிபர் இல்லாவிட்டால் 'மிஸஸ் அகமத்' என்றே கையெழுத்திடப் பட்டிருக்கும். அதிபருக்கும் இது பழக்கப்பட்டுவிட்டது. ஆனால் அந்த ஆசிரியையின் நடத்தையில் மாறுதல் தெரிய ஆரம்பித்ததைப் பாறூக் அவதானித்திருந்தான்.

அந்த அகமதும் அதைப் பற்றி அதன்பிறகு பேச்சு மூச்சில்லையாம்.

அறையில் ஒரே புழுக்கமாக இருந்தது. சம்பவங்களை ஒழுங்காகக் கோவை யாக்கி அழகாக எழுத வேண்டும் என்று நினைத்துக்கொண்டவனைப் பேனையை பேப்பரில் வைத்துவிட்டு வெளியே வந்தான் பாறூக். வெளியே மெதுவாக காற்று வீசியது. காற்று வியர்வை உடம்பில் பட்டபோது ஏற்பட்ட குளிர்ச்சியை அனுபவித்தவாறு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டான். புகையை உள்ளுக்கு இழுத்து அதன் சுவையைச் சுவைத்தவாறு சிந்திக்க ஆரம்பித்தான்.

ஒருநாள் பாறூக்கும் இன்னும் சில ஆசிரியர்களும் ஒரு வேலைத்திட்டத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் மர்ளியா ரீச்சர் அதிபரின் அறையினுள் ஆவேசமாக நுழைந்தாள். சாதுவான அந்த ஆசிரியை எப்போது மிரண்டாள் என்ற யோசனையுடன் அவளைப் பார்த்தான் பாறூக்.

"ஆ... என்ன கோலமது..."

முகம் ரத்தச் சிவப்பாகச் சிவந்திருந்தது, கண்களில் ஒருவித வெறி தாண்டவ மாடியது. முகத்தில் இதுவரை காலமும் குடிகொண்டிருந்த அந்த சாந்தம் பறந்து போய் ஒருவிதக்குரூரம் வந்திருந்தது. 'இவளுக்கு இப்படியொரு தோற்றமுண்டா, தன்னால் கற்பனைகூடச்செய்து பார்க்க முடியவில்லையே, அக்கினிப்பிழம்புகளாக இதயத் தின் ஆழத்தில் இவ்வளவு காலமும் கனன்று கொண்டிருந்த உணர்ச்சிகள் இப்போது தான் பீறிட்டு வெடித்து நெருப்பைக் கக்குகின்றதோ' என்றெல்லாம் பாறுக் சிந்தனை செய்ய ஆரம்பித்தான்

தோளில் போட்டிருந்த புடவையின் முந்தானை நழுவி விழுந்ததையும் கவனிக் காமல் அவள் அதிபரைத் நோக்கிக் கத்தினாள். கத்தல்......! அப்பப்பா, இந்தக் குரலில் இவ்வளவு கடுமையா? எங்கிருந்து வந்தது ......?

"சேர் அங்கப்பாருங்க, அந்தத் தேவடியாள்கள் எல்லாரும் என்னைப் பத்தியே பேசிறுங்க" என்று அறைக்கு வெளியே காட்டினாள். அங்கே நான்கைந்து ஆசிரியை கள் கூட்டமாகப் பேசி சிரித்துக்கொண்டிருந்தனர்.

மர்ளியா டீச்சர் தொடர்ந்து பேசினாள்;

"இதற்கு இண்டைக்கே ஒரு முடிவு கட்டணும், இல்ல, இவங்கள இண்டைக்கே நான் கிளிச்சி ரத்தம் குடிப்பன்"

அந்தக் கூற்று பொய்யில்லை என்பதை அவள் தோற்றம் உறுதி செய்தது. உண்மையாகவே இரத்தம் குடிக்கும் கோலந்தான் அது.

"என்ன சேர் சொல்றீங்க" என்று அடிக்குரலால் அதிபரை அதட்டியபோது, அதிபர் மட்டுமல்ல, கூட இருந்த ஆசிரியர்களும் திகைத்து அப்படியே ஒன்றும் பேசா மல் உட்கார்ந்திருந்தனர்.

நேற்று தானும் இன்னும் சில ஆசிரியர்களும் அந்த ஆசிரியையின் வீட்டுக்குப் போய் வந்திருந்ததை நினைவுகூர்ந்தான் பாறுக். 'பத்திரகாளியாக' வந்து நின்றாளே, அன்றிரவு அவளுக்கு ஏதோ பேய் பிடித்துவிட்டதாகவும், அந்த ஆசிரியையின் நிலைமை மோசமானதாக இருப்பதாகவும் கேள்விப்பட்டு, தனது சக ஆசிரியை என்ற முறை யில் பார்த்துவிட்டு வரவே அவர்கள் சென்றிருந்தனர். அவரின் வீட்டுவாசலில் வேப் பிலைகள் கட்டப்பட்டிருந்தன. ஏதோவெல்லாம் எழுதிச் சுவரில் தொங்கவிட்டிருந் தார்கள்.

மர்ளியா டீச்சர் ஒரு கட்டிலில் தலைவிரிகோலமாகப் படுத்திருந்தாள். முகத்தில் அமைதி குடிகொண்டிருந்தது. சிலவேளைகளில் கண்களை அகல விரித்துப் பயங்கரமாகப் பார்த்து, வீல் என்று அடித்தொண்டையால் கத்துவாளாம். சிலவேளைகளில் கையை மேலே காட்டி யாரோ தன்னை அழைப்பதாகவும், தன்னைப் போக விடுமாறும் கூறி ஓட முயற்சிப்பாளாம். ஆனால் சிலவேளைகளில் அமைதியாக இருப்பாளாம். ஒருவரு டனும் ஒன்றும் பேசுவதில்லையாம். இவையெல்லாவற்றையும் அங்கு விசாரித்துத் தெரிந்து கொண்டார்கள். அவர்கள் போய் சற்று நேரத்துக்கெல்லாம் உறக்கம் கலைந்த மர்ளியா டீச்சரை உற்றுக் கவனித்தான் பாறுக். உடல் சரிபாதியாக மெலிந்து விட்டிருந்தது. முகச் சுருக்கங்கள் சற்று அதிகமாகவே தெரிந்தன. கண்கள் சற்று உள்ளே சென்று குழி விழுந்திருந்தன. கண்களை அகல விரித்து சுற்றி இருந்தவர்களைப் பார்த்தாள்.

யாரையுமே அவள் அடையாளம் காணவில்லே. போதாக்குறைக்கு ஒருவர் — அவளின் உறவினராக இருக்கலாம் — அருகே சென்று, "என்னைத் தெரியுமா?" என்று கேட்டார். ஒன்றும் பேசாமல் அவரையே வெறித்துப் பார்த்தபோது ஏன் கேட்டோம் என்று சங்கடத்துடன் கூடியிருந்தவர்களைப் பார்த்து ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு வெளியே போனுர் அவர்.

"இந்தப் பார்வ நல்லா இல்ல" என்று ஒரு வயோதிபர் சொல்லி வாய்மூட வில்லே. அந்த ஆசிரியை மேலே பார்த்துச் சப்தமிட்டாள், "வாப்பா, அதோ என்னைக் கூப்பிர்ருர்" கைகளை மேலே காட்டியபடி அவள் மீண்டும் மீண்டும் அதையே பெரிய சத்தத்தில் கூறிக்கொண்டிருந்தாள். இரு பெண்கள் அவளைக் கெட்டியாகப் பிடிந்திருந்தனர்.

"அதோ, அங்க என்ர வாப்பா அங்கப்பாருங்க......"

அவர்கள் அறையை விட்டு வெளியே வந்தனர். பாறூக் அங்கிருந்த வயோதி பரைக் கேட்டான்;

"இப்ப என்ன வைத்தியம் செய்றீங்க?"

அவர் அந்த ஆசிரியையின் ஒரு நெருங்கிய உறவினராக இருக்கவேண்டும். கலங்கிய கண்களுடன் காணப்பட்ட அவர் மெல்லிய குரலில் சொன்னுர்; "நாங்க என்ன செய்யறது? புள்ளய பேய் நல்லாப் புடிச்சுப் போட்டு. பேய் வைத் தியனை வைச்சுப் பாக்கிரும் கெதியாய்ச் சுகமாயிடு மெண்டு சொன்னுர்"

"டொக்டரை கொண்டு வந்து காட்டலயா?" என்று ஒரு ஆசிரியர் கேட்டார்.

"டொக்டர் என்னத்த செய்யிறது பேய்க்கு, ஒரு டொக்டர் நேற்று வந்தார். அது தானுகச்சுகமாகுமெண்டு மருந்தெல்லாம் கொடுத்தார்" என்ருர் வயோதிபர்.

"இது ஹிஸ்டீரியா வியாதி, பெரும்பாலும் கல்யாணம் முடித்தவுடன் சரியாய் போயிடுமெண்டு டொக்டர் சொன்னுர்" என்று அங்கிருந்த விபரம் தெரிந்த இளைஞன் ஒருவன் அவர்களிடம் கூறினன்.

மர்லியா டீச்சர் அதட்டலுடன் பாடசாலேயில் வந்து நின்ருரே அன்றே டீச்சருக்கு ஹிஸ்டீரியாக் கண்டிருப்பதாக அதிபர் கூறிவிட்டார். அன்று அவர் அதைப் புரிந்து கொண்டு விட்டதால்தான் அவ்வளவு சாதுர்யமாக நடந்து கொண்டார். அவருக்கு இது போல் நிறைய அனுபவங்கள் இருக்கும் போலும். அவரின் சாதுர்யத் தால் தான் அந்த ஆசிரியை செய்த களேபரம் வெளியே தெரியாதவண்ணம் அந்த அறைக்குள்ளேயே அடங்கிப் போயிற்று.

"நான் அவன்கள்ர இரத்தத்தைக் குடிக்கப்போறன் என்ன சொல்றீங்க" என்று கேட்டுக்கொண்டு தன் எதிரே நின்ற அந்த ஆசிரியையை நோக்கி நிதானமாகக் கூறினுர்; "அத விசாரிப்பம். நீங்க முதல்ல இரிங்க."

கதிரையொன்றை இழுத்து அந்த ஆசிரியையின் அருகில் போட்டார். "நான் இரிக்க வரல்ல" என்று அடம்பிடித்த ஆசிரியையை ஒருவாறு உட்காரவும் வைத்தார்.

ஆசிரியைக்கு முகமெல்லாம் வியர்த்திருந்தது. தன் முந்தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

சற்றுநேர அமைதி. ஒருவரும் பேசாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தனர். சிறு பிள்ளையொன்று, ஆசிரியரிடம் இன்னொரு பிள்ளையைப் பற்றி முறையிடுவது போல், சக ஆசிரியர்கள் பற்றி அதிபரிடம் முறையிட்ட — அதுவும் அதட்டலாக — அந்த ஆசிரியையே எல்லோரும் விநோதமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஒரு ஆசிரியையைப் பற்றி இன்னொருத்தி கதைப்பதும், அவர்களிடையே சண்டை வருவதும், அந்த ஆசிரியைகள் சம்பந்தப்பட்ட சொந்த விடயங்கள் அல்லவா; ஒரு சிறுபிள்ளை மாதிரி அதிபரிடம் இதையெல்லாம் முறையிட்டால் அதிபர் என்ன செய்வார்? இதுபற்றி மற்ற ஆசிரியைகளிடம் அதிபர் விசாரிப்பதுகூட ஒரு வரம்பு மீறலாகுமே? இவளுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ? நடந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது, நிச்சயமாகப் பைத்தியந்தான் பிடித்துவிட்டது.'' என்றெல்லாம் சிந்தித்துக்கொண்டிருந்தான் பாறூக்.

அதிபர்தான் முதலில் பேசி அந்த அமைதியைக் குலைத்தார்.

'' டீச்சருக்கு வேர்க்குது தண்ணி தரவா டீச்சர் '' என்றவாறு பக்கத்திலிருந்து தண்ணீரை எடுத்துக் கொடுக்குமாறு பாறூக்குக்கு ஜாடை காட்டினார். எந்த விதப் பதிலுமில்லாமல் மிக அமைதியாக உட்காந்திருந்த அந்த ஆசிரியையை இப்போது பார்க்க வியப்பாக இருந்தது. சற்றுமுன் கத்திய ஆசிரியையா இவள் என்று வியக்கும் வண்ணம் சாந்தமான முகத்துடன் உட்கார்ந்திருந்தாள்.

பக்கத்திலிருந்த கூசாவிலிருந்த தண்ணீரை ஒரு கிளாசில் ஊற்றிக் கொடுத்தான் பாறூக். அவள் அதை வாங்காமல் அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அந்தப்பார்வையை இப்போது நினைத்தாலும் ஒரு வெட்க உணர்வு அவனுக்கு மேலிடுகிறது. தன்விழிகளை அவன் முகத்தில் நிலை நிறுத்தி, அவனையே பார்த்துக் கொண்டு, தண்ணீரை வாங்காமல் உட்கார்ந்திருந்தாள் அவள். அவனின் சங்கடத்தை உணர்ந்த அதிபர் 'தண்ணிய வாங்குங்க டீச்சர்' என்றபோது திடீரென்று ஏதோ நினைத்தவள் போல் தண்ணீரை வாங்கிக் கொண்டாள். பின் மடமட வென ஒரே மூச்சில் நீர் முழுவதையும் குடித்துத் தீர்த்தாள். பின் அதிபர் அந்த ஆசிரியை நோக்கி மிக இதமாகச் சொன்னார், ' டீச்சர் நீங்க இப்ப ஊட்ட போங்க. நான் அவர்களை விசாரித்துக் கொள்றன்.''

மந்திரத்தால் கட்டுண்டவள்போல் மறுபேச்சில்லாமல் வெளியேறினாள் அந்த ஆசிரியை.

ஒரு கண நிகழ்ச்சியாக நடந்து முடிந்துவிட்ட இச்சம்பவத்தால் அங்கிருந்த ஆசிரியர்கள் எல்லோரும் அதிர்ச்சியடைந்து, அந்த ஆசிரியைக்குப் பைத்தியம்தான் பிடித்துவிட்டது என்ற முடிவுக்கு வந்த நேரத்தில்தான் அதிபர் கூறினார்; ''டீச்சருக்கு என்ன எண்டு நினைக்கிறீங்க. இதான் ஹிஸ்டீரியா. எனக்கி ஆரம்பத்தில சந்தேகம். இப்பதான் உறுதியாச்சி. இப்பிடியொரு கேச நான் அக்கரைக்குளத்தில் படிப்பிக்கும் போதும் கண்டிருக்கன். ஆன அது வேற மாதிரி.''

அன்றுதான் ஹிஸ்டீரியா நோயாளி ஒருவரை பாறூக் கண்டான். அன்றிரவே ஆசிரியையின் நிலைமை மோசமாகப் போய்விட்டது என்று கேள்விப்பட்டான்.

கையிலிருந்த சிகரெட்டில் ஒரு இழுப்பு இழுத்துவிட்டு சிகரெட் துண்டை வீசினன் பாறூக். வெளியே வீசிய காற்ருல் வியர்வையெல்லாம் போய் விட்டிருந்தது. உள்ளே அறைக்குள் வந்து கதிரையில் அமர்ந்தான்.

அன்று அந்த மர்ளியா டீச்சரை வீட்டில் பார்த்துவிட்டு வரும்போது, ''டீச்சருக்கு ஏன் இன்னும் கல்யாணமாகவில்லே.'' என்று ஒரு வெளியூர் ஆசிரியர் கேட்டபோது மற்ற ஆசிரியர் கூறிய பதிலே பாறூக் இப்போது நினைத்துப் பார்த்தான். அது அவனுக்கும் தெரிந்ததுதான்.

''எளிய குடும்பம். வாப்பாவுமில்ல. மௌத்தாப் போயிட்டார். இவ ஒரு டீச்சர். இவட தகுதிக்கு ஒரு மாப்பிள எடுக்க சீதனம், டொனேஷன் எண்டு தேவைப் படுமே...''

வாசல் முற்றத்தில் நின்ற சேவல் ஒன்று சிறகடித்துக் கூவிற்று. தெருவில் விளையாடும் சிறுவர்களின் சத்தம் கேட்டது.

அந்த ஆசிரியையின் முகமே மனதில் நிறைந்திருக்க, ஒரு பெருமூச்சு விட்டவாறு கதையை எழுத ஆரம்பித்தான்; ''அவளுக்கு சுமார் முப்பது வயதிருக்கும்...''

இஇஇ

---

உலக மக்கள் எல்லாம் முஸ்லிம்களாக மாருவிட்டாலும்கூட உலகம் இஸ்லாமிய சட்டப்படியே நடக்கவிருக்கின்றது. இது இன்னும் ஒரு சில நூற்றுண்டுகளுக்குள்ளேயே நிகழவிருக்கும் பெரும் அரசியல் மாற்றமாகும். அவ்வாறு மாறினலன்றி மக்கள் விரும்பும் சுபீட்சம், சமத்துவம், சமாதானம் இவையாதொன்றும் அவர்களுக்குக் கிட்டவே கிட்டாது.

— பெர்னட்ஷா

---

# பெண்களின் உயர்விற்காக இஸ்லாம் வழங்கிய உரிமைகள்

செல்வி. ஏ. எல். நவீரூபீவி
*உயிரியல் விஞ்ஞானம் — 3ம் வருடம்*

*உலக வரலாற்றை ஆராய்ந்த அறிஞர்களும் மாமேதைகளும் பெண்களுக்குச் சகல உரிமைகளையும் இஸ்லாமிய ஷரீஅத்தே வழங்கி இருக்கின்றதெனக் கூறுகின்றனர். பெண்களின் உரிமைகள் இஸ்லாத்தில் மறுக்கப்பட்டிருக்கின்றதென வாதாடும் சிலர் பெண்களுக்குக் கொடுக்கவேண்டுமெனக் கூறும் உரிமைகளையும், சலுகைகளையும் அவர்களுக்கு வழங்கினுல் பெண்கள் சமுதாயம் சாக்கடை நாற்றமாக மாறிவிடும் என்பதில் ஐயமில்லை. இஸ்லாத்தை விளங்காதவர்களும், குழப்பத்தையேற்படுத்த முனைபவர்களும் அந்நியத் தாக்கங்களினுல் தாக்குண்ட இன்றைய முஸ்லிம் பெண்களின் நடைமுறையைச் சுட்டிக்காட்டுகின்றனர். ஐரோப்பாவில் பெண்களுக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கின்றது என்று வாதாடுகின்றனர். ஐரோப்பாவில் பெண்கள் சுதந்திரமாக வாழ்ந்த காலமும் உண்டு. அதாவது பிரபுத்துவப் பெண்கள் செல்வந்தர்களின் காமக் களியாட்டங்களுக்கு இலக்காகி, ஆடிப்பாடி, ஆடவர்களின் ஆரவாரங்களுக்கும், கைதட்டல்களுக்கும் இலக்காகித் தன்னை மறந்திருந்தனர். உண்மையில் இது பெண்களுக்கு அளிக்கப்பட்ட உரிமையல்ல. ஐரோப்பாவில் 'தொழிற் புரட்சி ஏற்பட்டபோது பெண்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு, பெண்களும், சிறுவர்களும் தொழிற்சாலைகளில் கொடுமைப்படுத்தப்பட்டனர். இப்பரிதாபத்தை எதிர்த்துச் சிலர் கோஷமிட்டனர். அக்கோஷம் பெண்களின் விடுதலைக்காக எழுப்பப்படாமல் சிறுவர்களுக்காகவே எழுப்பப்பட்டது. முதலாவது உலகப்போரில் ஐரோப்பிய, அமெரிக்க அனேக வீரர்கள் கொல்லப்பட்டதால் அங்குள்ள பெண்கள் விதவையாக்கப்பட்டுத் தங்களின் உணவு, உடைத்தேவைகளுக்காகத் தங்களை இழக்கவேண்டிய நிலையேற்பட்டது. ஆனுல் இஸ்லாம் பெண்களுக்கு அளித்திருக்கும் உரிமைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது இம்மையிலும், மறுமையிலும் சுபீட்சமாக வாழலாம் என்பது திண்ணம்.*

*பெருமானுர் (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு முன் அரபு நாட்டில் என்ன? முழு உலகிலும் பெண்கள் இம்சிக்கப்பட்டு வந்தார்கள். பிறந்தவுடன் இவ்வுலகைப் பார்ப்பதற்கு முன் குழியிலே புதைக்கப்பட்டார்கள். ஓராடவன் தனக்கு விரும்பிய எத்தனையோ பெண்களுடன் கூடிக்குலாவுகின்ருன். அதே நேரத்தில், ஒரு பெண் ஒரே நேரத்தில் பல ஆடவருக்கு மனைவியாகவும் இருக்கிருள். இவ்வாறு அன்று பெண்கள் மிருகங்களை விடவும் மிகவும் கீழ்தரமான முறையில் நடாத்தப்பட்டார்கள். அவர்கள் ஒரு மனிதப் பிறவியாகக் கணக்கெடுக்கப்படவில்லை. அவர்களுக்கு வழங்க வேண்டிய அநேக உரிமைகள் மறுக்கப்பட்டன. கணவனை இழந்த 'கைம்பெண்' வேருெருவரை மணந்து கொள்ளாமல் தடுக்கப்பட்டாள், அனந்தரச் சொத்துக்களைப் பெறமுடியாதவளாக ஆக்கப்பட்டாள். கடின உழைப்பால் தன்னைப் பாதுகாக்கவேண்டிய நிலையேற்பட்டு உருக்குலைந்தாள். தனக்காக தன் பிள்ளைகளுக்காகக் கற்பை விற்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டாள். சமூகத்தில் சொத்துள்ள பெண்கள்தான் திருமணம் முடிக்கத் தகுதியானவர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள். இந்நிலை பெருமானுரின் ஷரீஅத் பிறப்பதற்கு முன்னும், இஸ்லாமிய அமைப்பு இல்லாத இடத்திலும்தான் காணப்*

பட்டது. ஆனால் முஸ்லிம்களின் மத்தியில் இன்று இந்நிலை உருவாக்கப்பட்டுவிட்டதென்பது பெரும் வேதனைக்குரிய விடயமாகும்.

பெண்களின் நல்வாழ்வுக்காக அல்-குர்ஆன் மூலமும், அல்-ஹதீஸ் மூலமும் அநேக உரிமைகளை வழங்கி சமூகத்திலும், மறுமையிலும் அவள் ஒரு மனிதப்பிறவியென்றும், அவளுக்கு ஒரு ஆத்மா இருக்கின்றது என்றும் கூறுவது இஸ்லாமிய வாழ்க்கை முறையின் ஒரு அடிப்படைக் கோட்பாடாகும். இவ்வுலகிலென்ன? மறுமையிலும் அவளுக்கு வழங்க வேண்டிய நற்கூலிகள் சமமாகவே வழங்கப்படுகின்றன. இதனை அல்குர்ஆன் தெளிவாக விளக்குகின்றது. "ஆதலால் அவர்களுடைய இறைவன், அவர்களுடைய (இந்தப்) பிரார்த்தனையை அங்கீகரித்துக் கொண்டதுடன் உங்களில் ஆண்-பெண் (இருபாலாரிலும்) யார் நன்மை செய்த போதிலும் நிச்சயமாக நான் அதை வீணாக்கமாட்டேன்; உங்களில் ஒருவர் மற்றொருவரில் உள்ளவர் தான் (ஆகவே கூலி கொடுப்பதில் ஆண், பெண் என்ற பாகுபாடில்லை.)" (4 : 195)

ஒரு பெண் சொத்துக்களையோ, தம்முடைமைகளையோ தாம் விரும்பியவாறு பயன்படுத்தும் உரிமையைப் பெற்றிருக்கவில்லை. அதனால் அவளது சுதந்திர வாழ்க்கையும் பாதிக்கப்பட்டிருந்தது. ஆனால், இஸ்லாம் பெண்களின் சுதந்திரப் பொருளாதார நிலைக்கேற்ப தம் சொத்துக்களை வைத்திருக்கவும், உபயோகிக்கவும், அனுபவிக்கவும் உரிமை வழங்கியுள்ளது.

திருமணம் முடித்த ஒரு பெண் சொத்து வைத்திருந்தால் அதனை அவள் செலவு செய்யும் உரிமையை இஸ்லாம் வழங்கியிருக்கிறது. கணவன் பலாத்காரமாக சொத்தைக் கவர்வது தடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் எந்தச் சொத்துக்கும் அவள் உரிமை இல்லாதவளாக இருந்தால் அவளது பணத் தேவைகளை அவளது கணவன் நிறைவு செய்வதைப் போன்று, அவளிடம் சொத்திருக்கும்போதும் கணவன் செலவு செய்ய வேண்டும். கணவன் அவளைப் பராமரிக்க மறுத்தால் கணவன் மீது வழக்குத் தொடர்ந்து வாழ்க்கைச் செலவை அளிக்கும்படியோ அல்லது விடுதலையளிக்கும்படியோ நிர்ப்பந்திக்க முடியும். ஆகவே இவ்விடயத்திலும் ஆணைவிடப் பெண்ணுக்கே அதிக உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றதென்பது நியாயமான தொன்றாகும்.

பெண் தன் மணவாழ்க்கையில் தனது விருப்பப்படியே ஆண்களை மணந்து கொள்ளும் உரிமையைப் பெறுகின்றாள். ஒரு பெண்ணின் விருப்பத்துக்கு மாறாக அவளுக்கு முடித்து வைக்கப்படும் திருமணம் செல்லுபடியற்றதாகும். "எந்த விதவையையும் கலந்தாலோசிக்காது அவளைத் திருமணம் செய்து கொடுத்தலாகாது; எந்தக் கன்னிப் பெண்ணையும் அவளது அங்கீகாரமின்றி மணமுடித்துக் கொடுக்கக் கூடாது. அவளது மௌனமே அவளது அங்கீகாரமானதாகும்" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி, முஸ்லிம்)

கொடுமைப்படுத்தும் தன் கணவனிடமிருந்து தன்னை விடுவித்து விவாகரத்துப் பெற, வேறு அமைப்புப் பெண்களும், இஸ்லாமிய ஷரீஅத்தின் தோற்றத்துக்கு முன்னுள்ள பெண்களும் கஷ்டத்தை அனுபவித்தார்கள். வருடக்கணக்காகப் பல இடங்கள் சென்று வாதிட்டபோதும், அவள் அந்த உரிமையைப் பெற்றுக் கொள்ளவில்லை. நீண்ட காலங்களின் பின்னே சில பெண்கள் இவ்வுரிமையைப் பெற்றனர். ஆனால், இஸ்லாம்

ஒரு பெண் தனது கணவனிடமிருந்து நியாயமான காரணங்களுடன் விவாகரத்தைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கிறது. இவ்வுரிமையைப் பல போராட்டங்களின் மத்தியில் ஐரோப்பியப் பெண்கள் 18ம் நூற்றாண்டில்தான் பெற்றனர்.

''கல்வியைத் தேடிக்கற்பது ஆண்களுக்கும் பெண்களுக்கும் கடமையாகும்'' என நபி (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். அறிவினைப் பெறும் விடயத்தில் இஸ்லாம் ஆணுக்குக் கொடுத்திருக்கும் அதே உரிமையைப் பெண்ணுக்கும் வழங்கி இருக்கிறது. அல்லாஹ்விலும், இஸ்லாத்திலும் நம்பிக்கை கொள்வதற்கு அவசியமானதொரு நிபந்தனையாக அறிவு தேடுவதை ஒவ்வொரு முஸ்லிமுக்கும் இஸ்லாம் கட்டாயப்படுத்தி உள்ளது. வரலாற்றிலே தோன்றிய எத்தனையோ பெண்கள் தம்மறிவால் இஸ்லாத்துக்குப் புத்துயிர் அளித்துக்கொண்டேயிருக்கிறார்கள். நபியவர்களின் அன்பு மனைவி ஆயிஷா (ரலி) அவர்கள் அல்-குர்ஆனுக்கும், அல்-ஹதீஸுக்கும் அமைவாக பெண்களுக்கு ஏற்படும் எத்தனையோ பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டார்கள். 'மரியம் ஜமீலா' என்ற மாது இன்றும் அரிய பெரிய நூல்களை எழுதித் தனது இஸ்லாமிய மார்க்கத்துக்குப் புத்துயிரளித்துக் கொண்டிருக்கிறார். பெண்களை அறிவைத் தேடவேண்டுமெனக் கட்டாயப்படுத்திய பெருமை இஸ்லாத்துக்கே சாரும். ஏனெனில் அவர்கள் அறிவைப் பெற்று ஆன்மீக வாழ்க்கையின் உச்ச நிலையை அடைய வேண்டுமென்று இஸ்லாம் விரும்பியது. ஆனால் ஐரோப்பாவில் பெண்களுக்கு இறுதிக் காலத்திலேயே இவ்வுரிமை வழங்கப்பட்டது. இதுவும்கூட பொருளாதார நிலைமையின் நிர்ப்பந்தமாகும். மேனாட்டுப் பெண்களைப் போன்று, இஸ்லாமியப் பெண்மணிகளும் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்குப் போராட வேண்டிய அவசியமில்லை. ஜனநாயக நாட்டின் தாயகமான இங்கிலாந்தில் படித்துப் பட்டம் பெற்று, அரசாங்கத் திணைக்களங்களில் பணியாற்றும் பெண்களுக்கு, ஆண்களைவிடக் குறைந்த சம்பளமே வழங்கப்படுகிறது. மறுக்கப்பட்ட இவ்வுரிமையைப் போராட்டத்தின் மூலமும் பெற்றுக் கொள்ளவில்லை.

வாரிசுச் சொத்தைப் பெறும் விடயத்திலும் இஸ்லாம் பெண்ணினத்தை ஒதுக்கித் தள்ளிவிடாமல் சொத்தைப்பெறும் உரிமையையும் அளித்துள்ளது. ''ஆணுக்குரிய பங்கு இரு பெண்களுக்குரிய பங்குக்குச் சமமானது'' (அல்குர்ஆன்). இது பெண்களுக்கு வழங்கப்பட்ட நியாயமான உரிமையாகும். குடும்பத்தின் சகல தேவைகளுக்கும் ஆண் இரு பங்கை மாத்திரம் பெறுகின்றான். பெண் தனது தேவைக்கு மாத்திரம் ஒரு பங்கைப் பெறுகின்றாள் என்றால் பெண்ணுக்கே இப்பங்கு முறை சாதகமாக இருக்கின்றது. ''மேலும், அவர்களுடன் கண்ணியமான முறையிலும் (சகிப்புத்தன்மையுடனும்) நடந்து கொள்ளுங்கள்.'' (4 : 19) என அல் - குர்ஆன் கூறுகின்றது. ''உங்கள் மனைவிக்கு நல்லவரே உங்களில் மிகச் சிறந்தவர்'' (திர்மிதி) மேற்கூறப்பட்ட இரு போதனைகளிலும் மனைவியை தகுந்த முறையில் நடாத்த வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு மனிதன் நல்லவனா, கெட்டவனா என்பதை அறிவதற்கு அவன் மனைவி விடயத்தில் நடந்து கொள்ளும் முறையே போதுமானது ஆகும். ஒரு பெண்ணை எந்த விதத்திலும் துன்புறுத்தக்கூடாதென ஒவ்வொரு விடயத்திலும் இஸ்லாம் எடுத்தியம்புகின்றது. ஏனெனில் பெண் ஒரு மனிதப்பிறவி, அவளிடமும் ஒரு ஆத்மா இருக்கின்றதென்பதை அடிக்கடி இஸ்லாம் எமக்கு ஞாபகமூட்டுகின்றது. ஆண் நினைத்தபோது விவாகரத்துச் செய்வதற்கு உரிமை இருந்தபோதும் பெருமானார் ( ஸல் ) அவர்களின் ஹதீதொன்று அதனைத் தாமதப்படுத்துகின்றது. ''விவாகரத்துச் செய்வது இறை

வனுக்கு வெறுப்பான நற்காரியமாகும்.'' மனைவி செய்யும் ஒவ்வொரு அற்பச் செயலுக்கும் கணவன் மனைவியை அடிப்பதற்கு முந்திக்கொள்ளலாகாது. பெருமானார் (ஸல்) அவர்கள் ''உங்களில் எவரும் தன் மனைவியை ஒட்டகையைக் கசையாலடிப்பதுபோல் அடித்துவிட்டு மாலையில் அவளுடன் உடலுறவு கொள்ளாதீர்'' (புகாரி முஸ்லிம்) என எச்சரித்துள்ளார்கள். எனவே கணவன் கொடுமைப்படுத்துபவனாயின் அவனைப்பிரிவதற்கு மனைவிக்குச் சட்டபூர்வமான உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

பெண் நாற்சுவர்களுக்கு மத்தியில் இருண்ட அறையில் முடங்கிக் கிடக்க வேண்டுமென்று இஸ்லாம் பணிக்கவில்லை. தனது தேவைகளுக்காக, விவாகம் செய்ய விலக்கான முஸ்லிமின் துணையுடன் ஒழுக்கமாக வெளிச்செல்ல அது அனுமதிக்கிறது. அதே நேரத்தில் அந்நிய ஆடவனுடன் வெளியே செல்வதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது. அந்நிய ஆடவருடன் சென்ற அநேக பெண்கள் கெடுபடுவதற்கு மிகுந்த வாய்ப்புக்கள் இருக்கின்றன. ''எந்தப் பெண்ணும் ஒரு ஆணுடன் தனித்திருக்க வேண்டாம்; ஏனெனில் 'ஷைத்தான்' அங்கு மூன்றாமவனாக இருக்கிறான்'' என பெருமானார் (ஸல்) கூறியுள்ளார்கள். எனவே இஸ்லாம் விடுத்துள்ள உரிமைகளும் சட்டதிட்டங்களும் பெண்ணினத்தை ஆக்குவதற்கே தவிர அழிப்பதற்கல்ல.

இன்றைய முஸ்லிம் பெண்கள் 'எங்களுக்கு உரிமை வழங்கப்படவில்லை' என்று கூச்சலிடுகின்றனர். ஆனால் இஸ்லாம் பெண்களுக்கு அளிக்காத உரிமையோ, விதியோ உண்டா? தமக்கு ஆண்களோடு சரிசமமான மனித அந்தஸ்து வேண்டுமென்று பெண்கள் கோருகின்றனர் ஆனால் இதனை இஸ்லாம் கொள்கைரீதியிலும், சட்டமூலமும், நடைமுறையிலும் பெண்களுக்கு அளித்துவிட்டது.

பொருளாதார சுதந்திரமும், சமூக வாழ்க்கையில் நேரடியாகப் பங்குபற்றும் உரிமையும் வேண்டுமென்று அவர்கள் கோருகின்றனர். உண்மையில் இவ்வுரிமையை முதன்முதலில் பெண்களுக்களித்த சமயநெறி இஸ்லாமே. கல்வி கற்கும் உரிமையை இஸ்லாம் அங்கீகரித்துள்ளது. தனது அனுமதியின்றித் தான் மணமுடித்துக் கொடுக்கப்படாதிருக்கும் உரிமையை அவள் கோருகின்றாளா? இஸ்லாம் இந்த உரிமையை மட்டுமன்றி, தனது திருமண ஏற்பாடுகளைத் தானே செய்து கொள்ளும் உரிமையையும் அவளுக்கு வழங்கி இருக்கிறது.

வீட்டில் தனது பணிகளைச் செய்யும் போது தான் அன்பாகவும், நியாயமாகவும் நடாத்தப்படவேண்டுமென்பதும், தன்னைத் தனது கணவன் நீதியாகவும், நியாயமாகவும் நடாத்தத்தவறினால் விவாக விலக்கைப் பெற்றுக்கொள்ள உரிமை வேண்டும் என்பதும் அவளது கோரிக்கையா? இஸ்லாம் இவ்வுரிமைகளனைத்தையும் அளித்து அவற்றைப் பேணிக்காப்பதை ஆண்களின் கடமையாக மாற்றி உள்ளது.

வீட்டுக்கு வெளியே சென்று உழைக்க வேண்டும் என்கிறாளா? இவ்வுரிமையையும் இஸ்லாம் அங்கீகரித்துள்ளது. தங்களுக்கு 'வாரிசுச் சொத்து'ப் பெறும் உரிமையை வேண்டி நிற்குமுன்னே 'மூன்றிலொரு' பங்கை அளித்து அவர்களின் உரிமையைப் பாதுகாக்கவில்லையா? ஒரு ஆத்மாவுள்ள மனிதப்பிறவி என்ற அத்திபாரத்தைப் பெண்களுக்கிட்டு, அதன்மீது அவர்களின் உரிமையை இஸ்லாம் கட்டி எழுப்பவில்லையா?

ஆனால் இழிந்த, கீழ்த்தரமான, தரம்கெட்ட ஆடம்பர வாழ்க்கையிலீடுபட உரிமை வேண்டுமென்று கோருகின்றனா? அப்படியானால் இஸ்லாம் இதனை அவளுக் களிக்கத் தயாராக இல்லை. பெண்ணுக்கு மட்டுமன்றி இத்தகைய தரம்கெட்ட அனாச் சார வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு ஆணுக்கும் இஸ்லாம் அனுமதி வழங்கவில்லை. எனவே பெண்களின் உயர்வுக்காக எண்ணற்ற உரிமைகளை இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியிருக்கிறது. பெருமானார் காலத்தில் வாழ்ந்த 'சஹாபிய்யத்துப் பெண்கள்' இஸ்லாம் அளித்த உரிமைகளைப் பெற்று வாழ்ந்து உலகில் சிறந்த பெண்களாக மதிக்கப்பட்டார்கள். அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வருகின்ற எத்தனையோ பெண்கள் இன்று இஸ்லாத்துக்கு இலக்கணமாகத் திகழ்கின்றனர். அந்நிய கலாசாரத் தாக்கங்கள், நம் பெண்மணிகளுக்குப் பிடித்துள்ள பெரும் நோயாகும். இந்நோயின் காரணத்தினால் இஸ்லாம் வழங்கிய உரிமைகளும், சுதந்திரங்களும், அவர்களின் கண் களுக்குப் புலப்பட மறுக்கின்றன. தங்களின் நன்றிகெட்டதன்மையால் இஸ்லாத்தை இழித்துரைக்கின்றனர். எது எவ்வாறு இருப்பினும் பெண்களின் உயர்வுக்காக இஸ் லாம் உரிமைகளையும், சட்டதிட்டங்களையும், சுதந்திரங்களையும் வழங்கி இருக்கின்ற தென்று, அல்-குர்ஆனும். அல்-ஹதீதும் இறை சந்நிதானத்தில் சாட்சி சொல்லத் தான் போகின்றன.

**உசாத்துணை நூல்கள்**

ஹுகூகுல் இன்ஸானி பில் இஸ்லாம்
(இஸ்லாத்தில் மனித உரிமைகள்)

ஐயமும் தெளிவும் (முகம்மது குதுப்)

---

உயர்தர கலாசாரத்தையும் நாகரிகத்தையும் உலக மக்கள் அடைய வேண்டுமாயின், முஹம்மது நபியின் கொள்கைகளையும் குறிக்கோள்களையும் அப்படியே தழுவ வேண்டும். இஸ்லாத்தின் அடிப்படையில் மேற்கத்திய நாடு களில் வசிப்பவர்கள் செயலாற்றுவார்களாயின், எந்தவொரு 'இஸம்' ஐரோப்பாவுக்குத் தேவையில்லை.

— கோட்லிப் வில்லியம் லீய்ட்னர்

Phone: 531 Grams: 'ENEMES'

# N. M. Sultan Mohideen Hadjar & Bros.

Dealers in fancy goods,
Presentation Articles,
Sundrices Stainless,
Steelwares, Glass Enamal,
Aluminimum wares
Stationery Groceries,
Oilments etc.

123, 125, 143, K. K. S. Road,
Jaffna.
No. 2, New Market,
Hospital Road,
Jaffna.

EVERY AFFAIR
Has a good begining

REFINE
Dress Manufactory

3, Jumma mosque Lane,
JAFFNA.

With the best compliments from:

# Noorjahan Gold House

Central Road,
SAMMANTHURAI.

*Branches:*

**M. M. L. S.,** Jaffna.

**Noorjahan Textiles**
33/1, Central Road.
Sammanthurai.

**Noorjahan Gold House**
139, Bankshell Street
Colombo - 11.

**Noorjahan Trade Centre**
70/1, Reclamation Road,
Colombo - 11.

குளிரூட்டப்பட்ட

# கொழும்பு கோல்ட் ஹவுஸ்

உங்களை அழைக்கிறது.

மாற்றுக் குறையாத
தங்கத்திலும், வைரத்திலும்
நகைகள் வாங்கவும்
புதுப்புது டிசைன்களைத்
தெரிவு செய்யவும்
இன்றே விஜயம் செய்யுங்கள்

உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான நகை வியாபாரிகள்

## கொழும்பு கோல்ட் ஹவுஸ்

( குளிரூட்டப்பட்டது )

79, பிரதான வீதி, — கல்முனை.

உங்களுக்குத் தேவையான
சகலவித
மீன் பிடிக்கும் நூல்வலைகள்
சைக்கிள், மோட்டார் வாகன
உதிரிப்பாகங்கள்
சாய்ப்புச் சாமான்கள்

எம்மிடம்
நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

## என்.எஸ். அப்துல்காதர் அண் சன்ஸ்

பெரியகடை,
மன்னார்.

*Visit*
*For your*
**Suitcase Requirements**

## HANFICO

168, K. K. S Road,
JAFFNA.

*Best Wishes from :*

BASHEER BROTHERS

— Glass & Picture Merchant —

311, K. K S. Road,
JAFFNA.

*For Jewels Destinctive in Design & Dependable in Quality*

Visit for your
POPULAR JEWELLERS

CENTARY JEWELLERS

165, K K S Road,
JAFFNA.

— Gold & Diamond Set Jewellers —

Phone: 7828

*Branch:*

Farween Jewel Palace

Specialist in
Tailoring —

Latest Tailoring
&
Readymade Stores

1/3, Power House Road,
JAFFNA.

வண்ணத் துணியுகத்து
வளமார் வகையனைத்தும்
எண்ணம்போல்
தேர்ந்தெடுக்க ஏற்றதோர்
எழிற்கூடம்

கணேசன் ஸ்ரோர்ஸ்

KANESAN STORES

63, 78, K. K. S. Road,
JAFFNA.

தொலைபேசி 7169, 8025

# இஸ்லாமும் இன்றைய இஸ்லாமியரும்

யூ. எல். ஏ. கரீம்.
வணிகமானி (சிறப்பு) – இறுதியாண்டு

இன்றைய உலகில் வாழ்வின் குறிக்கோள் என்னவென்று புரியாது 'மனிதர்கள்' என்ற போர்வையில் பல்வேறு இனத்தவரும், மொழிபேசுபவர்களும், நாட்டினரும் வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் காணக்கூடியதாகவுளது. இந்நிலைக்குக் காரணம் அவர்கள் தம் பிறவிப்பயனை அறியாமல் இருப்பதே என்று துணிந்து கூறலாம். இந்நிலையில் அவர்கள் என்ன செய்ய வேண்டும்? எவ்வாறு வாழவேண்டும்? என்று தாமே கேட்டுக் கொண்டு விடைகாண முயலல் வேண்டும். இவ்வாறு முயல்பவர்களும், ஏன் உலக மாந்தர் அனைவரும் "இஸ்லாம் என்றால் என்ன?" என்பதை முதலில் அறிந்து புரிந்து கொள்வார்களாயின் அனைத்து உலகியல் பிரச்சனைகளுக்கும் இலகுவில் தெளிவு பெறலாம்.

இஸ்லாம் என்றால் என்னவென்று ஆழ்ந்து நோக்கின், "நிறைவு பெற்ற சாந்தியில் இருத்தலும், நற்குணங்கள் பொருந்திய முழுமை பெற்ற நேர்மையான வாழ்க்கை முறையினை வாழ்வதற்காக உண்மையாக உழைத்தலும், அதற்காக எல்லாம் வல்ல இறைவனுக்கும் அவனது சட்டத்திற்குக் கீழ்ப்பணிந்து நடத்தலும்" எனலாம். மதம் என்பது வாழ்க்கையின் நேர்வழிகாட்டியாகவும், அதன் நோக்கம் மனிதகுல வாழ்க்கையின் குறிக்கோளான பூரணத்துவ நிலைக்கு உயர்த்தக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். தனிமனிதனின், சமுதாயத்தின், நாட்டின், உலகின் கடமைகள் — பணிகள் சம்பந்தமான நல்லொழுக்க வழிமுறைகளை ஒழுங்கான நெறிமுறைகளின் அடிப்படையில் அமைத்து; அறிவினைப் பெருக்கி எல்லாம் வல்ல இறைவனிடம் கொண்டு செல்லும் மதமே இஸ்லாம். அதுவே நமது கண்ணியத்திற்கும் கவனத்திற்கும் உட்பட்டது. மனிதகுலத்தின் பகுத்தறிவுக்கும், கண்ணியத்திற்கும், உள்ளுணர்வுகளுக்கும் ஏற்ற முறையில் தாராள நோக்குகளைத் தன்னகத்தே கொண்டுள்ள ஒரு பெறற்கரிய அமுத சுரபியாகத் திகழ்வது இஸ்லாம். இது மனிதகுல முன்னேற்றத்திற்குரிய அடிப்படையில் ஏகனால் வகுக்கப்பட்ட திடமான நல்லொழுக்கச் சட்டத்தொகுப்பு மட்டுமன்றி முக்காலங்களுக்கும் எல்லா இன, நாட்டினர்களுக்கும் பொருத்தமான முறையில் போதனைகளையும், வாழ்க்கை முறைகளையும் தன்னகத்தே கொண்டு இலங்குகின்றது.

இஸ்லாம் மனித இயற்கையைக் கவனியாமல் இருக்கவில்லை. உண்மையற்ற விடயங்களில் தலையிட்டுத் தடுமாறிக் கொள்ளவில்லை. மனித வாழ்க்கை குறைவுடன் இருக்கின்றது எனும் உண்மையை உணர்த்தி வாழ்க்கையின் நோக்கத்தை அடைவதற்கு முயல்கிறது. நமக்குத் தீங்கு விளைவித்தவனை அவன் தீமை விளைவித்த அளவில் தண்டிக்க அனுமதித்தாலும் மன்னித்து விட வேண்டுமெனவும், அன்புடன் நடந்து கொள்ள வேண்டுமெனவும், தீமைக்குப் பதிலாக நன்மையே செய்யவேண்டுமெனவும் வலியுறுத்திக் கற்பிக்கின்றது.

(அல்குர்ஆன் — *12 : 33; 13 ; 37*)

எவரையும் தீண்டத் தகாதவன் என்று ஒதுக்கவில்லை. உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று இஸ்லாம் யாரையும் பிரிக்கவுமில்லை. மொழியாலும், இனத்தாலும், தொழிலாலும் உண்டாக்கும் உயர்வு தாழ்வுகளை அங்கீகரிக்கவில்லை. ஆண்டான் — அடிமை, ஏழை — பணக்காரன், வலியவன் — வலிமை குறைந்தவன் என்று யாரையும் பாகுபடுத்தவில்லை. நல்லொழுக்கமுள்ள அனைவரும் இறைநேசர்கள் எனும் ஒன்றையே வலியுறுத்துகின்றது.

இதனாலேயே'' எல்லா மதங்களிலும் இஸ்லாமே மிக்க ஜனநாயக அமைப்புள்ளது. மனிதர்களைச் சரிசமமாக்குகின்றது. நாம் இஸ்லாத்தில் சேர்ந்தவுடன் ஒவ்வொரு முஸ்லிமுடனும் சமநிலையில் உயர்த்தப்பட்டு, இறைவணக்க இல்லத்தில் மன்னனும், செல்வச்சீமானும், ஏழையும், தண்ணீர் சுமப்போனும், பாட்டாளியும் தோளோடு தோள்சேர வரிசைவரிசையாக நின்று இறைவணக்கம் புரிகின்றோம். சாதி, நிற வேற்றுமை என்பது இஸ்லாம் சமயத்தில் இல்லவே இல்லை'' என்று Sir P. C. Roy கூறுகிறார். மேலும் ''முகம்மது நபி (ஸல்) அவர்களின் இஸ்லாத்துக்கு நான் எப்போதும் உயர் மரியாதை செலுத்துகிறேன்; செலுத்துவேன். ஏனெனில் அது அற்புதமான உயிர்ப்புள்ளது, வாழ்க்கையில் மாறிமாறி வரும் அம்சங்களுக்கேற்ற முறையிலும், முக்காலங்களுக்கேற்ற முறையிலும் ஒன்றிப்போகும் சக்தியும், தன்மையும், சிறப்பும் நிச்சயமாக அந்த ஒரேயொரு இஸ்லாத்துக்குத்தான் இருக்கின்றது'' என 'பெர்னார்ட் ஷா' கூறுகிறார்.

இனி இன்றைய இஸ்லாமியரின் நிலையினைச் சற்று ஆராய்வோம். நமது நாயகம் (ஸல்) அவர்கள் தமது இறுதி ஹஜ்ஜின்போது ஆற்றிய பெருமதி மிக்க உரையில் ''எனது தோழர்களே! என்னைப்பின்பற்றுபவர்களே! உங்களிடம் நான் இரு விடயங்களை விட்டுச் செல்கிறேன். 1) எல்லாம்வல்ல இறைவனின் திருமறை. 2) எனது போதனைகளும் வாழ்க்கை முறைகளும். இவற்றினை நீங்கள் என்றும் பின்பற்றி நடப்பீர்களாயின் உங்களுக்கு ஈருலகிலும் நிம்மதியும், சாந்தியும், ஈடேற்றமும் கிடைக்கும் என்றார்கள். இதன் அடிப்படையில் இன்றைய நமது நிலையினை நோக்கின் நமது நிலை அவர்களின் உபதேசங்களுக்கு முற்றிலும் மாறுபட்டதாகவும் மிகமிக வெட்கக்கேடானதாகவும் மாறியிருப்பதனை, மிகமும்முரமாக மாறிக்கொண்டு வருவதனை நினைக்கும் போது வார்த்தைகளால் கூறமுடியாத வேதனைகளையும், அவமானங்களையும், தலைக்குனிவினையும் அனுபவிக்க நேர்கிறது.

இவ்விழி நிலையினை நாம் இன்று பரிபூரணமாக அனுபவிக்கக் காரணம் என்ன? ''லாஇலாஹஇல்லல்லாஹூ முஹம்மதுர்ரசூலில்லாஹி'' என்ற திருக்கலிமாவை பரம்பரை பரம்பரையாக நாம் அறிந்திருந்தும், நாவினால் உச்சரிக்கக் கூடியவர்களாக இருந்தும் அத்திருமந்திரத்தின் தாத்பரியமும், பெறுமதியும் தெரியாது கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற மிகப்பயங்கர இழிநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்; தள்ளப்பட்டு வருகிறோம். இவ்விழி நிலைக்குக் காரணம் நமது மனோ நிலையினைத் தவிர வேறொன்றுமில்லை. ஒரு மனிதனின் வாழ்வுப் பாதையினைச் சீராகச் செப்பனிட்டு அமைக்க வாழ்க்கையினைப் பசுஞ்சோலையாக மாற்ற அவனது மனமே அடிப்படைக் காரணியாகவும் பொதுக்காரணியாகவும் அமைகிறது. அம்மனம் வாழ்வினை எத்திசையில் திருப்ப முனைகின்றதோ அத்திசையிலேயே அவனது வாழ்க்கை முறையும் அமைந்து விடுகின்றது. இவ்வாறு மனதைக் கட்டுப்படுத்த முடியாது மனம் போன போக்கெல்லாம் மிருகங்களை விடக் கேவலமாக வாழ்ந்து கொண்டு நெறிகளையும், விதிகளையும் கொண்ட வாழ்க்கையினைத் தவறான திசைகளில் திருப்பிவிட்டு அவற்றிற்கெல்லாம் காரணம் விதியோ அல்லது சூழ்நிலைகளும் உற்றாரும் பெற்றாருமோ என்று குற்றம் சுமத்துகிறோம். மனிதர்கள் எவ்வாறு, எப்படி வாழவேண்டும் என்று முக்காலங்களுக்கும் தேவையான — பொருந்தக் கூடிய மிகச்சிறந்த ஒரு வாழ்க்கைத் திட்டத்தினை அமைத்துத்தந்துள்ள நமது இஸ்லாம் என்னும் விதிக்கு முரணாக வாழ்ந்து பெறற்கரிய வாழ்வினைப் பாழாக்கிக் கொண்டிருப்பதற்கு யார் பொறுப்பாளிகள்?

புனித இஸ்லாத்தைப் பொறுத்தவரை மனித வாழ்வின் அடிப்படை நோக்கம் வல்ல ஏகனதும், அவனது இறுதித்தூதர் முகம்மதுநபி (ஸல்) அவர்களினதும் கட்டளைகளுக்கும் போதனைகளுக்கும் பரிபூரணமாகக் கீழ்ப்படிந்து வாழ்வதே. பிரபஞ்சத்தின் ஏனைய படைப்பினங்கள் இயங்கவேண்டிய விதிமுறைகளையும் செயற்பாடுகளையும் வகுத்துக் கொடுத்துள்ள இறைவன் மனிதர்கள் வாழ்வதற்கான சட்டங்களையும், நெறிமுறைகளையும் தனது புனித குர்ஆன் மூலமும், திருத்தூதர்கள் மூலமும், அருளியுள்ளான். மனித சரித்திரத்தின் பல்வேறு கால கட்டங்களிலும் இவ்விறைதூதர்கள் மக்களை நல்வழியின்பால் அழைத்துச் சென்றிருக்கின்றனர். மறுத்த மக்களுக்குத் தகுந்த தண்டனைகளும் காலத்துக்குக் காலம் வழங்கப்பட்டுள்ளதாக நாம் ஆதாரபூர்வமாக அறியமுடிகின்றது. எல்லாம் வல்ல இறைவன் சர்வஞானமுள்ளவன். மனிதர்கள் குறுகிய ஞானமுடையோர்; பலஹீனமான மனோ நிலைகளையுடையோர், இறைவன் நீதிவேறு, மனிதநீதி வேறு. மனிதநீதி ஒரு நாள் வரவேற்கப்பட்டு இன்னொரு நாள் வெறுக்கப்படுகிறது. எது நீதியென்று போற்றப்பட்டதோ அதேநீதி — சட்டம் என்பன அநீதிகளாக மாறித் தூற்றப்படுகின்றது. இது அனுபவ உண்மைகள்.

நாகரிகம் என்பது நல்லவைகளைக் கேட்டலும், பேசுதலும், பார்த்தலும், நல்ல செயல்களைச் செய்வதுமே. ஆனால் இன்றைய உலகில் நாகரிகம் என்பது தலைகீழாக மாறிக் கிடக்கின்றது. தம்மை நாகரிகம் படைத்தோர் என்று மார்தட்டும் இன்றைய சமுதாய அமைப்பினில் நடைபெறும் செயல்களைப் பார்த்தால் அந்தோ பரிதாபம்! அது நாகரிகமல்ல — அநாகரிகம். நாகரிகம் என்ற போர்வையில் நடப்பனவெல்லாம் காட்டுமிராண்டித்தனம், அசிங்கம், அக்கிரமம். இத்தகைய நிலையில் இப்படித்தான் வாழவேண்டும் என்று வரையறைகள் செய்யப்பட்டு, என்றும் நவீன வாழ்க்கை முறையினை வாழவேண்டிய இன்றைய இஸ்லாமியரும் இவ்விழிந்த வாழ்வினை ஏற்று வாழ்வதனைக் கண்ணுறும் போது நெஞ்சங்குமுறி வேதனை கரைபுரண்டோடுகிறது. அல் - குர்ஆனின் போதனைகளையும் நபிநாயகம் (ஸல்) அவர்களினதும், அவர்களது அருமைத்தோழர்களினதும், எளிமையானதும், இனிமையானதுமான வாழ்க்கை முறைகளைப் பின்பற்றி வாழ்ந்தால் ஈருலகிலும் வெற்றி பெறலாம் என்றறிந்தும் அவர்கள் வாழ்வதோ முற்றிலும் வேறுமுறை. அந்த வேற்றுமுறை வாழ்க்கையினால் கண்ட பயன்கள் தோல்வி, விரக்தி, மனக்கசப்பு, கைசேதம் ஆகியனவே,

கி. பி. 13ம் நூற்றாண்டுவரை உலகின் பல பாகங்களிலும் இஸ்லாமியப் பேரரசும் வாழ்க்கை நெறிமுறைகளும் செழித்தோங்கின. காரணம் அன்றையவர்களிடம் நவீன வாழ்க்கைமுறையான அல்குர்ஆனின் போதனைகளுடன் நபிபெருமான் (ஸல்) அவர்களினதும், அவரது தோழர்களினதும் உயரிய வாழ்க்கை முறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்தமையே. அவர்கள் எல்லாம் வல்ல ஏகனின் உதவியால் நினைத்த காரியங்களனைத்தையும் இலகுவில் சாதித்துக் கொண்டனர்.

இவற்றையெல்லாம் அறிந்தும் சடங்குகளற்ற பரிபூரணமானதும் இலகுவானதுமான வாழ்க்கை நெறியில் தலைநிமிர்ந்து நடக்க, நினைத்த காரியங்களைச் சாதித்து வெற்றிபெற்றுவாழ நம்மவர்கள் பின் நிற்பது ஏன்? அவர்களுக்கு உண்மை (இஸ்லாம் — சத்திய சன்மார்க்கம்) கசப்பாகத் தோன்றுகின்றதா? எப்போதும் உண்மை ஆரம்பத்தில் கசப்பாக — கேட்பதற்கு, பார்ப்பதற்கு நடப்பதற்குச் சிரமமாகவே தோன்றும். கடைசி நேரத்தில் உண்மையை ஒப்புக்கொண்டு வாழமுனைவது காலங்கடந்த ஞானமல்லவா? நாமனைவரும் இவ்வுலகமெனும் சத்திரத்தில் தற்காலிகமாகத் தங்கியிருக்கும்

பயணிகளல்லவா? நாம் பயணஞ் செய்யப்போகும் அடுத்த இடம் (மறுமை) எம்மை நெருங்கிக் கொண்டிருக்கிறது. அடுத்த இடத்திற்குத் தேவையான ஆதாரங்களை — சேமிப்புக்களை தற்போதிருக்கும் இவ்விடத்திலிருந்தே தேடிக்கொள்வதனை விடுத்து பயணத்தின் இறுதிக்கட்டத்தில் தேடிக்கொள்ள முனைவது எவ்வகையில் சாத்தியம்? சிந்திக்கத் தெரிந்தோர் எனப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் நாம் இறுதி நேரத்தில் தேவையான ஆயத்தங்களைச் செய்யலாமென நம்புவது புத்திசாலித்தனமாகுமா? வாழ்க்கை என்னும் இவ்வுலக விருந்தில் அனைவரும் மரணமென்னும் கசப்பானதும் நிச்சயமானதுமான பானத்தை அருந்தியே தீரவேண்டும். இவ்விதமிருக்க நாம் எமது நிலை பற்றி என்றாவது சிந்திக்கின்றோமா? "இவ்வுலக வாழ்க்கை வீண் விளையாட்டும் வேடிக்கையுமே தவிர வேறொன்றுமில்லை, ஆனால் மறுமையின் வீடு நிச்சயமான நிலையான வாழுமிடமாகும்" (அல் - குர்ஆன் - 29 : 64)

வாலிபப் பருவம் முற்றிலும் நல்லதுமல்ல, கெட்டதுமல்ல. இளமை இரத்தத் துடிப்பு, புதிய எதையும் கண்டு பிடிக்கும் ஏற்றுக்கொள்ளும் விருப்பு; மனதிற்குப் பிடித்தவைகளை அடைய அவை நல்லதா கெட்டதா என்ற பகுத்தறிவின்றி உயிரைத் தியாகம் செய்யும் மனோநிலை என்பன இதன் தன்மைகளாகும். வாளைப் போன்ற வாலிபப்பருவம் பயங்கரமானது; இனிமையானது. உலகில் நன்மைகளை வளர்க்கப் போராடிய படைகளின் முன்னணி வீரர்களாகத் திகழ்ந்த வாலிபர்கள்; எல்லாக் காலங்களிலும் தீமைகளின் பாதுகாவலர்களாகவும் திகழ்ந்திருக்கின்றனர். அன்று தொட்டு இன்றுவரை இதே நிலையே. குறிப்பாக இன்றைய முஸ்லிம் இளைஞர்களின் நிலையும் அவர்களது செயற்பாடுகளும்; உலகின் ஆயுள் பூராகவும் நாகரிகத்தினைப் புகட்டும் இஸ்லாம் மார்க்கத்தினைப் பின்பற்றிச் செல்வதற்குப் பதிலாக அழிவுப் பாதையினை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன.

பெண்மையின் கற்பென்பதும், அக்கற்பைப் பேணுவதென்பதும் துரும்பில் நடப்பது போன்றது. ஆனால் மனம் துணிவுடனும் உறுதியுடனும் இருப்பின் அத்துரும்பில் நடப்பதும் மிக இலகுவானது. "நீங்கள் தேவையேற்படாது, வீணான நோக்கங்களுக்காகவும், வேடிக்கைகளுக்காகவும் வீட்டை விட்டு வெளிக்கிளம்பாதீர்கள்" என்று நாயகம் (ஸல்) அவர்கள் பெண்களுக்குக் கூறியுள்ளார்கள். பெண்ணினத்திற்கு விடுதலை பெற்றுத் தந்த அவர்கள் இவ்வாறு கூறியுள்ளதன் பொருளை பெண்கள் அனைவரும் ஆழ்ந்து நோக்க வேண்டும். ஆனால் இன்றைய இஸ்லாமியப் பெண்மணிகள் முற்றிலும் மாறுபட்ட கோணங்களில் வாழ்ந்து கொண்டிருப்பதனால் அளவிடமுடியாத பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது. வீணான வேடிக்கைகள், கேளிக்கை நிகழ்ச்சிகள் மற்றும் போகக்கூடாத பல்வேறு இடங்களுக்கும் அவர்களே முன்நிற்பது மிகவேதனைப் படக்கூடிய விடயமாகும். இவர்களின் இவ்வாறான போக்குகளுக்கு அவர்களின் உறவினர்களும் உறுதுணையாக நிற்பது விசனிக்கத்தக்கதே. உலகில் எப்பொருட்களும் அவைகளுக்குரிய இடங்களிலேயே அமைந்திருக்க வேண்டும். இல்லையேல் அவற்றால் ஏற்படும் பலாபலன்கள் முரணானதாகவே இருக்கும்.

இவ்வாறான இவர்களின் இந்த விசனிக்கத்தக்க நிலைகளுக்குக் காரணம் அவர்களுக்கு ஊட்டப்பட்ட — ஊட்டப்படுகின்ற ஒழுக்கங்களும், வாழ்க்கைமுறைகளும், கல்வி முறைகளுமேயெனத் துணிந்து கூறலாம். அறிவுத்துறையில் அன்றைய முஸ்லிம்கள் பெற்ற கணக்கிடமுடியாத வெற்றிகளனைத்தும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளின், வாழ்க்கை முறைகளின் விளைவுகளே. உலக அறிவிலும், நாகரிகத்திலும் ஒழுக்கத்திலும் பல நூற்றாண்டுகள் பின்நோக்கி, பாழ்பட்ட நிலையினை எய்தியிருந்த

காலத்தில் சத்திய இஸ்லாமே நாகரிகத்தின், முன்னேற்றத்தின் முன்னணியில் திகழ்ந்தது, அவைகளை எடுத்தியம்பியது. இஸ்லாத்தில் வலியுறுத்திக் கூறப்படும் அறிவு — கல்வி ஞானமானது ஈருலகிலும் நன்மை பயக்கக்கூடியதாக, ஒழுக்க நெறியில் பிறழாது நடக்கக் கூடியதாக அமைந்திருப்பது ஈண்டு கவனிக்கத்தக்கது.

பிற மத அறிஞர்களாலும் கூடப் போற்றப்படுகின்ற — அதிசயிக்கப்படுகின்ற — அரசியல் முன்மாதிரிகளை பெருமானார் (ஸல்) அவர்களும், அவர்களின் நாற்பெருங் கலீபாக்களும் விட்டுச் சென்றிருக்க; இன்றைய அரசியல்வாதிகளோ முஸ்லிம் என்ற ,'லேபலை'' த் தம்மீது ஒட்டிக்கொண்டு அந்நிய ஆட்சியாளர்களைத் திருப்திப்படுத்துவதற்காக தூய இஸ்லாத்தில் நின்றும் வெகுவாக விலகி நடப்பதைக் காணும்போது நெஞ்சம் குமுறுகின்றது. தேர்தற் காலங்களில் பொய்வாக்குறுதிகளை அளித்தல், மது பான வகைகளைத் தாராளமாக வழங்கி இளைஞர்களை வழிகெடுத்தல், மாற்றுக்கட்சி ஆதரவாளர்களை பல்வேறு வகையிலும் இம்சைப்படுத்துவித்தல் போன்றவை இவர் களுக்குக் கைவந்த கலைகள். பெரும்பாலான தனவந்தர்களின் நிலையும் இஸ்லாத்துக்கு முரணானதாகவே உள்ளது. இப்படிப்பட்டவர்களின் முகத்திரைகளைக் கிழித்தெறிய உண்மைமுஸ்லிம்கள் முன்வரல் வேண்டும்.

சமுதாயம் — உலகம் சீர்திருந்த வேண்டுமாயின் அது தனிமனிதனின் சீர்திருத்தத் திலேயே தங்கியுள்ளது. நம்மவர்கள் நெறிதவறி வாழ்ந்து விட்டாலும் திருந்தி நன் னெறியில் வாழ வழிவகைகள் இருக்கின்றன. கையில் மருந்தை வைத்துக் கொண்டு வைத்தியனைத் தேடி அலைவானேன்? புனித திருக்குர்ஆனின் சட்டதிட்டங்களும், அருமை நாயகம் முகம்மது நபி (ஸல்) அவர்களினதும், அவர்களின் அருமைத் தோழர்களினதும் வாழ்க்கை முறைகளும் இவ்வுலகிலுள்ள அஞ்ஞானமென்னும் நோய்க்குச் சிறந்த சஞ்சீவி அல்லவா? இதனைவிடச் சிறந்த சஞ்சீவி வேறு யாரால் வழங்க முடியும்? '' எங்கள் இறைவனே! நாம் எமது கடமையைச் செய்ய மறந்துவிட்டாலும், எமது கடந்த கால வாழ்வு இருளானதாக இருந்தாலும், அல்லது அதில் தவறுகள் நிறைந் திருந்தாலும் அதைப்பற்றி நீ எங்களைக் குற்றம் பிடிக்காதே. நீ எங்கள் மீது கடின மான கட்டளைகளை விதித்துத் தாங்கமுடியாத சுமைகளைச் சுமத்திவிடாதே. எங்க ளுக்கு முன்னிருந்தவர்கள் மீது கடினமான கட்டளைகளை, தண்டனைகளைச் சுமத்தியது போன்று எம்மீது சுமத்திவிடாதே. எமது இறைவனே நாங்கள் தாங்க முடியாத கஷ்டங்களை எம்மீது சுமத்திவிடாதே. எமது குற்றங்களை — முன்பின் பாவங்களை — அறிந்தும் அறியாமலும் புரிந்தவைகளை மன்னிப்பாயாக! எம்மைப் பிழை பொறுத் தருள்வாயாக! எம்மீது கருணைமாரி பொழிவாயாக! நீயே எமது இரட்சகன்! எனவே உன்னை நிராகரிக்கும் சக்திகள் மீதுநாம் வெற்றி பெற்று வாழ எமக்கு உதவி — அருள்புரிவாயாக!'' (அல் - குர்ஆன் — 2 : 286) என்று பாவமன்னிப்புக் கோர இறை வனே நமக்குக் கற்பிக்கிறான்.

தொழில்நுட்ப, விஞ்ஞானத் துறைகளில் இன்றைய மனிதர்கள் வானளாவ உயர்ந்துள்ள போதிலும் ஒழுக்க நெறிகளில், பண்பாட்டுத் துறைகளில், வாழ்க்கை முறைகளில் அடித்தளமற்ற பாதாளத்தில் வீழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்நிலையி லிருந்து அவர்கள் மீட்கப்பட வேண்டும். அதில்தான் மனித சமுதாயத்தின் மோட்சம் தங்கியுள்ளது. ஏகன் வகுத்தளித்த ஒப்புயர்வற்ற இஸ்லாமிய வாழ்க்கை நெறி ஒன்றி

ணுல் மட்டுமே இப் பேரிலட்சியத்தினை அடைந்துகொள்ள முடியும். நவயுகம் வகுத்துள்ள இச்சவாலினை ஏற்பதும், நடைமுறைப்படுத்துவதும் முஸ்லிம் இளைஞர்களின் பொறுப்பு மிக்க, தட்டிக்கழிக்க முடியாத மாபெரும் கடமையாகும்.

இதற்கடிப்படையாக இன்றைய முஸ்லிம்களின் உலகளாவிய இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கு அல்குர்ஆன், முகம்மதுநபி (ஸல்) அவர்கள், அவர்களின் தோழர்கள் ஆகியோரின் போதனைகளினதும், சாதனைகளினதும், வாழ்க்கை முறைகளினதும் அடிப்படையில் எமது தனிப்பட்ட, பொது வாழ்க்கைமுறைகளை அமைத்துக்கொண்டு, சமூகத்தையும் அப்பெறற்கரிய வாழ்வின் பக்கம் அழைக்க வேண்டியதுமான பொறுப்பு மிக்கதொரு பணி எம்மையும், எமது இளைஞர்களையும் தட்டிக்கழிக்க முடியாதவாறு எதிர்நோக்கியுள்ளது. இம்மாபெரும் சிறப்புமிக்க பணியில் முஸ்லிம் பெற்ருர், ஆசிரியர், மாணவர், தனவந்தர், தொழிலாளர், குழந்தைகள் ஆகிய சமூகத்தின் சகல பிரிவினரும் தத்தமது பொறுப்பு, பங்களிப்பு எவையென்பதை உணர்ந்து செயற்பட வேண்டியது மிகமிக அவசரமும் அவசியமுமாகும்.

பார்வைக்கு :

1. **Muslim youth and the challenge of the Modern age.**
   **By MOLALANA MOUDUDI**

2. **Answer to an Enemy of Islam**
   **By HUSEYN Hilmi Isik**

---

வாளேந்தி வன்சமர் புரிந்து சாதிக்க முடியாத சாதனைகளைக்கூட நபிகள் பிரானின் இன்சொல்லும், புன்முறுவலும், தனக்கே உரிய தனித்த ஆயுதமான பொறுமையினுலும் வெற்றிகொண்டிருக்கிற சக்தி அண்ணன்பால் எனக்கு அளப்பரிய பக்தியை உண்டாக்கிவிட்டது.

— அறிஞர் அண்ணு

# அன்றும் - இன்றும் - என்றும்

எம். எம். சியான்
[ பொருளியல் ( சிறப்பு ) — இறுதியாண்டு ]

இறை வெறி பிடித்தவனுய்
இருந்தானே முஸ்லி மன்று
ஏதோ வெறி பிடித்து
இழிபாதை போ(கி)ருன் இன்று!

அதிகாலைத் தொழுகைக்கோ அணி
அணியாய் ஆட்கள் அன்று
அதான் சொல்ல ஆருமில்லை
அன்போடு பள்ளி சென்று!

பிலாலின் பாங் கொலியில்
உணர்ச்சி இருந்த தன்று
பாங்கொலி எழுந்தா லென்ன
உணர்ச்சியோ இல்லை இன்று!

தொழுகைக்கு வருவோர் கண்டு
மகிழ்ந்ததே பள்ளி அன்று
தொழுகைக்கு ஆளே இன்றி
அழுகுதே பள்ளி இன்று!

---

ஆத்ம நற் சஞ்சீவி
அழகிய நோன்பு அன்று
சிறைவாசம் போன்ற தோர்
தொல்லையாய்ப் போன தின்று !

வறுமையில் பெருமை கண்டான்
வாழ்க்கையில் முஸ்லிம் அன்று
பெருமையில் இன்பங் கண்டு
பொறுமையை இழந்தா னின்று !

ஏழைக்கு உதவி செய்வோர்
இருந்தனர் பலபே ரன்று
ஏழையை ஒதுக்கித் தள்ள
இருக்கி(ன்)றார் பலபே ரின்று!

ஹஜ்ஜுக்குப் போக எண்ணி
கடினமாய் உழைத்தார் அன்று!
வட்டிக்குப் பணம் கொடுக்கப்
பெட்டியிற் போட்டார் இன்று!

ஐவேளை இறையை நாடி
அவனுக்கே அடிமை என்று
உள்ளத்தே உறுதி கொண்டால்
உயர்வுதான் வாழ்வில் என்றும்!

மதத்தினைப் பின்பற்ற ஓர்
மங்காத மன மிருந்தால்
தாழ்வில்லை எம் மவர்க்கு
உயர்வுதான் வாழ்வில் என்றும்!

---

தீண்டாமை முதலிய கொடுமைகள் ஒழியவேண்டும் என்கிற கருத்துள்ளவர்களுக்கும், ஒற்றுமையை எதிர்பார்க்கும் மக்களுக்கும் சுயமரியாதை உணர்ச்சியை ஊட்ட வேண்டும் என்னும் கருத்துள்ளவர்களுக்கும் நமது நாட்டில் இப்போதுள்ள முக்கிய வேலை முதலில் தீண்டப்படாதவர்கள் முகமதியராவதை ஆட்சேபியாதிருப்பதேயாகும் என்பது எனது தாழ்மையானதும் கண்ணியமானதுமான அபிப்பிராயம்

— ஈ. வெ. ரா. பெரியார்

## முஸ்லிம்களும் அறிவியலும்

எஸ். ஏ. அஸீஸ்
கணித, புள்ளிவிபரவியல் – 3ம் வருடம்.

முஸ்லிம்கள் அறிவியலுக்குச் செய்த சேவை அளப்பரியது. அதற்கு அல்குர்ஆன் வசனங்களும், பெருமானார் (ஸல்) அவர்களின் பொன் மொழிகளுமே மூல காரணம். முஸ்லிம்களின் வழிகாட்டுதல் மட்டும் இல்லையாயின் தற்போது அறிவியல் துறையில் முன்னனியில் நிற்கும் மேற்கத்திய நாடுகள், இவ்வளவு தூரம் முன்னேறியிராது என்பதற்கு அவர்களின் வரலாற்று நூல்களே சான்று தருகின்றன. மீண்டும் முஸ்லிம்கள் அறிவியல் துறையில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற ஓர் சூழ்நிலை இப்பொழுது தெளிவாகியுள்ளது.

இறைவன் தன் திருமறையில் ''மேலும் உறுதியான நம்பிக்கை கொண்டவர்களுக்கு பூமியில் (அநேக) அத்தாட்சிகள் இருக்கின்றன. மேலும் உங்களுக்குள்ளேயும் பல அத்தாட்சிகள் இருக்கின்றன. நீங்கள் ஏன் (அவற்றை) சிந்தித்துப்பார்ப்பதில்லை'' எனவும் ''வானங்களையும் பூமியையும் ஆழ்ந்த நோக்கத்துடன் இறைவன் படைத்திருக்கிறான். மேலும் விசுவாசம் கொண்டோருக்கு நிச்சயமாக மாபெரும் அத்தாட்சி இருக்கிறது'' எனவும் கூறி மனித சிந்தனைக்கும் அறிவியலுக்கும் ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கிறான். பெருமானார் (ஸல்) அவர்கள் ''சீனு சென்றேனும் சீர் கல்வி தேடு'' என்றும், ''கல்வியைக் கற்றுக் கொள்வது ஒவ்வொரு முஸ்லிம் ஆண், பெண் மீதும் கடமையாகும்'', ''கல்வி பெறுவதற்காக, இல்லத்தை விட்டுக் கிளம்பும் ஒருவன் இறைவன் பாதையில் பணிபுரியச் செல்வோனுவான்'' எனவும் கூறி அறிவுக்கு மதிப்புக் கொடுத்தார்கள். ''ஒரு மணி நேரம் சிந்தனை செய்வதும், இறைவன் படைப்புக்களை ஆராய்தலும் 80 ஆண்டுகள் வணக்கம் செய்வதைவிடச் சிறந்தவை'' என மொழிந்து மனித சிந்தனைக்கு மாண்பளித்துள்ளார்கள்.

இறைமறையினதும், நபிமொழிகளினதும் உண்மைகளை உணரத் துடித்த முஸ்லிம்கள் தமது ஓய்வு நேரங்களையெல்லாம் ஆய்வுத்துறையில் பயன்படுத்தினர். அவர்களின் கண்டு பிடிப்புக்கள் அறிவைத்தேடுவதில் ஆர்வத்தை வளர்த்தன. வணிகக் கூட்டங்களாக உலகெங்கும் சுற்றித் திரிந்த ஆரம்பகால முஸ்லிம்களுக்கு உண்மைகளை விளக்கிக் கொள்வதில் கஷ்டமிருக்கவில்லை. கிரேக்க கல்விச் செல்வங்களை அரபியில் மொழி பெயர்த்து சேமித்தனர். சீனுவின் தொழில்நுட்பத்தையும், இந்தியாவின் கணித, இதிகாசச் செல்வங்களையும் எழுதி ஆராய்ந்து வந்தனர்.

அரபு மக்களான முஸ்லிம்கள் நாகரிக உச்சியில் ஏறி நின்ற சந்தர்ப்பத்தில் ஐரோப்பியர்களும், ஏனையோர்களும் அநாகரிகத்தில்

மூழ்கிக் கிடந்தனர். இதனையே கவிக்குயில் சரோஜினிநாயுடு என்பவர் ''மேனாடுகள் எவற்றைப் புதியனவாகக் கருதுகின்றனவோ அவையனைத்தும் அரபியப்பாலைவனத்தில் விதைக்கப்பட்ட வித்துக்களின் விருட்சங்களேயன்றி, அவற்றில் புதியன ஒன்றுமில்லை. இன்று ஐரோப்பாவில் தோன்றியிருக்கும் நாகரிகத்தின் மூலகாரணமாக அமைந்தவை ஆழ் கடலைக் கடந்து ஸ்பெயினில் குடியேறிய பண்டைய மூஸ்லிம்களின், கலாஞானமும் கல்வியுமாகும்.'' என்று கூறுகிறார். பேராசிரியர் ஜார்ஜ் சார்டன் ''விஞ்ஞானத்தின் வரலாறு'' என்ற நூலிலே ''மனிதசமூகத்திற்குத் தேவையான சகல பணிகளும் முஸ்லிம்களால் பூர்த்தி செய்யப் பெற்றிருக்கின்றன.'' எனக்குறிப்பிடுகிறார்.

முஸ்லிம்களின் அறிவியல் வளர்ச்சி அகிலத்தின் இதயமான அரபு நாட்டின் தலைநகர் மதினாவிலிருந்து ஐரோப்பிய வரலாற்றில் மத்திய காலம் எனப்படும் பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் உச்சநிலையை அடைந்தது. வெற்றிப்பெருமிதமும், முஸ்லிம் ஆட்சியாளர்களின் ஆதிக்க, சுகபோகவெறியும் பின்னர் இஸ்லாமிய உலகை வீழ்ச்சியடையச் செய்தன. முஸ்லிம்கள் பேணிப்பாதுகாத்த அறிவியல் செல்வங்களைக் கொள்ளை கொண்ட மேற்கத்தியர்கள் இன்று அறிவியலில் முன்னிற்கின்றனர்.

மேற்கு நாட்டவர்களுக்கு மருத்துவத்துறையில் 'ராஸிஸ்' என்ற கிரேக்க பெயரில் அறிமுகமான 'அபூவக்கர் முகம்மத் இப்னுசக்கரிய்யா அல்ராஸீ' என்பவர் மிகவும் பிரபல்யமானவர். இவர் அறுவை வைத்தியத்தில் உபயோகிக்கும் கருவியொன்றையும், பிள்ளைப்பேறு, பெண் நோய்கள், கண்வைத்தியம் போன்ற மருத்துவப் பிரிவுகளிற் பல உண்மைகளையும் கண்டுபிடித்ததுடன் 'அல்ஹாவி' 'அல்ஜுதரிவல் ஹஸ்பா' 'கிதாபுல் அஸ்ரார்' 'கிதாபுத்திப்பி அல்மன்சூரி' ஆகிய பிரசித்த நூல்களையும் எழுதினார். இவரின்பின் 'அவி சென்னா' என்று ஐரோப்பியரால் அழைக்கப்படும் 'இப்னு அவிஸினா' என்பவர் உச்ச நிலையடைந்திருந்தார். இவர் மருத்துவத்தில் மட்டுமன்றி ஏனையதுறைகளிலும் முன்னேற்றமடைந்திருந்தார். இவர் எழுதிய நூற்றுக்கு மேற்பட்ட நூல்களுள் 'கானூன் பித்திப்பி' 'கிதாபுஷ்ஷிபா' என்பன மிகுந்த புகழ் பெற்றவை.

ஐரோப்பியர் 'இரசாயனத்தின் தந்தை' என்று அழைக்கும் 'ஜாபிர்' சிறந்த இரசாயனவியலாளர். இன்று கணிதத்துறையில் முக்கிய விதிகளாக விளங்கும் சைன்(Sine), கோசைன்(Cosine), தாஞ்சன் (Tangent) போன்ற விதிகளையும், முஸ்லிம்களே கண்டு பிடித்தனர். கணிதத்துறையில் 'அல்குவாரித்தம்' என்பவரால் எழுதப்பட்ட 'ஹிஸாபுல் ஜப்ருவல் முகாபலாஹ், என்னும் நூல் முக்கிய பங்கை வகிக்கிறது. வழக்கத்திலுள்ள 1 முதல் 10 வரையுள்ள எண்கள் அராபிய எண்களே. 'அல்ஜிப்ரா', என வழங்கப்படும் நவீன கணிதமுறை 'அல்ஜாபர்' என்பவரின் பெரிய சாதனையாகும். 'முகம்மத் இப்னுஅலி', 'அல்சர்க்காலி',

'இப்னுநப்தி', போன்ற அரும்பெரும் பௌதிக மேதைகள் காலம், வான சாத்திரம் என்பவை சம்பந்தமான பல சிறந்த நூல்களை எழுதியுள்ளனர். 'இப்னுபதூதா', 'இப்னு அப்துல் மஜீது' போன்றோர் புவியியலில் இன்று கடைப்பிடிக்கப்படுகின்ற கொள்கைகளையும் நுட்பங்களையும் சேர்த்து சிறந்த நூல்களை வெளியிட்டுள்ளனர். தாவர சாஸ்திரத்தில் 'அபூஹனிபாதினுவரி' எழுதிய "கிதாபுந்நபாத்'' என்னும் நூல் மிகப்பிரபலமானது.

வாணிபத் துறையே முஸ்லிம்களின் முதிசம் என்று சொல்லலாம். இருபதாம் நூற்றுண்டில் கணக்கியல், வர்த்தகவியல், பொருளியல் பங்கிட்டுமுறை, புள்ளிவிபரவியல் என்று புதுப்புது முனைகளாக ஆராய்ந்து அடைந்துவரும் வெற்றி, அனுபவசாலிகளான முஸ்லிம்களின் வர்த்தக நிபுணத்துவத்தை இன்னும் எய்தவில்லை எனலாம். எனவே அறிவியலில் புதியதொரு பங்காக எதிர்பார்க்கப்படும் வர்த்தகம் அரேபியர்களின் நீண்டகால அனுபவமேயாகும்.

இருபதாம் நூற்றுண்டில் முஸ்லிம்களின் எழுச்சி தீவிரமாகக் காணப்படுகின்றது. உலகெங்கும் பரவலாக இன்று காணப்படும் 80 கோடி முஸ்லிம்கள் மத்தியில் எதிர்பாராத ஊக்கமும் விடாமுயற்சியும் தோன்றியுள்ளன. அண்மைக் காலத்தில் மேற்கூறிய விஞ்ஞானத் துறைகளிலும், வாணிபத் துறைகளிலும் உயர்ந்த அந்தஸ்தினையும், கண்டுபிடிப்புக்களையும் செய்து முன்னணியிற் திகழ்கின்றனர். ஐக்கிய அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மன், ருஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகளிலுள்ள விஞ்ஞானகூடங்களெங்கும் பரவலாக முஸ்லிம்கள் விஞ்ஞானிகளாகவும், பேராசிரியர்களாகவும் தொண்டாற்றி வருகின்றனர். ''நாசா'' போன்ற விண்ணுராய்ச்சிக் கழகங்களில் எகிப்தியரான பாறூக் போன்ற விஞ்ஞானிகளின் பங்களிப்பு சந்திர மண்டல ஆய்வுக்குச் சிறந்த சேவையாற்றுகின்றது. 1967 ம் ஆண்டில் இஸ்ரவேல் எகிப்திய யுத்தத்தில் எகிப்து தான் இழந்த பிரதேசங்களை மீட்பதற்குப் பயன்படுத்திய நவீன ஆயுதங்கள் எகிப்தியர்களின் சொந்தத் தயாரிப்பே என்பதை எவரும் மறுக்க முடியாது.

இன்று மூன்றுவது உலகில் முக்கிய ஸ்தானத்தை வகிக்கும் அரபு இஸ்லாமிய உலகம் பொருளாதாரத்திலும் மனித பலத்திலும் முன்னணியில் நிற்கின்றது. அது தனது தேவையை உணர்ந்து செல்வத்தையும், சுக போகங்களையும் தியாகம் செய்து முழு உலகிற்கும் சேவை செய்யக் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அறிவியற் துறையில் ஆழமாக எடுத்து வைத்துள்ள அடியினுல் இருபதாம் நூற்றுண்டிலேயே தனக்கு உரிய இடத்தை நாம் அடைந்துவிடுவோம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

# இலங்கை முஸ்லிம்களின் கலாசாரப் பாரம்பரியங்கள்

மௌலவி கே. எம். எச். காலிதீன். B. A. (Hons)
உதவி விரிவுரையாளர்,
அரபு, இஸ்லாமிய நாகரிகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்.

இலங்கையில் வாழும் முஸ்லிம்கள்; பௌத்தமக்கள், ஹிந்துக்கள், கிறிஸ்த வர்கள் வாழும் பிரதேசங்களில் பரவலாக வாழுகின்றனர். 1971ம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி இலங்கையிலுள்ள ஒன்பது மாகாணங்களான வடமாகாணத்தில் 44,429, கிழக்கு மாகாணத்தில் 2,50,715, வடமத்திய மாகாணத்தில் 38,877, வட மேல் மாகாணத்தில் 88429, மத்திய மாகாணத்தில் 1,35,903, ஊவா மாகாணத்தில் 28,483, சப்ரகமுவ மாகாணத்தில் 40,369, மேல் மாகாணத்தில் 2,37,587, தென் மாகாணத்தில் 45,149 முஸ்லிம்களும் மொத்தமாக 9,09,941 முஸ்லிம்கள் வாழுகின் றனர். இவர்கள் மொத்த சனத்தொகையில் சுமார் எட்டுவீத மக்களாவர். இலங்கை முஸ்லிம்களில் அரேபியப் பரம்பரையின் வழித்தோன்றல்களும், இந்தியப் பரம்பரை யினரும், மலாயர், யாவாப் பரம்பரையினரும், பாகிஸ்தானியரும், மத்திய ஆசியாவின் பல பாகங்களில் இருந்தும் குடியேறியோரும் அடங்குவர். இலங்கை முஸ்லிம்களில் மிகப் பெரும்பான்மையினர் சுன்னத் வல் ஜமாஅத்தைச் சார்ந்தவர்களாகவும், மிகச் சிறுபான்மையினர் ஷீயாக்களாகவும் உள்ளனர். சுன்னத் வல் ஜமாஅத்தைச் சார்ந்த முஸ்லிம்களில் ஸாபி மதுஹபைப் பின்பற்றும் முஸ்லிம்கள் அதிகமாகவும், ஹனபி மதுஹபைப் பின்பற்றும் முஸ்லிம்கள் சிறுபான்மையாகவும் உள்ளனர். ஷீயாக்கள் தமது இமாமாக சங்கைக்குரிய புர்ஹானுத்தீன் அவர்களை ஏற்றுள்ளனர்.

இலங்கையில் பல பாகங்களிலும் வாழும் முஸ்லிம்களின் கலாசார பாரம் பரியங்களை நெறிப்படுத்தும் நிறுவனங்களாக பள்ளிவாசல்கள் அமைந்துள்ளன. 1975ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இவ்வாறான பள்ளிவாசல்கள் வடமாகாணத்தில் 97, கிழக்கு மாகாணத்தில் 272, வடமத்திய மாகாணத்தில் 106, வடமேல் மாகாணத்தில் 232, மத்திய மாகாணத்தில் 198, ஊவா மாகாணத்தில் 64, சப்ரகமுவ மாகாணத்தில் 96, மேல் மாகாணத்தில் 201, தென் மாகாணத்தில் 97ம் அமைக்கப்பட்டுள்ளன. இவைகளில் பெரும்பாலானவை ஸாபி மதுஹபைப் பின்பற்றும் முஸ்லிம்களினதும், நகரப் புறங்களில் சில இடங்களில் மாத்திரம் ஹனபி மதுஹபைப் பின்பற்றும் முஸ் லிம்களினதும் பள்ளிவாசல்கள் காணப்படுகின்றன. ஷியாக்கள் தங்களுக்கென விஷேட பள்ளிவாசல்களை அமைத்துள்ளனர்.

மேல் மாகாணம், தென் மாகாணம், வடமேல் மாகாணம் ஆகிய பிரதேசங் களில் கி. மு. 2ம் நூற்றாண்டில் இருந்து பலம்வாய்ந்த அரேபியவர்த்தகர்களின் செல் வாக்கு இருந்ததன் காரணமாக இப்பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் குடும்பங்களில் சில அரபிய பரம்பரையினர் எனக் கணிக்கப்படுகின்றன. கி. பி. 7ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்தே, இஸ்லாத்தின் பரவல் அகிலத்தின் பல பகுதிகளிலும் ஏற்பட்ட போது, இலங்கையிலும் வர்த்தகத் தொடர்புகள் மூலம் ஏற்படலாயிற்று. இலங் கைக்கும் அரபு நாடுகளுக்கும் இடையே நல்லுறவுகள் ஏற்பட வழிவகுத்த முக்கிய

தலங்களுள் ஒன்றாக பாவா ஆதம்மலை விளங்கிற்று. ஆதம் (அலை) அவர்கள் சுவர்க்கத்தில் இருந்து பூவுலகிற்கு அனுப்பப்பட்டபோது முதன் முதலாக தரிபட்ட இடம் இதுவே என்பது வரலாற்றுச் சான்றுகள் மூலம் தெளிவாகின்றது. 7351 அடி உயரமான இம்மலையின் உச்சியில், ஐந்து அடி நாலு அங்குல நீளமும், இரண்டு அடி ஆறு அங்குல அகலமுமான பாதச் சுவட்டின் அடையாளம் காணப்படுகின்றது. இதுவே ஆதம் (அலை) அவர்களின் பாதச்சுவடு என கருதப்படுகின்றது. மத்திய காலத்தில் இலங்கையைத் தரிசித்த சுலேமான்தாஜிர், அல்இத்ரீஸி, அல்பலாதுரி, இபுனுபதூதா போன்றோர் இம் மலையைத் தரிசிக்கும் ஆவல் கொண்டிருந்தனர் என்பதை அவர்களது குறிப்புக்களில் இருந்து அறிய முடிகின்றது.

மத்திய காலத்தில் ஏற்பட்ட இஸ்லாமிய ஸாம்இராச்சியத்தின் வளர்ச்சி, உமையியாக்கள், அப்பாஸியாக்கள் ஆட்சிக் காலத்தில் இலங்கையுடன் நெருக்கமான உறவுகளை வைத்துக் கொண்டதால், இலங்கை மன்னர்கள், அராபிய வர்த்தகர்கள், வைத்தியர்கள் ஆகியோருக்கு முதன்மை இடம் அளிப்பதற்கு ஏதுவாயிற்று. மேலும் ஆதம்மலையைத் தரிசிக்க வந்த "ஸைஹு"மார்களுக்கு இலங்கையில் வாழ்ந்த சிங்கள மக்கள் அளித்த நன்மதிப்புப் பற்றி இபுனுபதூதா தனது பிரயாணக் குறிப்பில் எழுதியுள்ளார். அரபிகளின் வணிகத்தின் முக்கியத்துவம் கருதியே ஏடன்துறை முகத்தில் இருந்து தெற்கே அமைந்துள்ள பெருங்கடல், அரபிக்கடல் எனப் பெயர் பெற்றுள்ளது. பாரசீகக்குடாவின் ஊடாகவும் வணிகம் நடைபெற்றது. தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றைத் துணையாகக் கொண்டு அரேபிய வர்த்தகர்கள் காலித் துறைமுகத்தை அடைந்தனர். இங்கிருந்தே சீன அரேபிய வர்த்தக உறவுகள் இடம் பெற்றன. காலி என்று அழைக்கப்படும் தென்மாகாணத்தின் பிரதான நகரம் 'காழி' என்பதன் எழுத்து மாற்றம் என்றும் கருதப்படுகின்றது. எனவே காலியில் அரேபியச் செல்வாக்கு மேலோங்கி இருந்ததற்கு நிறைய ஆதாரங்கள் உண்டு.

காலி முதல் கொழும்பு வரை உள்ள பிரதேசங்கள் அரேபிய மக்களின் செல்வாக்கிற்குட்பட்ட பிரதேசங்களாகும். இப்பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்களின் சமூகவியல் அமைப்பிலும், மொழியிலும், உடலியல் கூறுகளிலும் இச் செல்வாக்குக் காணப்படுகின்றது. இஸ்லாத்தைப் போதிப்பதற்காக அரேபியாவிலும், ஏனைய பிரதேசங்களிலும் இருந்து இலங்கைக்கு வந்த "ஸைஹு" மார்களினதும், இறைநேசர்களான வலிமார்களினதும் ஸியாரங்கள் — அடக்கஸ்தலங்கள் இப்பகுதிகளில் நிறைய உண்டு. மிகப் பழமைவாய்ந்த அரபுக் கல்லூரிகள் — மத்ரஸாக்கள் இப்பிரதேசத்தில்தான் முதன்முதல் ஆரம்பிக்கப்பட்டன என்பதும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். காலி, மாத்தறை, வெலிகமம் உட்பட தென்மாகாணத்தின் பல பகுதிகளிலும் ஸியாரங்களும், அரபுக்கல்லூரிகளும் காணப்படுகின்றன. இது தவிர மத்திய காலத்தில் இஸ்லாமிய வாழ்க்கைநெறிகளை செயல்முறைப்படுத்தி உழைத்த ஆத்ம ஞானிகள் உருவாக்கிய தரீக்காக்களின் செல்வாக்கும் இப்பகுதியில்தான் இறுக்கமான இடத்தை பெற்றுள்ளன. அரபுத் தமிழ் வளர்ச்சியில் கூடிய பங்களிப்பை ஏற்படுத்திய பிரதேசம் தென்மாகாணமாகும். மங்கோலியப் படையெடுப்பின் பின்னர் ஏற்பட்ட இஸ்லாமிய ஸாம்இராச்சியத்தின் சிதைவினால் அரபிகளின் வருகை கணிசமாகக் குறைந்து, இந்திய மக்களின் வருகை அதிகரித்தது. குறிப்பாக மொகலாய ஸாம்இராச்சியம் வலுவுற்றிருந்த காலத்தில் இந்தியாவின் தென்பால் வாழ்ந்த மக்கள் வர்த்தக தொழில் நடவடிக்கைகளுக்காக இலங்கை வந்தனர். ஏற்கனவே அரபுமக்களுடன் தொடர்புடையவர்களாக விளங்கிய இவர்கள், இலங்கை முஸ்லிம்களின் கலாசார வளர்ச்சியில் கூடிய செல்வாக்கைச் செலுத்தலாயினர். ஐரோப்பியர் இலங்கைக்கு

வருகைதந்த காலத்தில் இலங்கை முஸ்லிம்களின் காலசாரப் பாரம்பரியங்கள், அரபு இந்திய உறவால் ஏற்படுத்தப்பட்ட கலப்புள்ள அமைப்புடையதாகக் காணப்பட்டன. அடிப்படையில் சமயச் சட்டதிட்டங்களை ஏற்றுக்கொண்ட முஸ்லிம்கள், நடைமுறையில் பிராந்தியப் பாதிப்புக்களையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது. சூழ்நிலைகளின் தாக்கமானது இஸ்லாமிய நடைமுறைகளிலும் மாற்றங்களை உருவாக்கிற்று. இதற்கு காரணமாகக் காவியைக் குறிப்பிடலாம். போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் கலாசார ரீதியிலான பாதிப்பினை உருவாக்கிற்று. இப்பாதிப்புக்கள் மேலும் பரவாமல் இருப்பதற்கு இங்கு உருவாக்கப் பட்ட அரபுக்கல்லூரிகள் சமய நடைமுறைகளை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தன.

இலங்கைக்குப் போத்துக்கீசரின் வருகையானது முஸ்லிம்களைப் பெரிதும் பாதிக் கலாயிற்று. வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்களே அவர்களின் பிரதான எதிரிகள் எனக் கருதப்பட்டனர். படைபலமும், நவீன ஆயுதங்களும் வைத்திருந்த அவர்களிடம் கரையோரப் பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம்களால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. இலங்கை மன்னர்களில் சிலர், முஸ்லிம்களுக்கு ஆதரவாக இருப்பினும், உள்நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களால் இதன் பலனை முஸ்லிம்கள் முழுமையாகப் பெற முடியாமல் போயிற்று. வர்த்தகத்தில் ஏற்பட்ட பாதிப்புக்களை ஈடுசெய்ய உள்நாட்டுப் பிரதேசங்களை நோக்கிச் செல்லத் தொடங்கினர். இலங்கை மன்னர்கள் பல இடங் களிலும் காணிகள் அன்பளிப்புச் செய்து முஸ்லிம்களை குடியேற்றினர். இதனால் சிங் களப் பிரதேசங்களில் முஸ்லிம்கள் குடியேறியதால், காலப்போக்கில் அவர்களுடன் இரண்டறக் கலந்து வாழலாயினர், இதனால் ஏற்படுத்தப்பட்ட முஸ்லிம் கிராமங்களை உள்நாட்டின் பல பகுதிகளிலும் காணலாம். முஸ்லிம்களின் பெரும்பகுதியினர் கிழக்கு மாகாணத்தில் குடியேறினர். கிழக்கு மாகாணத்தில் குடியேறிய முஸ்லிம்கள் தமிழ்மக்களுடன் சேர்ந்து வாழலாயினர்.

சிங்களப் பிரதேசங்களில் குடியேறிய முஸ்லிம்கள் மத்தியில் சிங்களக் கலா சாரத்தின் பாதிப்புக்களை விட தமிழ்ப்பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்களிடத்து தமிழ்க் காலசாரத்தின் செல்வாக்கு அதிகமாகக் காணப்படுகின்றது. இதற்கு அடிப்படைக் காரணமாக அமைவது மொழியியல் ரீதியான உறவுகளாகும். இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் வாழும் முஸ்லிம்களும் தமிழ்மொழியைத் தங்களது தாய்மொழியாக கொண்டிருக்கின்றார்கள். தமிழ்மொழியின் வளர்ச்சியிலும் முஸ்லிம்கள் அதிக அக்கறை கொண்டுள்ளனர். அரபு மக்கள் தென்னிந்தியாவுடன் வைத்துக்கொண்ட தொடர்பே தமிழ்மொழியுடன் முஸ்லிம்கள் இறுக்கமான உறவுகளை வைத்துக்கொள்ளக் காரண மாகும். இலங்கையில் இஸ்லாமிய கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கக்கூடிய நூல்கள் அதிகமானவை தமிழ் மொழியில் எழுந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இஸ்லாமிய நெறிமுறைகளை விளக்கும் நூல்கள் இற்றைக்கு சுமார் ஐம்பது ஆண்டு களுக்கு முன்னர் ஆங்காங்கே அரபுத் தமிழில் எழுந்தாலும், அதிகமான இஸ்லாமியத் தத்துவங்களை விளக்கும் நூல்கள், தமிழ்மொழியில் எழுந்திருப்பது இலங்கை முஸ் லிம்களின் கலாச்சாரத்துடன் தமிழ்மொழி கொண்டுள்ள முக்கிய தொடர்பை எடுத் துக் காட்டுகின்றது. காப்பியங்களையும், பிரபந்தங்களையும் முஸ்லிம்கள் தமிழில் இயற் றியுள்ளனர். படைப்போர், முனாஜாத், கிஸ்ஸா, மஸாலா, நாமா ஆகிய புதிய பிர பந்த வகைகளும் தமிழ் மூலம் முஸ்லிம்களின் கலாச்சாரத்தை விளக்குவனவாகும். இவற்றிலும் நாம் தமிழ்மொழியுடன் இணைந்த கலாச்சார ஊடுருவல்களைக் காண முடியும். இலங்கையின் பல பாகங்களிலும் புலவர்களும், புரவலர்களும் வாழ்ந்து

புலமைகளை வெளிப்படுத்தியும், புலமைக்கு ஆர்வம் அளித்தும் உள்ளனர். பேருவலையில் குடியிருந்த செய்ஹு முஸ்தபா வலியுல்லாஹ், யாழ்ப்பாணம் சுலைமான் லெப்பை பாவலர், பதுறுதீன்புலவர், கண்டி அருள்வாக்கி அப்துல்காதிர்புலவர், கற்பிட்டி அப்துல்மஜீத்புலவர், கொழும்பு செய்ஹு முகம்மது அப்துல்லாஹ் புலவர், ஆகியோர் முக்கிய பங்களிப்புக்களைச் செய்தவர்கள். அரபுத் தமிழில் பிரபல்யம் பெற்ற மேதை யாக விளங்கிய மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் பரம்பரையும், இஸ்லாமிய கலாசாரத்தின் வளர்ச்சியில் ஆக்கங்களின் மூலம் பல அரிய பணிகளைப் புரிந்துள்ளனர்.

இலங்கை இந்திய கலாசார உறவுகள் மூலம் ஏற்பட்ட பாதிப்புக்களையும் நாம் கவனத்தில் கொள்ளாமல் விடமுடியாது. இஸ்லாமிய அடிப்படைத் தத்துவங்களைப் பாதிக்கும் வகையில் வலிமார்களுக்கும், ஷைஹுமார்களுக்கும் அளிக்கப்பட்ட முக் கியத்துவமானது, இஸ்லாமிய கலாசார அமைப்பில் பெரும்பாதிப்பை ஏற்படுத்த லாயிற்று. ஆண்களும், பெண்களும் இஸ்லாத்தின் அடிப்படை அறிவில்லாத காரணத் தால், ஸியாரங்களுக்குச் சென்று '' ஸிர்க் ''கான வேலைகளில் ஈடுபடலாயினர். ஸியாரங் களின் தோற்றத்தால் உருவான பெரும் கலாசாரப் பாதிப்பு இதுவாகும். சில பகுதி களில் மஸ்ஜித்களை அண்டிய ஸியாரங்களும் அமைக்கப்பட்டன. இவ்வாறான ஸியாரங் களைத் தரிசிக்க முஸ்லிம் பெண்கள் தற்காலத்திலும் செல்லும் பழக்கத்தை உடையவர் களாகக் காணப்படுகின்றனர்.

இலங்கையில் பல்லாண்டு காலமாகச் சிங்களமக்கள் பெரகரா எடுப்பது போன்றும், தமிழ்மக்கள் தேர் இழுப்பது போன்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில், கூடு எடுக்கும் பழக்கம் இருந்தது. கண்டி, புத்தளம் உட்பட பல இடங்களில் இப் பழக்கம் நடைமுறையில் இருந்தது. இப்போது அது தடை செய்யப்பட்டு நிறுத்தப் பட்டு விட்டது. இலங்கையில் புனிதத்தலங்களாகக் கருதப்படும் கதிர்காமம், ஜெய்லானி உட்பட முக்கிய ஸியாரங்கள் ஆகியவற்றுக்கு நேர்த்தி வைக்கும் பழக்கமும் முஸ்லிம் களிடம் பரவலாகக் காணப்பட்டது. இப்போது படிப்படியாக அது குறைந்துவருகின்றது. ஹிந்துக்கள் தீக்குளிப்புச் செய்வது போன்று, முஸ்லிம்களும் இவ்வாறு செய்வதில் முன்னின்றனர். மன்னாரிலும், கதிர்காமத்திலும் விசேடமாகக் காணப்பட்ட இப்பழக் கம் இப்போது முஸ்லிம்கள் மத்தியில் அருகிவிட்டது.

கொடியேற்றும் பழக்கமும் தற்போது பல இடங்களில் காணப்படுகின்றது. ரபீஉல் ஆஹிர் மாத ஆரம்பத்தில் முஹிய்யிதீன் அப்துல்காதிர் ஜீலானி அவர்களின் ஞாபகார்த்தமாகக் கொடியேற்றம் நடைபெறுகின்றது. பத்துத்தினங்களுக்கு மௌலூத் ஓதி பதினோராவது தினத்தில் கந்தூரி வைபவம் நடைபெறுவதுடன் கொடிஇறக்கம் இடம்பெறும். இந்த நிகழ்ச்சிக்கு நேர்ச்சை வைக்கும் பழக்கம் முஸ்லிம்களிடம் காணப் படுகின்றது. நாகூரில் அடக்கப்பட்டிருக்கும் சாஹுல் ஹமீது வலியுல்லாஹ் அவர் களின் பெயரிலும் மௌலூது வைபவம் நடைபெறுகின்றது. வீடுகளில் '' பத்ர் '' ஸஹாபாக்களின் பெயரில் மௌலூது ஓதும் வைபவம் இடம்பெறுகின்றது. இவ் வாறான வைபவங்கள் இந்திய முஸ்லிம்கள் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் ஏற்படுத் திய கலாசாரப் பாரம்பரியமாகும். இற்றைக்கு சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் பல பாகங்களிலும் அமைந்துள்ள பள்ளிவாசல்களில் கதீப்மார்களாகக் கடமையாற்றியவர்கள் இந்திய ஆலிம்களும், லெப்பைமார்களுமே. இவர்கள் இவ்வாறான நிகழ்ச்சிகளுக்கு ஆர்வம் அளித்து வந்துள்ளனர்.

**அரபு மதுரஸாக்கள்:**

இலங்கையில் இஸ்லாமிய மார்க்க ஞானத்தைப் போதிப்பதற்காக அரபு மதுரஸாக்கள் உருவாக்கப்பட்டன. இவ்வாறான அரபுக்கல்லூரிகள், காலி, வெலிகம, மகரகம, புத்தளம், மூதூர், காத்தான்குடி, கிண்ணியா, அட்டாளைச்சேனை, பாணந்துறை, மாதம்ப, கல்ஹின்ன சம்மாந்துறைஉட்பட பலபகுதிகளிலும் உருவாக்கப்பட்டன. இவ்வாறான அரபுக் கல்லூரிகள் முப்பதிற்கும் அதிகமாக இலங்கையில் காணப்படுகின்றன இவற்றில் இருந்து பட்டம்பெற்று வெளியேறிய உலமாக்கள் அரசாங்க பாடசாலைகளில் அரபு ஆசிரியராகவும், பள்ளி வாசல்களில் கதீப்மார்களாகவும், பேஸ் இமாம்களாகவும் கடமையாற்றுகின்றார்கள். இவர்கள் மூலம் சமூகத்தில் கலாச்சார மாற்றங்கள் பரவலாக ஏற்பட்டு வருகின்றன. குறிப்பாகக் கூறுவதென்றால் முஸ்லிம்கள் மத்தியில் இஸ்லாமிய கலாச்சாரப் பாரம்பரியங்களை நெறிப்படுத்தும் முழுப்பொறுப்பும் இவர்களுக்குண்டு. இஸ்லாமிய ஞானங்களை வழங்குவதற்கு இலவசக் கல்வியும், உணவும் வழங்கப்படுவது விசேட அம்சமாகும்.

**திருமண சம்பிரதாயங்கள்:**

திருமண சம்பிரதாயங்களில் இஸ்லாமிய கலாச்சார அமைப்புகளுடன் ஏனைய கலாச்சாரங்களின் தாக்கமும் காணப்படுகின்றன. இவற்றில் பிரதானமானது 'தாலி' அணிவித்தல் ஆகும். 'தாலி' இல்லாத திருமணம் முறையற்ற திருமணம் என்னும் மனப்பான்மை ஏற்படும் அளவிற்கு, இது ஒரு நிரந்தரமானதாக முஸ்லிம் சமூகத்தில் இடம்பெற்றுவிட்டது. திருமண வைபவத்தின் போது மணமகன் மணமகளுக்குக் கட்டாயம் கொடுக்கவேண்டிய "மஹர்" என்னும் அன்பளிப்பு பெரும்பாலும் திருமணத்தின் போது கொடுபடுவதில்லை. இதற்கு மாற்றமாக பெண்பகுதியினரிடமிருந்து சீதனம் பெறும் வழக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. ஐரோப்பியர்களின் முறைகளைப் பின்பற்றி நகரப்புறங்களில் செல்வந்தர்கள் திருமண வைபவங்களை ஹோட்டல்களில் ஒழுங்கு செய்வதுமுண்டு. சில சமயங்களில் உயர் அந்தஸ்தில் வாழ்பவர்கள் திருமணச் சாட்சிகளாக முஸ்லிம் அல்லாத உயர் பதவி வகிப்பவர்களை ஏற்பதும் உண்டு. மணப்பெண்ணை அலங்கரித்து திருமணச் சடங்கிற்கு வருபவர்களின் பார்வைக்காக வைப்பதுவும் சில இடங்களில் காணப்படும் காட்சியாகவுள்ளது. பள்ளிவாசல்களில் நிறைவேற்றப்படவேண்டிய திருமணச் சடங்குகள், இவ்வாறு மாறுபட்ட விதத்தில் அமைவதற்கு தற்கால நாகரிகம் ஒரு காரணியாக அமைந்து விட்டது. இச்சடங்குகள் இலங்கையில்வெவ்வேறு பிரதேசங்களில் வேறுபட்ட அமைப்பில் நடைமுறையில் உள்ளன.

கிழக்கு மாகாணம் போன்ற பகுதிகளில், மணமகன் மணமகளிடம் செல்வதற்கு முன், பால்கொண்டு கால்கழுவும் மரபுமுறையுண்டு. "வலிமா" விருந்து உரியமுறையில் நிறைவேற்றப்படுவது, அரிதாகவுள்ளது. "ரப்பான்" கொட்டுவது, குரவை ஒலிகள் ஏற்படுத்துவதும் கிழக்கு மாகாணச் சம்பிரதாயங்களில் பிரதானமானவையாகும். புது மணத் தம்பதிகள் ஒற்றுமையாக வாழ்வார்களென யூகிப்பதற்கு எண்ணெயில் பலகாரம் விட்டுப் பார்க்கும் வழக்கம் சில இடங்களிற் காணப்படுகின்றது. மாப்பிள்ளை வீட்டாருக்கு பெண் பகுதியில் இருந்து "சீர்" கொண்டு செல்லுதல் பல இடங்களில் காணப்படும் வழக்குமுறையாகும். சீர் கொண்டு செல்லுதல் என்பது தின்பண்டங்களை பெண்வீட்டார் செய்து, மாப்பிள்ளை வீட்டாருக்குக் கொடுப்பததைக் குறிக்கும். "கூறை" என அழைக்கப்படுவது மணமகனால் மணப்பெண்ணுக்கு கொடுக்கப்படும் உடுதுணியாகும். இது பெறுமதி வாய்ந்த சேலையாக இருக்கும். கௌரவத்திற்காக கடன்பட்டு திருமண வைபவங்களை பெரியளவில் செய்யும் பெற்றோர்களும் உண்டு. முஸ்லிம் சமூக

திலும் சீதனம் அதிகரித்து வருவதால் சில இடங்களில் கலப்புத் திருமணங்களும் நடைபெறுகின்றன. சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்கள் மத்தியிலேயே, இவ்வாறான கலப்புத்திருமணங்கள் இடம்பெறுகின்றன. யாவா முஸ் லிம்களும், மலாயா முஸ்லிம்களும் இதில் ஏனைய முஸ்லிம்களைவிட சற்று அதிகமாக ஈடுபடுகின்றனர். இவ்வாறு வாழ்பவரிடம் நடைமுறையில் ஒரு கலப்பு வாய்ந்த கலாசார அமைப்பு இடம் பெறுகின்றது. சமய நடைமுறை வாழ்க்கையில் இவர்கள் மிகப்பின்தங்கியவர்களாகவே உள்ளனர்.

## மேமன் சமூகம்:

இலங்கை முஸ்லிம்களில் மேமன் சமூகத்தைச் சார்ந்தவர்கள் நகர்ப்புறங்களில் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர். ஹனபி மதுஹபைப் பின்பற்றும் இவர்கள் பெரும் பாலும் ஏனைய முஸ்லிம்களுடன் உறவுகளை வைத்துள்ளனர். சமய நடை முறைகளில் குறிப்பிடத்தக்க வகையில் ஐக்கியமாகவும் சமூக ஒற்றுமையுடனும் வாழ்கின்றனர். இலங் கையில் வாழும் ஸாபி மதுஹபைச் சார்ந்த முஸ்லிம்களுடன் திருமண உறவுகளையும் வைத்துள்ளனர். சுமார் இரண்டாயிரம் மக்கள் வரை இவர்கள் இலங்கையில் உள்ளனர். உர்து மொழியைத் தங்களது தாய்மொழியாகக் கொண்ட இவர்கள், கொழும்புநகரில் அதிகமாகவும், கண்டி, காலி, மாத்தறை, மாத்தளை, யாழ்ப்பாணம், குருநாகல், மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களிலும் வாழுகின்றனர். 1949ம் ஆண்டில் பாகிஸ் தானிய இந்திய பிரஜா உரிமைச்சட்டத்தின் அமுலுக்குப்பின்னர் பலர் இலங்கைப் பிரஜையாக வாழ்கின்றனர். இவர்கள் தங்களது குடும்பங்களுடன் வாழ்வதால் இவர் கள் இஸ்லாமிய கலாசாரத்தைப் பேணி வாழ்வதில் கவனம் செலுத்துவது குறிப் பிடத்தக்கதாகும்,

## போரா சமூகம்:

ஒரு நூற்றாண்டு காலத்துக்கு மேலாக இலங்கையில் வாழும் போரா சமூகத் தவர்கள், ஏற்கனவே நாம் குறிப்பிட்டவாறு ஷீயாப்பிரிவைச் சேர்ந்தவர்கள். சுன்னத் வல்ஜமாஅத்தினருடன் வர்த்தகத் தொடர்பைத் தவிர, கலாசார உறவுகளை அவர் கள் வைத்துக் கொள்வதில்லை. அவர்கள் தங்களுக்கென பள்ளிவாசல்களை வேறாக வைத்துள்ளனர். அவர்களது பள்ளிவாசல்களுக்கு ஏனையோர் செல்வதை அவர்கள் விரும்புவதில்லை. இவர்கள் தங்களுக்கு வேறாக மையவாடியும் அமைத்துள்ளனர். இவர் கள் தங்களது சமூகக் கட்டுப்பாட்டை அனுசரித்து வாழ்வதில் தீவிர கவனம் உடை யவர்கள். தங்களது இமாமுக்கு மிக உயர்வான மரியாதையையும் கௌரவத்தையும் அளிக்கிறார்கள். இமாமின் உத்தரவில்லாமல் பொறுப்பான காரியங்களில் ஈடுபடமாட் டார்கள். தங்கள் சமூகக்கட்டுப்பாடுகளை மீறி நடப்போருக்கு எதிராகக் கடுமையான விதிமுறைகளைக் கையாழுகின்றார்கள். கட்டுப்பாட்டிலிருந்து மீறுபவர்களை "பராத்" (சமூகத்திலிருந்து நீக்கி) வெளியேற்றிவிடுவார்கள். அவ்வாறு வெளியேற்றப்பட்ட வருடன் குடும்பத்தவர், சமூகத்தவர் எல்லோரும் உறவுகளைத் துண்டித்துக் கொள் வார்கள். இமாமின் பிரதிநிதியாக ஆமில்கள் ஒவ்வொரு பகுதியிலும் இருக்கின்றார் கள். "ஸகாத்" வரியை அறவிடுவதும் சமூகக் கட்டுப்பாடுகளைக் கண்காணிப்பதும் இவர்களது பொறுப்பாகும். இவர்களது அனுமதியின்றி திருமணங்கள் நடாத்தவோ கபுரில் மையம் அடக்கவோ முடியாது. நோன்பு நோற்பது பிறைகண்டே நோற்க வேண்டும் என்பதை இவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக நட்சத்திரக் கணக்கின் படியே நோன்பு நோற்பார்கள். தொழுகையை நடத்துவதற்கு முல்லாக்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மஸ்ஜித்களில் ஆண்களும் பெண்களும் தொழலாம். ஆண் களுக்கு கீழ்த்தட்டும் பெண்களுக்கு மேல்தட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்

கள் தங்களது கலாச்சாரப் பாரம்பரியங்களைப் பேணிக்கொண்டு இருக்கின்றனர். ''போரா'' சமூகம் தனிச் சமூகமாக இயங்குவதாலும் இவர்கள் இலங்கைவாழ் ஏனைய முஸ்லிம்களுடன் கலாசார உறவுகள் வைத்துக்கொள்ளாததாலும் அவர்கள் ஒதுங்கியே வாழுகின்றனர்.

இஸ்லாமியக் கலாசார அமைப்பானது, குழந்தை பிறந்தது முதல் மரணம் அடைந்து அடக்கம் செய்யும் வரை உள்ள காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தவேண்டிய செயல்முறைகளை அமைத்துக்கொடுத்துள்ளது. உதாரணமாக ஒரு குழந்தை பிறந்தால் வலப்பக்கக் காதில் ''பாங்கும்'' இடப்பக்கக் காதில் ''இகாமத்தும்'' ஒலிக்கப்பட வேண்டும் என்பதும் மரணிக்கும் பொழுது தொழுகை நடத்தி நல்லடக்கம் செய்யப் படவேண்டும்.என்பதும் நடைமுறைப்பழக்கங்களாகும்.இவைகள் பின்பற்றப்படுகின்றன. ஆனால் இதற்கு இடைப்பட்ட காலத்தில் சமூகத்தில் நடைபெறும் சில சடங்குகளையும் தமது கலாசார அமைப்பாகக் கருதி செயற்படுகின்றனர். உதாரணமாக, ''கத்னு'' என்னும் சடங்கை ஆடம்பரமான முறையில் நடாத்துவதிலும் ஒரு முஸ்லிம் மங்கை பராயமடைந்துவிட்டால் ஏழாம் நாளில் இனத்தவர்களையும், நண்பர்களையும் அழைத்து விழாவாகக் கொண்டாடுவதும் முஸ்லிம்கள் மத்தியில் பல பிரதேசங்களிலும் காணப் படுகின்றன. இவைகள் வேறு கலாசாரங்களின் தாக்கம் என்பதை இவர்கள் உணர்ந்து கொள்வதில்லை.

முஸ்லிம்கள் மத்தியில் காணப்படும் ஏனைய கலாசார ஊடுருவல்களை நீக்கு வதில் பல இயக்கங்களும் உழைத்து வருகின்றதால், படிப்படியாக இவை மறைந்து வருகின்றன. தப்லீக் இயக்கம் இஸ்லாமிய கலாசார நடைமுறைகளை ஒழுங்காக்கு வதில் இவ்வியக்கத்தில் சேர்ந்தவர்களுக்கு, பிரச்சாரத்தாலும், செயல்முறைகளாலும் பயிற்சி அளித்துவருகின்றது. உலமாசபையும் அவ்வப்போது ஏற்படும் மார்க்கப் பிரச் சினைகளுக்கு தீர்வு காண்பதில் கவனம் செலுத்துகின்றது. 1974ம் ஆண்டில் ஆரம்பிக் கப்பட்ட அகில இலங்கை கதீப்மார் சங்கம் பரந்த அளவில் உமாக்கள், கதீப் மார்கள், ஜமாஅத்தவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் முஸ்லிம்களின் மார்க்க கடமைகளை ஒழுங்கு படுத்திக் கொடுப்பதில் முன்னின்று உழைத்து வருகின்றது.

## முடிவுரை

இலங்கை முஸ்லிம்களின் கலை கலாசாரப் பாரம்பரியங்களில் அறிந்தோ அறி யாமலோ இஸ்லாத்துக்கு மாற்றமான பல அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. முஸ்லிம் பெண்கள் ஸியாரங்களுக்கு செல்லும் வழக்கம் இதில் ஒன்றாகும். இவர்கள் நேர்ச்சை கள் வைத்து ஏகத்துவத்துக்கு மாற்றமான செயல்களில் ஈடுபடுவதற்கு இவ்வாறான செயற்பாடுகள் வழியமைக்கின்றன. இவற்றை சமூகத்திலிருந்து நீக்குவதற்கு உலமாக் கள் முன்வரல் வேண்டும்.

இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழி தமிழ். இம்மொழியினில் பிரசுரமாகியுள்ள முஸ்லிம்களால் எழுதப்பட்ட இஸ்லாமிய நூல்கள் சிலவற்றில் இஸ்லாமிய நம்பிக்கை களுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் வலிமார்களுக்கும், குத்புமார்களுக்கும் அளிக்கப் பட்டுள்ள முக்கியத்துவம் ஆனது பாமர மக்களை வழிதவறச் செய்யும் பாணியில் அமைந்துள்ளன. இவ்வாறான நூல்கள் தற்காலத்தில் வெளிவருவது குறைவாக இருப் பினும் இவ்வாறான நூல்கள் வெளிவந்தால் முஸ்லிம் எழுத்தாளர்கள் உடனுக்குடன் விமர்சனத்தில் ஈடுபட்டு இவற்றை மறையச் செய்ய வேண்டும்.

இஸ்லாத்தில் திருமண அமைப்பு முறையில் மணமகனால் மணமகளுக்கு கொடுக்கப்படும் ''மஹர்'' என்னும் அன்பளிப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. நடைமுறையில் ''மஹர்'' கொடுக்கும் பழக்கம் எழுத்தில் எழுதப்பட்டாலும் உடனுக்குடன் கொடுப்பது மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. இதற்குப் பதிலாக இஸ்லாமிய கலாசாரத்திற்கு உட்படாத ''தாலி'' முக்கியத்துவப்படுத்தப்படுகிறது. ஆகவே தாலியை விட மஹரை முக்கியத்துவப்படுத்தி நடைமுறையில் கொண்டுவர வேண்டும். இதற்கு கதீப்மார்கள், பள்ளிவாசல்பரிபாலகர்கள், ஜமாஅத்தவர்கள் ஒன்றுபட்டு இதனை நடை முறைப்படுத்த முன்வரவேண்டும். இதனைத் திருமணப் பதிவுகாரரும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

சீதனக் கொடுமையால் ஏழை முஸ்லிம்கள் தங்களது வயதுவந்த பெண்களை திருமணம் செய்து கொடுப்பதற்கு முடியாமல் அவதியுறுகின்றனர். சில சமயங்களில் கலப்புத் திருமணங்கள் ஏற்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைகின்றது. ஒவ்வொரு ஜமா அத்திலும் இவ்விடயம் சம்பந்தமாக பள்ளிபரிபாலகர்களும் ஊரிலுள்ள முக்கியஸ்தர்களும் கவனம் செலுத்தி தீர்வுகாணப்படல் வேண்டும். சமூகத்தில் சீதனப்பழக்கத்தை ஒழிப்பதற்கு வாலிபர்கள் முன்னின்று போராடவேண்டும்.

முஸ்லிம்களின் திருமணச் சடங்குகளில் முஸ்லிம் அல்லாதவர்கள் சாட்சிகளாக இருப்பதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. திருமணமும் ஒரு சமயச்சடங்காகும். ''திருமணங்களை பள்ளிவாசல்களில் நிறைவேற்றுங்கள்'' என்பது பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்களின் பொன் மொழியாகும். இஸ்லாமிய நடைமுறைகளைப் பேணுவதற்காக இவற்றை நடைமுறையில் கொண்டு வருவதற்கு வர்க்கபேதம் இல்லாமல் அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

இஸ்லாத்தில் ''ஸகாத்'' என்னும் செல்வத்திற்காக விதிக்கப்பட்டுள்ள வரி, மார்க்கக் கடமைகளில் ஒன்றாகும். இதுவும் சமூகத்தில் ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படவில்லை. ரமழான் மாதத்தில் விசேடமாக நோன்பு 27 வந்து விட்டால் முஸ்லிம் ஏழைகள் தெருத்தெருவாக அலையும் காட்சியைக் காணலாம். இவ்வாறு இரந்து திரிவோரில் வயோதிபர்கள், வயது வந்த பெண்கள், சிறுவர்கள், சிறுமிகள் உட்பட பல தரத்தினரும் அடங்குவர். இக்காட்சி சமூகத்திற்கு இழிவை ஏற்படுத்தும் ஒன்றாகும். இதனை நீக்குவதற்கு பள்ளிவாசல்களால் முடியும். ஒவ்வொரு பள்ளிவாசலிலும் ''பைதுல்மால்'' அமைப்புமுறை உருவாக்கப்படல் வேண்டும். பைத்துல்மாலில் 'ஸகாத்' முதல்கள் சேகரிக்கப்பட்டு உரியவர்களுக்கு ஒழுங்காகப் பங்கிடப்படும் பொழுது இவ்வாறான வெறுக்கத்தக்க காட்சிகளை நீக்கலாம்.

இஸ்லாம் வாழ்க்கையின் நடைமுறைகளை ஒழுங்குபடுத்தியுள்ள மார்க்கமாகையால், இதன் நடைமுறைகளைச் செயற்படுத்துவதன் மூலம் ஏனைய சமூகத்தவரும்இதன் சிறப்பியல்புகளை உணர்ந்து கொள்ளும் வாய்ப்பினை உருவாக்கலாம். இஸ்லாமிய இயக்கங்கள் எல்லாம் ஒன்றுபட்டு உழைக்கும் போது இஸ்லாமிய கலாசாரப் பண்பாடுகள் மறுமலர்ச்சியடைந்து உண்மையான பாரம்பரியங்கள் உருவாகுவதற்கு வழியமைக்கலாம். இதுவே ஏக நாயன் ''அல்லாஹ்'' அமைத்துள்ள தத்துவம் ஆகும்.

இறை

*Best compliments from:*

## Hameedia Stores

**58, Galle Road,**
**COLOMBO - 6**

**T.'Phone: 85609**

*With best compliments from:*

## Colombo Gem House

**259, Main Street,**
**MATALE.**

**T.'Phone: 541**

***With best compliments from:***

# ASLAMS

**84, 86, Third cross street,**
**COLOMBO - 11.**

Phone } *22279*
*84013*

With best compliments from :

# ASMA TRADERS

*Dealers in :*

LEATHER CLOTH
TANNERIDE & ARPIHYDE
PLASTIC CANE (Chairs & Bags)
PLASTIC SHEETINGS, ADHESIVES &
OTHER UPHOLSTERY MATERIALS Etc.

39, 3rd Cross Street,
COLOMBO - 11

*Leading House for :*

- All kinds of building Materials
- Electric Cables & fittings.
- Complete Estate Requisites

*Distributers for :*

B. M. C. Meterials,
Brown Group Products,
S'lon Water Pipes & fittings
centric water pumps and
Robbialac paints Etc.

## Broadway Stores

101, 103. Main street,
KALUTARA.

அன்பளிப்பு

**ஏ. ஆர். எம். முஸ்தபா
அன் சன்ஸ்**

*70, 49, பஜார் வீதி,
சம்மாந்துறை.*

*For*
*Reliable Repairs*
*of*
*Wrist Watches*
*Clocks*
*Wall clocks*

## A. K. Mohamed & Co.

**14, Kasturiyar Road,**
**JAFFNA**

T.'Phone: 8059

*For*
*Bridal Requirments*
*Fashionable Textiles*
*Fancy goods*

## DESIGN TEXTILES

People's Mordern Market,
23, Power House Road,
JAFFNA.

- களைநாசினிகள்
- கிருமிநாசினிகள்
- பசளை வகைகள்

ஆகியவைகளுக்கு

# ஈஸ்டர்ன் பாமிங் சென்றர்

- *பவர்ஸ் கம்பனியாரின் அம்பாறை மாவட்ட விநியோகஸ்தர்*
- *நெற்சந்தைப்படுத்தும் சபையின் உத்தரவு பெற்ற வியாபாரி*
- *பசளைக் கூட்டுத்தாபன முகவர்*

*பிரதான வீதி,* — *அட்டாளைச்சேனை - 2.*

# இலங்கை முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சி

சில வரலாற்றுச் சிந்தனைகள்

ஏ. எம். மீராசாஹிபு

வணிகமானி (சிறப்பு) — 2ம் வருடம்

இலங்கை முஸ்லிம்களின் குடியேற்றம் 8ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நிகழ்ந்த தென்பர். கலீபா அப்துல் மலிக் பின் மர்வான் காலத்தில் அரேபிய நாட்டை விட்டு வெளியேறிய ''ஹாசிம் கிளை''யைச் சேர்ந்தவர்கள் இலங்கையிலும், மலாகாவிலும் குடியேறினர். இலங்கையில் திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், குதிரைமலை, கொழும்பு, பர்பரீன் (பேருவலை), காலிமுனை ஆகிய இடங்களில் குடியமர்ந்தனர். இதனை வரலாற்றாசிரியர்களான சர் அலெக்சாந்தர் யோன்ஸ்ரன், எம். டி. இராகவன் போன்றோர் உறுதிப்படுத்துகின்றனர்.

அராபிய முஸ்லிம்கள் குர்ஆனின் போதனைகளால் அறிவுத்துறையில் உந்தப்பட்டு மத்திய காலத்தில் இருண்டு கிடந்த ஐரோப்பாவுக்கே ஒளி விளக்காகத் திகழ்ந்தவர்கள். அவர்கள் வழிவந்த இலங்கை முஸ்லிம்கள் தம் மதத்தின்மீது கொண்டிருந்த அசையாத நம்பிக்கையின் காரணமாக இந்நாட்டில் அடுத்தடுத்து வந்த அந்நிய ஆட்சியாளர்களின் காலங்களில் மதம் பரப்பும் நோக்கம் கொண்ட கல்வியினை நாடாது ஒதுங்கிக் கொண்டனர்.

இந்தப் போக்கில் இலங்கை முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சி பற்றிய தகவல்களை 1891ம் ஆண்டுவரை விபரமாக அறியமுடியவில்லை. முஸ்லிம் சமூகத்தவரிடையே கல்வி குறிப்பிடத்தக்களவில் முன்னேற்றம் அடைந்திராமையே காரணம் எனலாம். ஆனால் மதக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதனை அறிய முடிகிறது. இதற்காக அரபு மொழி மத்ரஸாக்களை ஏற்படுத்தியிருக்கின்றனர். இஸ்லாமியக் கொள்கைகள் பற்றிய விளக்கத்தினைப் பிள்ளைகளிடத்தில் ஏற்படுத்துவதே இம் மத்ரஸா எனும் சமய பாடசாலைகளின் பணியாக இருந்தது. அத்துடன் ஆசிரியரை வீட்டிற்கு வரவழைத்து படிப்பிக்கும் முறையும் ஆங்காங்கே காணப்பட்டுள்ளது. முஸ்லிம்களின் கல்வியினைப் பற்றி 1895ம் ஆண்டு கல்வியிலாகாத் தலைவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

''தம் சமூகத்தின் தேவையை உணர்ந்து அதை நிவர்த்திக்க ஒழுங்கான முறையில் திட்டமிட்ட முயற்சி 1891 க்கு முன் எடுக்கப்படவில்லை. பொதுவாகப் பழங்கால திண்ணைப் பள்ளிக் கூடங்களும், மசூதிப் பள்ளிக்கூடங்களுமே நடைபெற்று வந்தன. இவ்விடங்களில் கற்பன யாவும் ''குர்ஆன்'' ஆகவே இருந்தது. கல்வி இலாகாவின் அங்கீகாரம்பெற்று பரீட்சை செய்யப்படும் பள்ளிக்கூடங்களில் ஓரிரு முஸ்லிம்பிள்ளைகளின் வரவைக் காணலாம். ஆனல், அவ்விதம் வரும் பிள்ளைகளின் எண்ணிக்கை மிகமிகக் கொஞ்சமாகும். அச்சமூகத்தவரின் மத்ரஸாக் கல்வியினின்றும் கவனத்தை லௌஹீகத் துறைக்கேற்ற கல்வியில் ஈடுபடுத்தல் மிகவும் கடினமான காரியமாகும். அவர்களின் மதக் கொள்கைகளுக்கிணங்க ஒரு முஸ்லிம் பிள்ளையின் முதற் பயிற்சி அரபு மொழியிலேயே புகட்டப்படல் வேண்டும். இச்சமூகத்தவரின் மதாசாரக் கொள்கைகளில் தலையிடாது, அவர்களுக்கு உலக வாழ்க்கையில் நலன் உண்டாவதற்கு ஏதுவான கல்வியை அவர்களிடையே புகுத்துவது கடினம். எனவே நன்கு ஆராய்ந்து உசிதமான ஒரு திட்டம் வகுக்கப்படல் வேண்டும். முதலில் ''குர்ஆன்'' கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து,

பின் படிப்படியாக லௌகீகக் கல்வி புகட்டப்படல் வேண்டும். இதற்கமைய அவர்களது பாடவிதானங்கள் தொகுக்கப்படல் வேண்டும். இதன் பிரதிபலன் எவ்வளவு தூரம் நன்மையானதாக அமையும் என்பது தற்போது கூறமுடியாது. என்றாலும் இச் சமூகத்தினர் உலகக் கல்வியின் முக்கியத்துவத்தினை உணர இன்னும் நீண்ட காலம் செல்லும்''.

போத்துக்கேயரின் வருகைக்கு முன்பே இலங்கைத் தீவில் வர்த்தக ஆதிக்கம் செலுத்தியவர்கள் முஸ்லிம்கள். முஸ்லிம்களின் வர்த்தகக் கப்பல்களைத் துரத்திக்கொண்டு வந்தபோதுதான் போத்துக்கேயர் இலங்கைத் தீவினைக் கண்டனர். ஆகவே வர்த்தகத்தில் எதிரிகளாகக் காணப்பட்ட முஸ்லிம்களின் கல்வி போத்துக்கேயரின் காலத்தில் சிறப்படைந்திருக்கும் என்று கூறுவதற்கில்லை. மாறாக புராதன சிற்ப வேலைப்பாடு களமைந்த பல மசூதிகளை அழித்தமைக்கும், தமதாட்சிக்குட்பட்ட வேருவலை, அளுத்கம, களுத்துறை, மாத்தறை ஆகிய இடங்களில் வாழ்ந்த பல முஸ்லிம்களை வெளியேற்றி மைக்கும் ஆதாரங்களுள. (இவ்வாறு வெளியேற்றிய முஸ்லிம்களை கண்டி மன்னன் சேனரதன் (1605 — 1635) தனதாட்சிக்குட்பட்ட மட்டக்களப்பு பிரதேசத்தில் குடியேற்றினான்).

ஒல்லாந்தரும் மத வைராக்கியமுள்ளவர்களாயிருந்தமையினால் முஸ்லிம்கள் நாளுக்கு நாள் வணிகத்துறையிலும், கல்வித்துறையிலும் மேலும் மேலும் தமது சிறப்பை இழந்து விடநேர்ந்தது. இதனால் மேலும் மேனாட்டுக் கல்வியில் ஆர்வம் குன்றி வெறுப்பேற்பட்டது.

சுதேச மொழிகளில் முஸ்லிம்களுக்கு மேனாட்டுக்கல்வியைக் கற்று விடுவதென்பது பெரிய காரியமாக இருந்திருக்காது. ஆனால் ஆட்சியாளர்கள் கடைப்பிடித்த மத, பொருளாதாரக் கொள்கைகளே அவ்வாறு செய்யாமல் தடுத்தது எனலாம்,

பின்வந்த பிரித்தானியர் ஆட்சியில் முஸ்லிம்களின் கல்வி நிலைமையில் சிறிது மாற்றம் ஏற்பட்டது என்றே சொல்லவேண்டும். முன்னையவர்களைப் போலன்றி இவர்கள் மதவெறியர்களாயிருக்காமையினால் இதுவரை முஸ்லிம் சமூகத்தவர் அனுபவித்து வந்த பல வசதியீனங்கள் நீங்கின. வர்த்தகமும், மதப்பயிற்சியும் பகிரங்கமாகவே நடைபெறலாயின. மற்ற இனத்தவர்களைப் போன்று தங்கள் நிலையில் இருந்து ஒருபடி முன்னேறி ஆங்கிலக் கல்வியைப் படிக்க முனைந்தனர்.

பிரித்தானியர் கால ஏகாதிபத்திய பாடசாலைகள் அவர்களது மதமான கிறிஸ்தவ மதத்திற்கு மக்களைத் திருப்பும் நோக்கத்தைக் கொண்டனவாக இல்லாவிடினும், கிறிஸ்து மதக் கோட்பாட்டுக்குள்ளேயே கல்வி புகட்டப்பட்டது. இதனால் பௌத்த, இந்து மக்களிடையே மதமாற்றத்தினை உற்சாகப்படுத்தியது. இச்சூழ்நிலை முஸ்லிம் மக்களிடையே ஏற்படத் தொடங்கிய மேனாட்டுக் கல்வி மோகத்தை ஓரளவு தடுக்கும் காரணியாயிற்று. மேனாட்டுக் கல்வியை விட சமயத்தில் மிகுந்த பற்றுள்ள முஸ்லிம் பெற்றோர்கள் தம் பிள்ளைகளை கிறிஸ்தவ பாடசாலைகளுக்கு அனுப்புவதை நிறுத்தி விட்டார்கள்.

1841ம் ஆண்டு தேசாதிபதியால் கல்விக்காக "மத்திய பாடசாலைச் சங்கம்'' ஏற்படுத்தப்பட்டது. இதில் 9 அங்கத்தவர்களுள் அனைவரும் கிறிஸ்தவ சபைகளிலிருந்தே தெரிவாகினர். இது கிராம நகரங்கள் என்ற பாகுபாடின்றி, ஆங்கிலக் கல்வியைப் பரப்பும் நோக்கம் கொண்டிருந்தது. இதனாலும் முஸ்லிம்களுக்கு எவ்வித பலனும் ஏற்படவில்லை. இச்சபை 1869ல் நீக்கப்பட்டு "கல்வி இலாகாத் தலைவர்'' இதன் இடத்துக்கு நியமிக்கப்பட்டார். மத்திய பாடசாலைச் சங்கத்தின் பொறுப்பு இலாகாத்

தலைவருக்கு மாற்றப்பட்டதால் திருச்சபையின் ஆதிக்கத்தில் இருந்து கல்வியானது பிரிக்கப்பட்டது. இதனல் முன்னர் ஏற்பட்ட கசப்பான அனுபவம் நீங்கி மேனாட்டுக் கல்வியில் நாட்டம் அதிகரிக்கத் தொடங்கியது.

சிறிது காலத்தின் பின்னர் நாட்டில் கோப்பி விலை வீழ்ச்சியினுல் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக அரசாங்கம் பல செலவுகளைக் குறைத்துக் கொள்ளத் தொடங்கியது. இந்தப்போக்கில் கல்லூரிகளை நகராட்சி மன்றம், கிராமச் சங்கம் முதலிய சங்கங்களிடமும், பணமும் நிர்வாகத்திறமையும் உள்ளவர்களிடமும் கொடுக்கத் தொடங்கியது. இதனுல் மீண்டும் அத்தகைமையுடைய கிறிஸ்தவ சபை களிடமே கல்லூரிகள் வந்து சேர்ந்தன. இது முஸ்லிம்களுக்கு பேரிடியாக அமைந்த துடன் முஸ்லிம்கள் மத்தியில் பல கருத்து வேற்றுமைகளையும், கொந்தளிப்பான நிலை மைகளையும் கூட ஏற்படுத்திற்றெனலாம். நிலைமை இவ்வாறு இருக்கும் போது பலரின் ஏச்சுப் பேச்சுகளுக்கு மத்தியில் கொழும்பு, கண்டி, காலி ஆகிய இடங்களிலுள்ள சில பணக்காரக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் இப்பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டனர். 19ம் நூற்றுண்டின் இறுதியில் தங்களின் கலாசார பின்னணியில் பிள்ளைகளுக்கு கல்வி புகட்டப்படவேண்டியதன் அவசியத்தை உணரத் தொடங்கினர்.

1886 -ம் ஆண்டைய முகம்மதிய விவாகப் பதிவுச் சட்டம் சம்பந்தமாக ஏற்பட்ட விவாதங்களும், சட்ட சபையினதும், நிர்வாக சபையினதும் தொடர்புமொழி ஆங்கில மாக இருந்ததனுல் அர்த்தம் செய்வதில் ஏற்பட்ட கஷ்டங்களும், அரசாங்க சேவையில் உயர் உத்தியோகங்களிலிருந்து இன்னும் விலகி இருக்க விரும்பாமையும், ஆங்கில அறிவில்லாமை வியாபாரத்துறையிலும், சமூக முன்னேற்றத்துக்கும் தடையாயிருந் தமையும், கிறிஸ்தவமும் ஆங்கிலமும் ஒன்ருனவையல்ல என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்தமையும் கல்வியினை நாடி நின்றன.

மேலும் இலங்கை முஸ்லிம்களுக்கு முன்னேடியாக இந்திய முஸ்லிம்கள் தமது பாரம்பரியமான கொள்கைகளை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு ஆங்கிலக் கல்வி கற்பதில் முன்னின்றனர். இதற்கு பக்கதுணையாக பல எதிர்ப்புக்களின் மத்தியில் சமூகத்தால் நூசிக்கப்பட்ட நிலையில் தனித்துப் போராடி இந்திய முஸ்லிம்களுக்கு "கேம்பிரிஜ்" அல்லது "ஒக்ஸ்போட்" போன்ற கல்லூரி ஒன்றை நிறுவவேண்டும் என்ற சிந்தனை யோடு போராடி 1875ல் "முகம்மதியன் ஆங்கிலோ — கீழைத்தேச கலாசாலை" (**The Mohammadean Anglo — Oriental School**) ஐத் தொடங்கி 1877ல் அலிகார் கல்லூரியாகவும் (1920ல் இதுவே அலிகார் சர்வகலாசாலையானது) மாற்றி தனது இலட்சியத்தை நிறைவேற்றிய "சேர் செய்து அஹமது கான்" அவர்களின் வெற் றியும் இலங்கை முஸ்லிம்களின் கல்விக்கு தூண்டுதலாக அமைந்தது. இச்சூழ்நிலையில் இலங்கை முஸ்லிம்களின் நிலையினை உயர்த்துவதற்காக முன்னணியில் திகழ்ந்தவர் அறிஞர் சித்திலெவ்வை எனும் பெரியாராகும். பௌத்தரும், இந்துக்களும், கல்வியில் முன்னேறிக் கொண்டிருந்த அக்கால முஸ்லிம்கள் வாளாவிருக்கின்றனரே என வருந்தி வரவிருக்கும் ஆபத்தை உணர்த்தி வாழ வழிகாட்டி, சித்தி லெவ்வையவர் கள், தனது "முஸ்லிம் நேசன்" (**The Muslim Friend**) என்றஆங்கில, தமிழ் பத்திரிகை யின் மூலம் தனது முதிர்ந்த ஞானத்துடன் தனது சேவையினைச் செய்தார்.

1882ம் ஆண்டு தனது "முஸ்லிம் நேசன்" பத்திரிகையில் "அந்த அரபிகள் தங்களுடைய ஈமானுடைய உறுதியினுலும், சுத்த வீரத்தினுலும், மனவொற்றுமை யினுலும், விடா முயற்சியினுலுமே இவ்வளவு கீர்த்தியும் மேன்மையும் ஜயமும் பெற் ருர்கள். இப்படி இருக்க இக்காலத்திலே இலங்கையில் உள்ள இஸ்லாமானவர்கள்

தங்களுடைய முன்னோர்களாகிய அரபிகளைப் போல மன ஒற்றுமையும், முயற்சியும், இல்லாதிருக்கிறார்கள். ஏனைய பற்பல சாதியாரும் கல்வியிலும் சீர்திருத்தத்திலும் மேம்பட்டு வருதலைப் பார்த்தும் முஸ்லிம்கள் வாளாவிருப்பது மனவருத்தம் கொள்ளத் தக்கதாயிருக்கிறது. ஆகையால் இலங்கை முஸ்லிம்களெல்லோரும் ஒருமனப்பட்டு கல்விப் பயிற்சிக்குரிய கருமங்களில் முயற்சிப்பது கடமையாயிருக்கிறது.'' இவ்வாறு எழுதினர்.

இந்திய சேர் செய்யது அஹமது கானுக் கெதிரான சக்திகளின் வாரிசுகள் இலங்கையில் வர்த்தக ஆதிக்கம் பெற்றிருந்த காலமது. அம்மைப்பால் குத்துவது கூட இஸ்லாத்துக்கு விரோதமானது என்ற கொள்கை நிலவிய அப்போதைய சமுதாயத்தில் சித்தி லெவ்வை அவர்கள் செய்யவிழைந்த சீர்திருத்தங்கள் ஆதரவு பெறவில்லை.

இக்கால வேளையில் எகிப்தில் புரட்சியை ஏற்படுத்திய ''ஒருபிபாஷா'' தோழர்கள் நாடுகடத்தப்பட்டு இலங்கைக் கரையை அடைந்தார்கள் *11-1-1883 — 18-9-1901* வரை சுமார் *19* ஆண்டுகள் இவர்கள் இலங்கையில் வாழ்ந்தனர்.

எகிப்து நாடு இஸ்லாம் சமயத்தோடு நெருங்கிய தொடர்புடையதாகக் காணப் பட்டதனால் அந்நாட்டில் இருந்து வந்த அப்பெரியாரின் சொல்லை மறுத்துரைப்பதற்கு எவரும் துணியவில்லை. மேலும் தக்க பல தலைவர்கள் இல்லாத அவ்வேளை இத்தலைவரின் வருகை வரவேற்கப்பட்டது.

இச்சூழ்நிலையில் மனந்தளர்ந்திருந்த அறிஞர் சித்திலெவ்வையவர்கள் ஒருபிபாஷாவின் வருகையினால் சந்தோஷமடைந்தார். ஒருபிபாஷாவை அணுகி அவர் மூலம் முஸ்லிம்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தினை எடுத்துக் கூறுமாறு பணித்தார். எகிப்தில் மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களின் பலாபலன்களை நன்கறிந்திருந்த ஒருபிபாஷாவினால் சித்திலெவ்வை அவர்களுக்கு நன்கு உதவ முடிந்தது. முஸ்லிம்கள் ஒருபிபாஷாவின் சொல்லை செவியுற்றார்கள். ஆகவே இந்த நிலையில் ஒருபிபாஷாவின் வருகை இலங்கை முஸ்லிம் கல்வி வரலாற்றில் ஒரு திசை திருப்பத்தினை ஏற்படுத்திற்றெனலாம்.

காலவோட்டத்தில் அறிஞர் சித்திலெவ்வையவர்களின் தொடர் முயற்சிகள், *1891*ல் மருதானை ஜும்ஆ பள்ளிவாசலில் நிகழ்த்திய உருக்கமான சொற்பொழிவு மூலம் மருதானை ஸாஹிராக் கல்லூரியை **(Zahira Cohllage)** வாப்பிச்சி மரைக்காயரின் பொருளாதார உதவிமூலம் *1892*ல் பெற்றெடுக்கவும், கொழும்பு முஸ்லிம் கல்விச் சங்கத்தை உருவாக்கவும் உதவின.

கொழும்பு முஸ்லிம் கல்விச் சங்கத்தின் காரியதரிசியாக இருந்து அக்காலை கல்வியில் மிகுந்த அக்கறை காட்டியவரும், பிற்காலத்தில் முதல் முஸ்லிம் சிவில் சேவையாளருமான ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்களால் ஆங்கிலம், தமிழ் மொழிகளில் எழுதி புதினப்பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட கட்டுரைகளில் ஆங்கிலக் கல்வியின் அவசியம் பற்றியும், முஸ்லிம் கல்வி மகாநாடுகளின் அவசியம் பற்றியும் வற்புறுத்தப்பட்டது.

ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் பற்றி *1914*ம் ஆண்டு அக்டோபர் மாதம் **T. B.** ஜாயா அவர்கள் முஸ்லிம்களுக்கு தெளிவுபடுத்தினர். இவரின் உபதேசத்தின் பிரதிபலனாக *1918*ம் ஆண்டு '' இலங்கை முஸ்லிம் கல்விச் சபை '' ஏற்படுத்தப்பட்டது. இச்சபையின் நோக்கம் ஒரு பொது நிதியாகவும் முஸ்லிம்களின் மாபெரும் கல்வி மத்திய ஸ்தாபனமாகவும், இலங்கையிலுள்ள ஆங்கில தமிழ் பாடசாலைகளின் கல்வித் திட்டங்களை வகுப்பதாகவும், வேண்டிய இடங்களில் பாடசாலை நிறுவுவதாகவும், தகுந்தமாணவருக்கு சகாயப்பணம் அளிப்பதாகவும் எண்ணப்பட்டது.

ஆனுல் இந்நோக்கம் பரந்தளவில் செயற்படவில்லே. கொழும்பிலுள்ள ஒரு சில ஆரம்ப பாடசாலைகளை நடாத்தும் ஸ்தாபனமாகவே முடிந்தது.

முஸ்லிம்களின் மத்தியில் 1919ம் ஆண்டு பயிற்றப்பட்ட ஆசிரியராக **A. S.** அப்துல்காதர் என்பவர்தான் இருந்தார். இவர் ஸாஹிராவின் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவரது நியமனம் முஸ்லிம்களின் கல்விவளர்ச்சியின் ஒரு தூண்டுகோலாகவும் அமைந்தது. இவரது கல்வி முயற்கிகள் முஸ்லிம் சமுதாயத்தினைத்தட்டி எழுப்புவதாக அமைந்தன. மேலும் இக்காலத்தில் ஸாஹிராவில் இருந்து "கிறசென்ற்" **(Crescent)** எனும் பத்திரிகை கல்வி சம்பந்தமான கட்டுரைகளையும், தாங்கி வெளிவந்து கொண்டிருந்தது. பலர் இக்காலத்தில் இக்கல்லூரியில் பிள்ளைகளை சேர்க்கத் தொடங்கினர்.

இலங்கை முஸ்லிம்களின் கல்வி மகாநாடு 1924ம் ஆண்டு ஸாஹிராவில் கூடியது இதுவே இவ்வித மகாநாடு கூடிய முதற்தடவையாகும். இதில் முஸ்லிம் கல்வி விரிவாக்கம் பற்றி ஆராயப்பட்டது. இதனடிப்படையில் நாட்டில் ஸாஹிராவின் கிளைகள் திறப்பது பற்றியும், அரபு மொழியை இரண்டாம் மொழியாகப் போதிப்பது பற்றியும் உள்ள பிரச்சினைகள் ஆராயப்பட்டன.

1931ம் ஆண்டில் சர்வசன வாக்குரிமையின்பின், கல்வி அரசாங்கத்தின் விசேட கவனத்தைப் பெற்றது. இதனுல் சுய மொழிப் பாடசாலைகள் அதிகரிக்கப்பட்டன. கல்விச்சபையில் **A. R. A.** ருசீக், **T. B.** ஜாயா ஆகிய இருவரும் அங்கத்தவராக இருந்தனர். இவர்கள் முயற்சியின் பயனுக முஸ்லிம் பிள்ளைகளுக்கென பல சுயமொழிப் பாடசாலைகள் திறக்கப்பட்டன. மேலும் பல முஸ்லிம் ஆசிரியர்களும், மௌலவிமார்களும் நியமனம் பெறவும் வாய்ப்பேற்பட்டது.

"முஸ்லிம் மாணவர்கள் அதிகமாகக் காணப்படும் பாடசாலைகள் முஸ்லிம் பாடசாலைகளாக பெயர் மாற்றம் செய்யப்படல் வேண்டும்" என்ற கல்விப்பணிப்பாளரின் 1956ம் ஆண்டைய அறிக்கை மேலும் பல முஸ்லிம் பாடசாலைகளைப் பெறவும், ஆசிரிய மௌலவிமார் நியமனம் பெறவும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது.

உயர்தரக்கல்வி **(Higher Education)** பற்றிய பலமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை போதியளவு வெற்றியைக் கொடுக்கவில்லை. கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி ஆகிய இடங்களிற் காணப்பட்ட சில சாதக நிலைகளைப் பயன்படுத்தி ஒருசிலரே சர்வகலாசாலை நுழையும் வாய்ப்பேற்பட்டது.

கடந்த 24 வருடங்களாக மாறிமாறிவந்த அரசாங்கங்களின் சர்வகலாசாலை நுழைவுக் கொள்கை, ஆசிரிய நியமனக் கொள்கை, என்பன இலங்கை முஸ்லிம்களின் கல்வியிலும் அதிகரிப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. அண்மைக்கால வரலாற்றில் முஸ்லிம் சமூகத்தினரின் கல்வி வளர்ச்சிக்கு முன்னுள் கல்வி அமைச்சர் அல்-ஹாஜ் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் அவர்களின் சேவையினையும் முஸ்லிம் சமூகம் மறந்து விடுவதற்கில்லை.

சமயத்தின் தூய்மை கருதி மேனுட்டுக் கல்வியில் நாம் ஆரம்ப காலத்திலேயே பின்தங்கி விட்டோம். தற்போது கூட எம்மைப் பொறுத்தவரையில் நாம் கல்வித்துறையில் காட்டும் ஆர்வமும், வேகமும் போதாது என்றே கூறவேண்டும் மேலும் எமது கல்வி வளர்ச்சிக்கு அரசாங்கங்களின் பக்க துணையும் தேவையாகும். இனவிகிதாசாரப் பல்கலைக்கழக நுழைவுக் கொள்கை, எம் சமூகத்தைப் பொறுத்தவரை ஒரு நிவாரணமாக அமையும்.

# பொதுச்செயலாளர் அறிக்கை

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பிக்கின்றேன். எமது மஜ்லிஸின் இரண்டாவது ஆண்டுச் சஞ்சிகைக்கு கடந்த வருட செயற்பாட்டுச் சுருக்கத்தை அறிக்கையாகச் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

1975 ம் ஆண்டு யாழ் - வளாகத்திற்கு 3 முஸ்லிம் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். தொடர்ந்து 1976 ம் ஆண்டு அனுமதிபெற்ற முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவே 22 - 7 - 1976 இல் 34 அங்கத்தவர்களுடன் இம் முஸ்லிம் மஜ்லிஸ் ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது இம் மஜ்லிஸில் 94 உறுப்பினர்கள் உள்ளனர். இப் பல்கலைக் கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட முஸ்லிம்களில் ஏறக்குறைய 50 பேர் ஏனைய பல்கலைக் கழகங்களுக்கு மாற்றலாகிச் சென்றுள்ளனர். இது எமது மஜ்லிஸின் வளர்ச்சிக்குத் தடைக் கல்லாக அமைந்தது. இனிமேல் இப் பல்கலைக் கழகத்திற்கு முஸ்லிம் மாணவர்களை அனுமதிப் பதில்லை என்ற உயர் கல்வியமைச்சின் முடிவும் கவலையளிக்கிறது.

சென்ற வருடம் எமது மஜ்லிஸின் அங்கத்தவரான பாலமுனை யைச் சேர்ந்த சகோதரர் S. M. A. மஜீத் இவ்வுலகை விட்டுப் பிரிந்து எம்மையெல்லாம் ஆருத் துயரில் ஆழ்த்தியதை இங்கு நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளேன். அன்னார் இறைவனிடம் நற்பதவியடையப் பிரார்த்திக்கின்றேன்.

1979-ம் ஆண்டு இப் பல்கலைக் கழகத்திலிருந்து அரபு - இஸ்லா மிய நாகரிகத்துறையை அகற்றுவதற்கு வெளியிலிருந்து சதி முயற்சிகள் நடைபெற்றபோது மஜ்லிஸ் அதனை வன்மையாகக் கண்டித்து வெற்றி கண்டதுடன், இஸ்லாமிய நாகரிகப் பாடத்தில் சிறப்புப் பட்ட நெறியை மேற்கொள்ளத் தகுதியானோர் அதனைத் தொடருவதற்கு இன்னொரு பல்கலைக் கழகத்திற்கு மாற்றலாகிச் செல்லவேண்டிய நிலையை நீக்கி இங்கேயே தொடருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

முஸ்லிம் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்த நட வடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் முதல் கட்டமாகக்

கடந்த வருட க. பொ. த. ( உயர்தர ) மாணவர்களுக்காக வறக்காப்பொளை பாபுல் ஹஸன் மகா வித்தியாலயத்தில் இலவச கலந்துரையாடல் வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. இவற்றை நடாத்திய எமது மஜ்லிஸின் மூத்த அங்கத்தவர்கள் M. S. M. அஸ்லாஹ், A. உமர் லெப்பை ஆகியோருக்கு நன்றி நவிலக் கடமைப்பட்டுள்ளேன்.

அங்கத்தவர்களிடையே ஆத்மீக உணர்வை மேம்படுத்த *26 - 02 - 1980* இல் தப்லீக் ஜமாஅத்தின் உதவியுடன் வாராந்த நிகழ்ச்சியொன்று ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக ஆரம்பித்து வைக்கப்பட்டமை இங்கு குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும்.

நீண்ட காலமாக ஐவேளைத் தொழுகையை நிறைவேற்ற ஒரு தொழுகை அறையேனும் இல்லாதிருந்தது பெருங் குறையாகக் காணப்பட்டது. இதனை நாம் சுட்டிக் காட்டியபோது உடன் நடவடிக்கை எடுத்த உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களுக்கும், கலைப் பீடாதிபதியாகவிருந்த பேராசிரியர் S. இராஜரட்ணம் அவர்களுக்கும் மற்றும் நிர்வாகத்தினருக்கும் எமது நன்றிகள் என்றும் உரித்தானவை. மேலும் ஹிஜ்ரா விழா, மீலாத் கருத்தரங்கு, மௌலிது வைபவம் போன்ற கலாசார நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடாத்தப் பூரண ஒத்துழைப்பு நல்கிய உபவேந்தர், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், சக மாணவர்கள், நிர்வாகத்தினர் ஆகியோருக்கு எமது உளங் கனிந்த நன்றிகள்.

எமது ஹிஜ்ரா விழாவில் உப வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் உரையாற்றும்போது, "இங்கு பயிலும் முஸ்லிம் மாணவர்களுக்கெனத் தனிவிடுதியும், அதனுடன் இணைந்த கலாசார நிலையம் ஒன்றும் அமைக்க முஸ்லிம் தனவந்தர்கள் முன் வந்தால் அதற்கு வேண்டிய காணியை அரசிடமிருந்து பெற்றுத் தர நான் தயார்" எனக் குறிப்பிட்டதை இங்கு நினைவுகூர விரும்புகின்றேன். இது விடயமாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென அடுத்து வரும் மஜ்லிஸ் செயற்குழுவைக் கோருவதுடன் எதிர் காலத்தில் மஜ்லிஸ் மென்மேலும் சிறப்பாக இயங்க ஆசி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி.

**A.** முஹம்மது ஹுசைன்
( பொதுச் செயலாளர் )

*12-03-1980.*

# OUR MAJLIS MEMBERS

## Faculty of Arts

### COMMERCE

| Name | Year | ADDRESS |
|---|---|---|
| Abdul Thasool K. L. | 4th | Boundary Rd., Sammanthurai. |
| Ahamed M. T. | ,, | 'Villa De Lux' Main St., Sammanthurai. |
| Careem U.L.A. | ,, | 6, Main St., Maruthamunai, Kalmunai. |
| Hameed M. A. K. A. | ,, | Block - J. - East 114/101, Sammanthurai. |
| Hussain A. M. | ,, | 69, Moonkilady Rd., Sammanthurai - 2 |
| Siddeek M. Y. M. | ,, | Sainthamaruthu - 4. Kalmunai. |
| Sinnarasa S. | ,, | Hospital Rd., Sammanthurai. |
| Thasleem K. M. M. | ,, | 1st Division, Addalaichenai. |
| Farook H. M. | 3rd | 27, Mosque Rd, Kalmunai. |
| Gaffoor M. I. A. | ,, | A. V. V. Rd, Akkaraippattu. |
| Ibra Lebbe U. | ,, | 'Thahira Manzil'. Rawuthar Lane, Sammanthurai. |
| Jamaldeen A. L. | ,, | 397, Mosque Rd., Thaikkanagar, Addalaichenai. |
| Abdul Latheef M. I. | ,, | 1st Division, Addalaichanai |
| Meera Lebbe M. | ,, | Rawuthar Lane, Sammanthurai |
| Asanar A. | 2nd | 1st Cross St., Sammanthurai |
| Jamaldeen N. | ,, | 28, Small Mosque Rd., Akkaraippattu. |
| Julaina M. C. | ,, | 47, Navalar Rd., Jaffna. |
| Niyas N. M. | ,, | Koolangkulam, Chilawathurai. |
| Sahabdeen M. I. M. | ,, | Beech Rd Akkaraippattu. |
| Aboobucker A. M. | 1st | Erukkalampiddy - 3 |
| Ameerali Y. B. | ,, | 83, South Veethi. Akkarapp attu - 1 |
| Aroos M. U. M. | ,, | 57, Madawala Bazaar, Madawala. |
| Fuwad M. S. M. | ,, | 158/2, Pangollamada. Akurana. |
| Gaffoor U. L. A. | ,, | Udayar Veethi; Akkaraippattu |
| Ibunu Suhood M. A. C. | ,, | 213, Periya Maeli. Madu Kovil |
| Inul Jaleela M. I. | ,, | 137/1, Church Rd ; Muthur - 2 |
| Jamaldeen A. | ,, | 96A, 3rd Cross St., Ninthavur |
| Jameel M. A. M. | ,, | "Pin Kot" 439, Mavadi Veethi. Sainthamaruthu, Kalmunai |
| Jawahir M. S. | ,, | Erukkalampiddy - 1 |
| Kalilur Rahman M. C. | ,, | Matharasa Veethi. Akkaraippattu |
| Kamaldeen A. M. | ,, | Lake View. Maruthamunai - 2, Kalmunai |
| Mohamed Thamby A. | ,, | Masa Haj'yar Lane. Nintavur - 4 |
| Rafeek A. M. H. | ,, | 7, Sailan Rd., Kalmunai |
| Razzak M. A. A. | ,, | 112, Jinnah Rd . Akkaraippattu |
| Sadakatulla A. M. | ,, | Veppankulam. Potkerny |

### ARTS

| Name | Year | ADDRESS |
|---|---|---|
| Siyan M. M. | 4th | Lebbe St. MN/ Tharapuram |
| Mansoor A. C. A. M. | 3rd | "Maraiyakam" 5, Noordeen Lane, Sammanthurai |
| Sithy Jariya | ,, | Mosque Rd., Kahatagasdigiliya |

நவநாகரிக தையல் வேலைகளுடன்

குறித்த தவணையில்

பெற்றுக்கொள்ள

நாடுங்கள்

**அக்பர் ரெயிலறிங் மாட்**

இல 8, பெரியகடை

யாழ்ப்பாணம்.

Window glass
Belgium mirrors
and
Pictures

*Specialist in:*
PICTURE FRAMING

Phone: 7127

**JAZEEMA**
**PICTURE PALACE**

222, K. K. S. Road,
JAFFNA.

Branch:
JAZEEMAS
95, Stanley Road,
JAFFNA.

*புரியாணி*

*நூடில்ஸ்*

*சுவீட்ஸ்*

**சுபாஸ் மொடேர்ன் கபே**

யாழ்ப்பாணம்

***சுபாஸ் தயாரிப்புக்கள் தரமானவை***

*176, ஆஸ்பத்திரி வீதி*
*யாழ்ப்பாணம்*

With best compliments from :

ADDALAICHENAI

MULTIPURPOSE

CO - OPERATIVE SOCIETY LTIMITED

Phone : *514*

Visit

**ANES BROTHERS**

63, Hospital Road,
JAFFNA.

For

*Biscuits, sweets & Sundry goods*

**ANES & Co.**

*1*, New Market
Hospital Road, JAFFNA.

For

*Shop goods, Glass wares,*
*Aluminium wares, Fancy goods &*
*Presentation Articles*

**ANES METAL INDUSTRIES**

48, Muslim College Road,
Moor Street,
JAFFNA.

For

*'ANCHOR' Brand*
*Aluminium Hollowares*

மன்னாரில் முதல் தரமான
அழகிய தங்கப்பவுண்
வைர நகைகளுக்கு

**ஓ. கே. எஸ்**

**தங்கமாளிகை**

பிரபல நகை வியாபாரிகள்

பெரியகடை,
மன்னார்.

ஓடர் நகைகள்
குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

With best compliments from

ADDALAICHENAI
MULTIPURPOSE
CO-OPERATIVE SOCIETY LIMITED

Phone: 3[illegible]

Visit
ANES BROTHERS
63, Hospital Road,
JAFFNA.
For
[illegible] dry goods
ANES & Co.
[illegible] New Market
Hospital Road, JAFFNA.
For
[illegible]
ANES METAL INDUSTRIES
[illegible] Road
[illegible]
JAFFNA.
[illegible]

[illegible]

※ விவசாயிகளுக்குரிய
கிருமிநாசினிகள், உரவகைகள்

※ மாணவர்களுக்கான
உபகரணங்கள், உடைகள்

※ வீடமைப்பிற்குரிய
சிமெந்து, இரும்பு, அஸ்பெஸ்டஸ்

※ வாகனங்களுக்குரிய
டயர், ரியூப், உதிரிப்பாகங்கள்

※ நுகர்ச்சிப் பொருட்கள்

அனைத்திற்கும்

சம்மாந்துறைப்பற்று

**பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை**

**நாடுங்கள்**

- Gems Merchants & Exporters
- Travels and Tours
- Hittachi
- Air Condition

*Visit*

**S. M. ANVER HADJIAR CO. LTD.**

*Show Rooms:*

AL - MANAR,
302, GALLE ROAD,
BAMPALAPIYA.


சைவப்பிரகாச அச்சகம் வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். போன் : 356. J / 1486 - 80